ஜாதகம்
திருமணப் பொருத்தம், விசா, குடும்பப் பிரச்சனை, நோய்கள், பரிகாரங்கள் அனைத்துக்கும் இந்தியாவில் மதுரையில் இருந்து புகழ்பெற்ற வாக்கு வாணி என அழைக்கப்படும்
கலைவாணி பிரேமலதா
அவர்கள் SKYPE மூலம் தீர்வு சொல்லுவார்.
ஒருமுறை நேரில் பார்த்தால் வாழ்கையில் மாற்றம் காணுவீர்கள்.
தொடர்புகளுக்கு
SAVITHRIYAMMA - London
Tel: 02089044857
Mob: 07946544699 / 07405944815


# காலைக்கதிர்

உலகத் தமிழனின் உரிமைக் குரல்
பிரித்தானியா



எனக்கு நேரஞ் செரியில்ல...! - வடிவேலு 22

காதலர் தின ஸ்பெஷல் 4,5,6

காலைக்கதிர் வழங்கும் புதிய பகுதிகள்
மகளிர் கதிர்
சுட்டிக் கதிர்
மருத்துவக் கதிர்
திரைக்கதிர்
பிரிட்டன் செய்திகள்
உள்ளே...


வெள்ளிக்கிழமை பிப்ரவரி 10, 2011 www.kaalaikathir.info ●கதிர் 7 இதழ் 5 ●24 பக்கம் ஆகக்கூடிய விலை MRP UK 60p, Continent £1

## சிறிலங்காவின் கொலைக்களங்கள் ஆவணப்படத்திற்கு நோபல் சமாதானப் பரிசுக்குப் பரிந்துரை

சிறிலங்காவின் போர்க்குற்றங்களை அம்பலப் படுத்திய, சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட 'சிறிலங்காவின் கொலைக்களங்கள்' ஆவணப்படத்தை இந்த ஆண்டின் நோபல் சமா தானப் பரிசுக்கு தெரிவு செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பிரித்தானிய நாடாளுமன்ற உறப்பினர் சோபெய்ன் மக் டொனாவும்,

13ம் பக்கம் பார்க்க



வெள்ளிதோறும் காலைக்கதிர் படியுங்கள்

Happy Valentines
VALENTINES DINNER
14th February 2012
A Romantic Evening to impress your loved one with a mouth watering menu presented by
FUSHIA
Celebrate Valentine day with Welcome Drinks (House Champagne)
And a Perfect 4 course Meal (Select from the Menu) in the Award winnings
RESTAURANT FUSHIA
Booking in advance £40 per couple, at the door £45
Call today to Make your Reservation – 020 8680 8833
Every Party of 2 will get a Bottle of House Wine (Red or White)
3 Brighton Road, South Croydon, CR2 6EA
www.fushiauk.com info@fushiauk.com

Jay Brand
ஆஹா என்ன ருசி...
1 கிலோ சிவப்புபச்சை அரிசி 2 பாக்கெட்
£1.99 மட்டுமே!


LEGAL AID AVAILABLE
Community Legal Service
Criminal Defence Service
GH CORNISH LLP SOLICITORS
Newbury Park Station அருகாமையில்
- Crime - குற்றவியல்
- Immigration குடியியல் பிரச்சினை
- Family - குடும்பம்,
- divorce - விவாகரத்து
- Litigation
- Conveyancing
- Wills & Probate
- Mental Health
Lexcel Practice Management Standard Law Society Accredited
(We are located right next to Newbury Park Station on the Central Line, Bus No. 296 and 396)
One the Parade, Monarch Way, Ilford Essex IG 2 7HT
Tel : 020 8090 0800 Fax : 020 8090 1234
E-mail : help@ghcornish.com

0208 470 1615
Hurry Limited Seats Only
£425.00 London Colombo (RT)
BENSON Travels

VINCENT SOLICITORS
UK-இல் அகதி அந்தஸ்து தொடர்பான உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருப்பின் அல்லது நீண்ட காலமாக முடிவு இன்றி இருப்பின்
தற்போதைய HOME OFFICE-ன் புதிய சட்ட விதிகளுக்கிணங்க அனுபவம் மிக்க சட்டத்தரணிகளால் நிரந்தர வதிவிட உரிமை பெற்றுத் தரப்படும்.
Opening Days : Monday to Saturday 11-13, South Road, Southall UB1 1SU (ஹிமாலயா தியேட்டருக்கு எதிரில்)
07870 763 570 020 8574 0666
● 'Legacy visa வைத்திருப்போருக்கு uk citizenship எடுத்துத் தரப்படும். ● கைது செய்யப்படுதல், தடுத்து வைத்தல் மற்றும் நாடு கடத்தலுக்கு எதிராக உயர்நீதிமன்ற விண்ணப்பம், மற்றும் தடை உத்தரவு. ● Sponsorship (Uk,Srilanka) வசதிகள் பெற்றுத் தரப்படும்.

NEW BRANCH OPENED IN PECKHAM
nathan & co
Pawnbrokers, Jewellers & Goldsmiths
HALF PRICE PAWN LOANS, HIGH VALUES LOW RATES
BORROW £100
Nathan & Co charge £4.00 per month APR 52.7%
H&T Pawnbrokers charge £8.00 per month
Albermarle Bond charge £7.99 per month
61 Peckham High Street, Peckham, SE15 5EB Tel: 020 7701 7827
6 Tooting High Street, Tooting, SW17 ORG Tel: 020 3441 2202
www.nathan-co.co.uk
prices correct at 15.06.2011

மீண்டும் ஓர் புதிய அறிமுகம்.....!!
Niru Brand Tamarind Paste!!!
புளி விதைகள் முழுமையாக நீக்கப்பட்டது...
இலகுவான சமையல் தேவைகளுக்கு மிக உகந்தது...
நீர் விட்டுக்கரைக்க வேண்டிய அவசியமில்லை...
Niru BRAND
Quality you can taste



## பிரிட்டன்

## ஓட்டுநர் உரிமத்தை பெறுவதற்காக 92 முறை தேர்வு எழுதிய வாலிபர்!




இங்கிலாந்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் ஓட்டுநர் உரிமத்தை பெறுவதற்காக 92 முறை தேர்வு எழுதியுள்ளார். இங்கிலாந்தில் ஓட்டுநர் உரிமத்தை பெறுவதற்கு கடும் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இதற்கு முதலில் எழுத்துத் தேர்வில் வெற்றி பெற வேண்டும்,அதன் பிறகு தான் செயல்முறை தேர்வு வைக்கப்படும். இரண்டிலும் வெற்றி பெற்ற பிறகுதான் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும். இங்கிலாந்தின் லீசெஸ்டர் நகரில் வசிக்கும் வாலிபர் ஒருவர் கார் ஓட்டுநர் உரிமத்தை பெறுவதற்காக எழுத்துத் தேர்வில் பங்கேற்றார்.ஆனால் வெற்றி பெறவில்லை. மனம் தளராத வாலிபர் தொடர்ந்து தேர்வு எழுதினார். 28 வயதே ஆகும் வாலிபர் இதுவரை 92 முறை தேர்வு எழுதி விட்டார். ஆனால் ஒரு தேர்வில் கூட தேர்ச்சி பெறவில்லை.ஒரு மணி நேரம் நடக்கும் எழுத்து தேர்வில் சாலை விதிமுறைகள், விபத்தின் போது எப்படி செயல்படுவது, சாலையில் அசம்பாவிதம் நடந்தால் எப்படி செயல்படுவது போன்ற கேள்விகள் கேட்கப்படும்.இதுவரை 92 முறை எழுதிய தேர்வுக்கு மட்டும் கிட்டத்தட்ட 2 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய்க்கு (இந்திய ரூபாய்) மேல் செலவாகிவிட்டது. எனினும் விடாமுயற்சியுடன் அடுத்த தேர்வுக்கு தயாராகி வருகிறார்.




### இங்கிலாந்தில்


## கடும் பனிப்பொழிவு விமான சேவை ரத்து

இங்கிலாந்தில் கடும் பனிப்பொழிவு நிலவுவதால், ஹீட்த்ரு விமான நிலையத்தில் நேற்று 30 சதவீத விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. இதனால் பயணிகள் அவதிக்குள்ளாயினர். ஜனவரி மாதம் முடிந்த போதிலும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கடும் பனிப்பொழிவு நிலவுகிறது. வெப்பநிலை பூஜ்ஜியம் டிகிரிக்கும் கீழே சென்றுள்ளன. பனிப்பொழிவு காரணமாக இங்கிலாந்தில் சாலை, விமானப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் உள்ள உலகின் பரபரப்பான ஹீட்த்ரூ விமான நிலைய ஓடுபாதைகளில் 10 செ.மீ. உயரத்துக்கு பனி படிந்துள்ளது. இதனால், விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டது. தினமும் 1200 விமானங்கள் இயக்கப்படுகின்றன. இதில் 30 சதவீத விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. ஸ்டான்ஸ்டெட் விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது. ஐரோப்பிய நாடுகளிலும் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது.மோசமான வானிலை காரணமாக விமானங்களை திட்டமிட்டபடி இயக்க முடியாததற்கு வருந்துகிறோம். கூடிய விரைவில் நிலைமை சீராகும் என எதிர்பார்க்கிறோம் என விமான நிலைய தலைமை செயல் அதிகாரி நார்மண்ட் பொய்வின் தெரிவித்துள்ளார். ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸ் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சாலைகளிலும் பனி படர்ந்துள்ளதால் வாகன போக்குவரத்தும் தடைபட்டுள்ளது. வாகனங்கள் சாலையில் வரிசைகட்டி நிற்கின்றன. வாகனங்கள் இயங்குவதற்கு வசதியாக லண்டன் சாலைகளில் 10 ஆயிரம் டன் உப்பு கொட்டப்பட்டன.

## மூங்கிலில் செல்போன் தயாரித்து உலக சாதனை படைத்த பிரிட்டிஷ் மாணவன்!





பிரித்தானியாவின் Middlesex பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் மூங்கிலில் செல்போனைத் தயாரித்து உலக சாதனை படைத்துள்ளார்.23 வயதான குறித்த மாணவர் உலகின் முதலாவது மூங்கில் செல்போன் தயாரித்த பெருமையைப் பெற்றுள்ளார். Kieron-Scott Woodhouse என்ற பெயருடைய குறித்த மாணவர் கருத்துத் தெரிவிக்கையில், செல்போனை நூதனமாகத் தயாரிக்க விரும்பியதால் தான் இவ்வாறு செய்தேன்.இது சுற்றுச் சூழலுக்கு உகந்ததாகவும் உள்ளது.இதில் வழமையான செல்போன்களுக்கு இருக்கும் அனைத்து வசதிகளும் உள்ளன.இந்த வருட இறுதியில் சந்தைக்கு விடுவதற்கு முடிவு செய்துள்ளோம்.

## பத்து வயதான சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் புரிந்த பிரிட்டிஷ் இராணுவம்!



### பிரதமர் அதிர்ச்சி

பிரித்தானிய இராணுவத்தினர் மீது சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. 10 வயது மதிக்கத்தக்க சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டதாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட இரண்டு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். சிறுவன், சிறுமியின் ஆடைகளைக் களைந்து குற்றம் புரிந்ததாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.துஷ் பிரயோகக் காட்சிகளை இராணுவத்தினர் படமாக்கி தங்களது லப்ரொப்புகளில் தரவேற்றி உள்ளனர்.குறித்த சம்பவம் தொடர்பாக பிரிட்டிஷ் பிரதமரான டேவிட் கமரூன் கருத்துத் தெரிவிக்கையில்,இந்தச் சம்பவத்தால் ஆழ்ந்த அதிர்ச்சியடைந்துள்ளேன்.இந்த விடயம் உடனடியாக பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. என்றார்.மேலதிக புலன் விசாரணைகளை இராணுவப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆட்டிசம் உள்ள பெண்ணுடன் உறவு கொள்ள தடை!

### இங்கிலாந்து நீதிமன்றம் தீர்ப்பு!!

உடலுறவு கொள்வதற்கு சம்மதம் தெரிவிக்கக் கூட முடியாத நிலையில், ஆட்டிசம் குறைபாடுள்ள 29 வயது பெண் உறவு கொள்ள இங்கிலாந்து நீதிமன்றம் தடைவிதித்து உத்தரவிட்டுள்ளது. இங்கிலாந்தைச் சேர்ந்த அந்த 29 வயது பெண்ணுக்கு ஆட்டிசம் குறைபாடுள்ளது. இந்த குறைபாடுள்ளவர்களுக்கு மூளையின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு தன்னைச் சுற்றி நடப்பது தெரியாமல் தனக்கென ஒரு உலகத்தில் வாழ்வார்கள். அத்தகைய பாதிப்புள்ள அந்த பெண் யாருடனும் உடலுறவு கொள்ள தடை விதித்து இங்கிலாந்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது குறித்து நீதிபதி ஹெட்லி தனது தீர்ப்பில் கூறியிருப்பதாவது, அந்த பெண்ணின் ஐக்யூ 64 தான். உறவு வேண்டாம் என்று சொல்லக் கூட அவருக்குத் தெரியாது. அதனால் தான் உடலுறவுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.அந்த பெண்ணை பாதுகாக்கவேண்டியது அவசியம். அந்த பெண்ணால் எந்த ஒரு முடிவையும் தன்னிச்சையாக எடுக்க முடியாததால் தான் நீதிமன்றம் இந்த தீர்ப்பளிக்கிறது.அந்த பெண் யாருடனும் உறவு வைக்கக் கூடாது. அவருடன் யாராவது உறவு கொண்டால் அவர் மீது பாலியல் பலாத்கார வழக்குப் பதிவு செய்யப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே தெரிந்துகொள்ள முடியாத பெண்ணைக் காக்கும் பொருட்டு தான் இந்த தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில்

## உணவு விடுதிபோல் செயல்பட்ட விபச்சார விடுதி!

பிரிட்டனில் பிரபலமான உணவு விடுதி ஒன்று உள்ளது. இவ்விடுதியின் பின்புறம் சட்டவிரோதமான முறையில் விபச்சாரம் நிகழ்வதாக ஆதாரத்துடன் செய்தி வெளியாகியுள்ளது. விடுதியின் முன்புறம் விடுதி போல் காணப்பட்டாலும், பின்புறம் ரகசிய வாசல் உள்ளது. அங்கு படுக்கையறைகளும் பாலியல் சம்பந்தமான பொருட்களும் உள்ளன. இதன் பின்னால் சிறையில் கைதிகளுக்கு தண்டனை வழங்கப்படுவது போன்ற பிரம்மாண்ட அமைப்புகளும் உள்ளன..

இரவு நேரத்தில் இந்த விடுதியில் இருந்து வரும் சத்தம் காரணமாக அக்கம் பக்கத்தினர் கொடுத்த புகாரின் அடிப்படையில் இந்த விடுதி போலீசாரால் கையகப்படுத்தப்பட்டது.





கடந்த சில மாதங்களுக்கு முன்னர் லண்டனில் உள்ள தனது மாமாவின் கடையில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டு தற்போது படுத்த படுக்கையாக இருக்கும் ஐந்தே வயதான துஷா என்கிற சிறுமியின் வழக்கில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

துப்பாக்கிச் சூடு நடந்த அன்று C.C.K.M கமராவில் பதிவான திகில் காட்சிகள் நேற்றைய தினம் நீதிமன்றில் போட்டுக் காண்பிக்கப்பட்டன.

குறித்த சிறுமியின் 34 வயது தாயாரான சர்மிளா கமலேஸ்வரன் நேற்றைய தினம் நீதிமன்றில் காண்பிக்கப்பட்ட நான்கு கமராக்களில் பதிவான கோரமான காட்சிகளைப் பார்த்துவிட்டு கதறி அழுதார்.

21 வயதான Nathaniel Grant ,19 வயதுகளை உடைய Kazeem Kolawole , Anthony McCalla ஆகியோர் குறித்த துப்பாக்கிச் சூட்டில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

## கடினப் பயிற்சிக்குப் பின்பு விமானியான இளவரசர் ஹாரி

இங்கிலாந்தின் இளவரசர் ஹாரி 18 மாதங்கள் கடினப் பயிற்சிக்குப் பிறகு ஹெலிகாப்டர் விமானியாக தகுதி பெற்றுள்ளார்.

Ipswich என்ற இராணுவத்தளத்தில் நடந்த விழாவில் இளவரசர் ஹாரிக்கு மிகச் சிறந்த துணை விமானி மற்றும் துப்பாக்கி வீரர் என்ற விருதுகள் வழங்கப்பட்டது. இவருடன் இவ்விழாவில் இன்னும் 20 பேர் துணை விமானி விருதைப் பெற்றுள்ளனர்.

இதுகுறித்து ஹாரி கூறுகையில், உலகின் மிக நவீனமான போர் விமானத்தில் பயிற்சி எடுத்திருப்பதால், மீண்டும் ஆப்கானிஸ்தானுக்கு



சென்று தீவிரவாத ஒழிப்பில் ஈடுபட வேண்டும் என்று இளமைத்துடிப்புடன் பேசினார்.

இவர் 20072008ம் ஆண்டில் ஹெல்மாண்டு மாநிலத்தில் தலிபான் குடியிருப்புகளின் மீது விமானத்தில் பறந்து கொண்டு குண்டுகளை வீசும், போர் விமான முன்னணி ஆணையராளகவுதட சேவையாற்றியுள்ளார். ஆனால் இவரைப் பற்றி பத்திரிகைகள் விமர்சித்துப் பேசியதால் இவர் அதை தொடரமுடியாமல் போனது.

அப்பாச்சி பிரிவின் தளபதியான கர்னல் நீல் மாஸ் கூறுகையில், இவர்களுக்கு பயிற்சி பெரும் சவாலாக இருந்தது என்றும், ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களின் வீரமும் திறமையும் மதிப்பிடப்பட்டது எனவும், உலகின் மிக நவீனமாக போர் விமானத்தை ஓட்டுவதற்கு இவர்கள் பயிற்சி எடுத்துள்ளனர் எனவும் தெரிவித்தார். இந்தப் பயிற்சிக்கு கடின உழைப்பும் மனத்துணிவும் தேவை என்பதை விளக்கிப் பேசினார்.

## வைரவிழா கொண்டாடிய பிரிட்டன் ராணியின் வாழ்த்துச் செய்தி

பிரிட்டனின் எலிசபெத் ராணி மகுடம் சூட்டி அறுபதாண்டுகள் நிறைவுபெற்ற நிலையில் அவரது பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து அறிக்கை ஒன்று வெளியாகியுள்ளது.

எலிசபெத் ராணியின் அரண்னமையில் இருந்து வந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது: நீங்கள் எனக்கும் இளவரசர் ஃபிலிப்புக்கும் அளித்து வரும் அற்புதமான ஆதரவுக்கும் ஊக்கத்திற்கும் நன்றி, இந்த வைரவிழாவிற்காக குவியும் உங்களின் வாழ்த்து மடல்களே நீங்கள் எங்கள் மீது வைத்திருக்கும் அன்பை எடுத்து கூறுகின்றன.

இந்தச் சிறப்பான வருடத்தில் நான் உங்களின் சேவைக்காக என்னைப் புதிதாக அர்ப்பணிக்கிறேன் என்றார். மேலும் அவர் கூறுகையில் நாடுகள் ஒன்றாக இணைந்திருப்பதன் முழு பலத்தை என் ஆட்சிக்காலம் முழுக்க உணர்ந்திருக்கிறேன். இதனை பிரிட்டனிலும் காமன்வெத் நாடுகளிலும் பயணம் செய்யும் போது பல வடிவங்களில் பார்த்திருக்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

டவுன் ஹாலில் உள்ள கண்காட்சியில் பேசிய மேயர் கோலின் சாம்சன் இந்த நாட்டுக்கும் காமன்வெல்த் நாடுகளுக்கும் அறுபதாண்டுகளாக அரசியார் அபரிமிதமான சேவையாற்றி இருப்பதாகப் புகழ்த்துரைத்தார். மேலும் அங்கு நடந்த கண்காட்சியை அரசியார் பார்வையிட்டார்.

அதில் மேற்கு நார்ஃபோக் அரண்மனையின் நகைகளும் இடம்பெற்றிருந்தன. நார்ஃபோர் நகரத்தின் அரும்பொருட்கள் அக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அதில் அவரது தந்தையார் சாண்டிங்காம் அரண்மனையில் தான் பிறந்தார் என்பதற்கான பிறப்புச் சான்றிதழும் இடம்பெற்றிருந்தது. மேலும் அக்கண்காட்சியை பார்வையிட்ட அரசியாருக்கு மேயர் பல பரிசுப்பொருட்களை வழங்கினார்.

பின்பு அரசியார் டெர்சிங்காமில் உள்ள பாலர் பள்ளிக்கூடத்துக்குச் சென்றார்.அங்கு அவரின் இரண்டு புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன. அதில் ஒன்றில் அவர் தனது கணவரோடு இராஜ உடையில் காட்சியளித்தார். இன்னொன்றில் அவரது தாயாரான பேரரசி விக்டோரியாவின் நினைவுச்



சின்னத்தின் அருகே நிற்பது போல காட்சியளித்தார்.

பேரரசி விக்டோரியாவிற்கு அடுத்தப்படியாக அறுபதாண்டு வைரவிழா கண்ட பெருமை எலிசபெத் அரசியை மட்டுமே சேரும் என்பது குறிப்பிடத்தக்கது. அரசியார் பட்டமேற்ற நாளாக 1952 ம் ஆண்டின் பிப்ரவரி மாதம் 6 திகதி நினைவுகூரப்படுகிறது. மேலும் இவர் கென்யாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தபோது இவரது அன்புத் தந்தையார் 6ம் ஜார்ஜ் உறக்கத்தில் உயிர் துறந்தார்.

தந்தையாரின் மரணத்தால் மனம் உடைந்து பிரிட்டன் திரும்பிய எலிசபெத் அரசியாக தாய் நாட்டில் காலடி எடுத்து வைத்தார். பிரதமர் டேவிட் கேமரூன், அரசியாரின் அறுபதாண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அரசியாரை வாழ்த்தினார். இவர் இந்நாள் அரசியாரின் அதியற்புதச் சேவைக்கு நான் நன்றி தெரிவிக்கும் இனிய நாள் என்று கூறினார்.

மேலும் அரசியார் அனுபவம், கௌரவம் மற்றும் அதிகாரம் ஆகியவற்றோடு நமது நாட்டையும் காமன்வெல்த் நாடுகளையும் ஒன்றிணைத்து அறுபது ஆண்டுகள் அழைத்து வந்துள்ளார். ஆகவே இந்த நன்னாளில் நாம் அவருக்கு நன்றி மலர்களை காணிக்கையாக்கி மகிழ்வோம் என்றும் அவர் கூறினார்.


**Well establish hotel situated out of London is looking for investors for its developments.**

**30% of Annual income/dividends are guaranteed plus other benefits Dividends will be paid quarterly.**

**Investment is starting from £1,500.00 to maximum of £6,000.00 shares are secured with freehold.**

Please contact
**Mr. Ratnam**
**07440415953**



# அழகாய் இருந்தா மட்டும் போதாது புத்திசாலித்தனம் அவசியம்!

பெண்களுக்கு பிடித்த அம்சங்கள் இன்னதுதான் என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது. முக்கியமாக ஆண்களிடம் எந்த அம்சம் பிடிக்கும். எதுமாதிரி பெண்கள் எதிர்பார்ப்பார்கள் என்று எவராலும் எளிதில் தெரிந்து கொள்ள முடியாது. ஆண்களின் எந்த அம்சம் கவர்ச்சிகரமானதாக இருக்கும் என்று பெண்களைக் கேட்டால் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாக பதிலளிப்பார்கள். எதுமாதிரியான அம்சங்கள் பெண்களை கவர்கின்றன என்று சராசரியாக பெண்களுக்கு பிடித்த அம்சங்கள் இங்கே பட்டியலிடப்பட்டுள்ளன.

ஒரு பெண்ணின் கவர்ச்சி என்ன என்பதற்கு பல ஆண்களின் பதில் ஒரே வரியில், ஒரே மாதிரியான பதிலாகயிருந்தாலும், ஆண்களின் கவர்ச்சி என்ன என்பதை ஒரே வரியில் பதிலளிக்க இயலாது, ஏனென்றால் ஆண்களின் கவர்ச்சியில் பல வகைகள் உள்ளன.

## நிறம் ஒரு பொருட்டல்ல

ஒரு ஆண் சிவந்த மேனியாக இருக்க வேண்டும் என பெரும்பாலான பெண்கள் எதிர் பார்ப்பதில்லை. ஒரு ஆணின் வசீகரம் அவனின் நிறத்தில் அல்ல என்பதே பெண்களின் கருத்து. அதனால்தான் அநேகம் பெண்கள் கருப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு என்று பாட ஆரம்பித்துள்ளனர். எனவே கலராய் இருந்தால் மட்டுமே பெண்களை கவர்ந்து விடலாம் என்று நினைத்திருக்கும் ஆண்களே கவனம் தேவை.



## பொருத்தமான ஆடை

பொதுவாக பெண்கள் தங்கள் உடை அலங்காரத்திற்கு அதிக அக்கறை எடுத்துக் கொள்வார்கள், அதனால் அதே மாதிரி அம்சம் ஆணிடமும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். பேண்ட்டின் நிறத்திற்கு கொஞ்சம் கூட சம்பந்தமே இல்லாத கலரில் ஷர்ட் அணிவது, சரியான அளவில் ஷர்ட் போடாமல், தொள தொள என நீளமான ஷர்ட் அணிவது, போன்றவை

# உயிரைத் தீண்டும் உன்னத காதல் கடிதங்கள்!

காதல் என்று வந்து விட்டால் கடிதம் இல்லாமலா, கவிதை இல்லாமலா...? தகவல் தொழில் நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியினால் காதலர்கள் தங்களின் அன்பை பரிமாறிக்கொள்ள எண்ணற்ற வசதிகள் வந்துவிட்டன. இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரை கடிதங்களும், வாழ்த்து அட்டைகளும் காதலர்கள் அன்பை பரிமாறும் வழியாக இருந்தது. தொலைபேசி, மொபைப்போன், இ மெயில் என பல்வேறு வசதிகள் வந்த பின்னர் கடிதம் எழுதும் பழக்கம் வழக்கொழிந்து விட்டது எனலாம்.

உயிரில் இருந்து உருவான வார்த்தைகளை எடுத்து அதை மையில் கலந்து காகிதத்தில் வடிக்கும் கடிதத்திற்கு உள்ள மகத்துவமே தனிதான். அதை கையில் எடுக்கும் போதே ரத்தத்தின் ஒவ்வொரு அணுக்களிலும் உற்சாகம் ஊற்றெடுக்கும். அதேபோல் ஒரு காதல் கடிதத்தை இந்த காதலர் தினத்தில் உங்கள் பிரியமானவர்களுக்கு பரிசளியுங்கள். அப்புறம் பாருங்கள் உங்களுடையவர்க அடையும் மகிழ்ச்சியை.

## உயிர் வரை ஊடுருவும்

நேசத்திற்குரியவரை கண்கள் கண்டதும் மூளையின் நரம்புகளில் ரசாயனமாற்றம். இதயத்தில் தெறிக்கும் மின்னல் காதலின் வருகையை உணர்த்திவிடும். முதல் நாள் பார்த்த இடத்தில் மறுநாளும் சந்திக்க மனம் ஏங்கும், கால்கள் தானகவே அந்த இடத்தை நோக்கி நகரும். இது காதல் ஏற்படுத்தும் மாற்றங்கள். எனவே நம்முடைய காதலை எங்கு எவ்விதம் தெரிவிப்பது என்று மனம் ஏங்கித் தவிக்கும். தூக்கத்தை தொலைத்த ராத்திரிகள், உணவை தவிர்த்த பொழுதுகள் என காலம் கடத்துவதை விட மனதை தொடும் வகையில் கடிதம் எழுதி அதை கவித்துவமாக பரிசளிக்கலாம். காதல் உணர்வுகளுடன் கவித்துவமாய் வடித்த அந்த கடிதம் நிச்சயம் உங்களவரின் உயிர் வரை ஊடுருவும்.

## ஸ்பெஷல் வார்த்தைகள்

காதல் கடிதம் எழுதுவது சாதரண விசயமல்ல. நலம் நலமறிய ஆவல்ஞ் என்ற சாதாரண வார்தைகளை இட்டு நிரப்பி தருவதை விட காதலை உணர்த்தும் வகையில் ஸ்பெசலான வார்த்தைகளைக் கொண்டு எழுதலாம்.

கடிதத்தில் முதலில் சந்தித்த இடம், ஈர்த்த விசயங்கள், போன்ற காதல் நினைவுகளை டச்சிங்காக எழுதலாம். அதே சமயம் அதீத அலங்கார வார்த்தைகள் போட்டு படிப்பவர்களை குழப்ப வேண்டாம். எனவே சிறப்பான வார்த்தைகளை தேர்ந்தெடுத்து கடிதத்தை எழுதுங்கள் அது காதலுக்கு ஒகே சொல்ல வைக்கும்.

## உயிர் வரை தொடும்

கடிதத்தில் தொடக்கம் எவ்விதம் காதல் வார்த்தைகள் நிரம்பியதாய் இருக்கவேண்டுமோ அதோபோல் முடிவும் காதல் உணர்வுகள் நிரம்பியதாக இருக்கவேண்டும்.

கடிதத்தின் உரையின் மீது சிவப்பு ரோஜாவை ஒட்டி, சிவப்பு நிற ரிப்பனால் இதய வடிவத்தில் கட்டி பார்க்கும் போதே ஒரு ஈர்ப்பினை ஏற்படுத்தலாம். இத்தகைய கடிதங்கள் மனங்கவர்ந்தவரின் இதயத்தை ஊடுருவும்.





பெண்களுக்கு பிடிப்பதில்லை. இடத்திற்கு தகுந்தார் போல் உடை அணிய வேண்டும். சுத்தமான, நல்ல கலர் சென்ஸுடன், ஸ்மார்ட்டாக உடை அணிந்தால் பெண்களின் மனதில் சீக்கிரமாக இடம் பிடித்து விடலாம்.

### கண்களைப் பார்க்கும் ஆண்கள்

முதன் முறையாக ஒரு பெண்ணிடம் பேசும்போது, லொட லொட வென சொந்த கதை, சோக கதை எல்லாம் பேசக்கூடாது. அதே சமயம் அந்த பெண்ணிடமும் அவளைபற்றின சொந்த விஷயங்களை தேவையில்லாமல் கேட்க கூடாது. அவளுக்கும் பேச சந்தர்ப்பம் கொடுத்து, அவள் பேசும் போது அவளது கண்களை கூர்ந்து கவனிக்க வேண்டும். முகத்தைப் பார்த்துப் பேசும் ஆண்களையே அநேக பெண்கள் விரும்புகின்றனராம்.

### நம்பிக்கை, நேர்மை

எடுத்தவுடனே பொய் சொல்லும் ஆண்களை எந்த பெண்ணுக்கும் பிடிக்காதாம். நேர்மையுடனும், நம்பிக்கையூட்டும் வகையிலும் பேசும் ஆண்களையே அதிகம் விரும்புகின்றனர்.

### நகைச்சுவை உணர்வு

உர் என்ற முகத்துடன், நான் இப்படித்தான் என்று இறுக்கம் காட்டும் ஆண்களை எந்த பெண்ணும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. நகைச்சுவை உணர்வும், அறிவுப்பூர்வமான பேச்சும் உள்ள ஆண்களையே பெண்கள் விரும்புகின்றனர்.


### ஆண்மைக்கு மீசை அழகு

ஆணின் நிறத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காத பெண்கள் கூட, அவர்களின் மீசைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மீசை ஒரு ஆணுக்கு அழகு, கம்பீரம் என்பது அவர்கள் கருத்து. மீசையை பிடிக்கும் பல பெண்களுக்கு ஏனோ தாடி பிடிப்பதில்லை. காரணம் நம்மூர் ஆண்களுக்கு தாடி வளர்த்தால் அதை ஒழுங்காக பராமரிக்கத் தெரிவதில்லை என்பதுதான்.



### நட்பாய் இருங்க காதல் கனியும்

எந்த பெண்ணுமே நட்பு ரீதியான பழக்கத்தையே விரும்புகின்றனராம். ஏனெனில் எந்த ஒரு பிரச்சினை என்றாலும் நட்பு என்றால் எளிதில் பகிர்ந்து கொள்ளலாம் என்பது அவர்களின் கருத்து. எனவே பெண்களிடம் முதலில் நல்ல நட்பை ஏற்படுத்திக்கொண்டால் அவர்களின் மனதில் உங்கள் மீது தானாய் காதல் கனியும் இவை அனைத்தும் பல பெண்களின் சில சில எதிர்பார்ப்புகளே, இந்த எதிர்பார்ப்புகளும், ஆசைகளும் பெண்ணுக்கு பெண் வேறுபடும்.



# இதயத்தை சொல்லும் ஆர்கிட் மலர்கள்

மரியாதை நிமித்தமாகவும், அன்பை வெளிப்படுத்துவதாகவும் மலர்களைக் கொடுப்பது உலகெங்கும் ஆண்டாண்டு கால வழக்கமாக உள்ளது. பிறந்தநாள், திருமணநாள், என விசேச தினங்களிலும், பரிசாகவும் கொடுக்கும் மலர்களின் வண்ணம் ஒவ்வொன்றுக்கும் ஓர் அர்த்தம் உண்டு. அது நம் எண்ணங்களை வெளிப்படுத்துபவை. பண்டைய காலத்தில் மனிதர்களின் உணர்வுகளை மலர்களின் மூலமே வெளிப்படுத்தியுள்ளனர். பூக்களின் அர்த்தம் பற்றி ஃப்ளோரியா கிராபி மூலம் தெரிந்து கொள்ளலாம். பலவிதமான மலர்கள் அதைப் பெறுபவர் களுக்கு உரிய ஒரு தனியான செய்தியையும் வெளிப்படுத்துகின்றன.

### நேசத்தை உணர்த்தும் மலர்கள்

ரோஜா மலர்கள், `நான் உன்னை விரும்புகிறேன் என்பதைத் தெரிந்துகொள்' என்பதை வெளிப்படுகிறது. ஆர்க் கிட் மலர்கள், `நீ என் இதயத்தில் இருக்கிறாய்' என்றும், ஸ்னேப் டிராகன்ஸ், `நான் உன்னை விரும்புகிறேன்' என்றும் நம்முடைய எண்ணங்களை மலர்கள் வெளிப்படுத்துகின்றன. ப்ளூ பெல் மலர்கள், காதலுக்கு என்றும் முடிவில்லை என்று உணர்த்துகின்றன. காக்டஸ் மலர்கள் காதலையும், அபரிமிதமான நேசத்தையும் உணர்த்துகின்றன. டூலிப் மலர்கள், `நான் உன்னை விரும்புவதை அறிவிக்கிறேன்' என்றும் சொல்கின்றன.

### அழகாய் இருக்கிறாய்

கார்னேஷன் பூக்கள், `நீ அழகாக இருக்கிறாய், உன்னைப் பார்த்து நான் பெருமிதம் அடைகிறேன்' என்றும் தெரிவிக்கின்றன. டெய்ஸி மலர்கள் வெகுளித்தனத்தையும், அழகை ஆராதிப்பதையும் குறிக்கிறது. செம்பருத்தி பரிசளித்தால் உன்னைப் போல் உலகில் பேரழகி யாரும் இல்லை என்று அர்த்தமாம்.

### ரொம்ப நல்லவன்

டபோடில் பூக்கள், `நீ தைரியசாலி என்பதோடு, நல்லவன்' என்பதை குறிக்கிறது. சாமந்தி, `நான் உனக்கு உண்மையாக இருப்பேன்' என்பதையும், கிளாடியோலி, `உன் குணத்தைக் கண்டு நான் பெருமிதம் அடைகிறேன்' என்றும், ஐரிசஸ், `என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் அனுப்புகிறேன்' என்றும், சூரியகாந்திப் பூக்கள், `என் எண்ணங்கள் தூய்மையானவை' என்றும், பேர்ட் ஆப் பாரடைஸ் மலர்கள் திருவிழா, கொண்டாட்டம் ஆகியவற்றை உணர்த்துகின்றன. பட்டர்ஃப்ளை மலர்கள் பரிசளித்தால் என்னை விட்டு விலகிப்போ என்று அர்த்தமாம்.


### காதலுக்கு மரியாதை தரும் சிவப்பு

செந்நிற மலர்கள் காதல், மரியாதை, நேசம், தைரியம் ஆகியவற்றையும், இளஞ் சிவப்பு வண்ண மலர்கள் முழுமையான மகிழ்ச்சி, நளினம், நன்றியுணர்வு அல்லது பாராட்டு ஆகியவற்றோடு நேசத்துக்கான விண்ணப்பமாகவும் கருதப்படுகின்றன. கருஞ் சிவப்பு வண்ணம், நேசத்தோடு கூடிய நம்பிக்கை, கற்பு ஆகியவற்றை அறிவிக்கிறது.



### வெள்ளை உள்ளம்

பீச் அல்லது பவழ வண்ண மலர்கள் உற்சாகம், ஆசை, மகிழ்ச்சியான அடக்கம், வெட்கம் ஆகியவற்றையும் வெளிப்படுத்துகின்றன. வெள்ளைநிறப் பூக்கள், கள்ளங்கபடமற்ற தன்மை, தூய்மை, ரகசியம் அல்லது மவுனம் ஆகியவற்றையும் வெளிப்படுத்துகின்றன.




காதல் ஸ்பெஷல்

# "காதலர் தினம்"

## சுவையான வரலாற்று கதைகள்

உலக காதலர்கள் கொண்டாடும் காதலர் தினம் குறித்து பல்வேறு சுவையான, தகவல்கள் கூறப்படுகின்றன. காலம் காலமாய் கூறப்பட்டு வரும் காதலர்தினக் கதைகள் தியாகம் நிறைந்தவை. அந்த கதைகளை காதலர் தினத்திற்காக பகிர்ந்து கொள்கிறோம்.

### வேலண்டைன்ஸ் டே

வேலண்டைன்ஸ் டே என்று உலகமெங்கும் கொண்டாடப்படும் காதலத் தினம் வேலண்டைன் பாதிரியாரின் நினைவாக கொண்டாடப்படுகிறது என்பது நம்பிக்கை. கி.பி 270 ம் ஆண்டு ரோம பேரரசரான இரண்டாம் கிளாடியுஸ் காலத்தில் ஆண்கள் திருமணம் செய்து கொள்ள தடை இருந்தது. திருமணம் செய்து கொண்டால் ஆண்களுடைய வீரம் குறைந்து விடும் என்பது அரசரின் நம்பிக்கை. இதனால் பெண்களை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது என்ற தடை விதித்திருந்தார் ரோமப் பேரரசர்.

திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையை என்ஜாய் செய்யவேண்டும் என்று துடித்தவர்களுக்கு உதவி செய்து அவர்களுக்கு அரச கட்டளையை மீறி திருமணம் நடத்திவைத்தார் வேலண்டைன். இந்த உதவிக்கு மன்னன் மரணதண்டனையை பரிசளித்தார். இரண்டு மணங்களை திருமண பந்தத்தில் இணைத்து வைத்த பாதிரியார் வேலண்டைன் கொல்லப்பட்ட நாள் பிப்ரவரி 14. வேலண்டைன்ஸ் டே குறித்து உலவும் கதைகளில் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொண்டுள்ள கதை இது.

### சீனர்களின் காதலர் தினம்

சீனர்களின் காதலர் தின கதை சுவாரஸ்யமானது. சுவர்க்கத்தின் சக்கரவர்த்திக்கு ஏழு மகள்கள். ஏழாவது மகளான ஸிநூ அழகிகளுக்கெல்லாம் அழகி ! பேரழகி. ஒரு நாள் ஏழு சகோதரிகளும் நதியில் குளித்துக் கொண்டிருந்தார்கள். நு வூ எனும் இளைஞன் அவர்களைப் பார்த்தான். குறும்புத் தனமாக எல்லாருடைய ஆடைகளையும் எடுத்துப் போய்விட்டான். ஆடைகள் இல்லாமல் வெளியே வரமுடியாமல் சகோதரிகள் தவித்தனர். கடைசியில் தங்கள் கடைசித் தங்கையான ஸி நூ வை அவனிடம் சென்று ஆடை வாங்கி வர அனுப்பினார்கள். ஈரம் சொட்டச் சொட்ட எழிலுடன் வந்து நின்ற அவளைப் பார்த்தவுடன், நுவூ காதல் கொண்டான். இந்த காதல் திருமணத்தில் முடிந்தது. விஷயம் தெரிந்த மன்னர் இருவரையும் பிரித்து வானத்தின் இரண்டு மூலைகளில் கொண்டு போய் விட்டார். அவர்கள் ஏழாவது மாதத்தின், ஏழாவது நாளில் மட்டும் தான் சந்தித்துக் கொள்ள முடியும். அந்த நாள் தான் சீனர்களின் காதலர் தினம்.

### கிருஸ்துவ விழா

பண்டைய காலத்தில் ரோமில் கொண்டாடப்பட்ட ஒரு விழா லூப்பர் கேலியா. இது பிப்ரவரி 13 முதல் பிப்ரவரி 15 வரை கொண்டாடப்படும். வாழ்க்கை வளமாக அமைய கடவுளை வேண்டும் விழா இது. ரோம் நகரில் ஆடல் பாடல் என அமர்க்களப்படும். இதனை கி.பி 490 களிலி போப் கெலேஷியஸ் தடை செய்தார். ஆனாலும் மக்கள் இதனை விடவில்லை. இந்த விழாவின் வீரியத்தைக் குறைக்கவும், ஒரு கிருஸ்தவ விழாவின் மூலம் செயலிழக்கச்செய்யவும் போப் தீர்மானித்தார். எனவேதான் பிப்ரவரி 14ம் தேதியை புனித வேலண்டைன்நாள் என அறிவித்தார் என்றும் பலரால் நம்பப்படுகிறது.

### பிரியமானவர்களுக்கு பரிசு

கிழக்கு இங்கிலாந்தின் நார்போக் பகுதியில் வேலண்டைன்ஸ் தினத்தை சிறப்பாக கொண்டாடுகின்றனர். கிருஸ்துமஸ் காலத்தில் கிருஸ்துமஸ் தாத்தா வீடு களில் பரிசு வழங்குவதைப் போல பிரியத் திற்குரியவர்களின் பின்வாசல் கதவைத் தட்டி இனிப்புகளை வைத்துச் செல்லும் வழக்கம் இருந்துள்ளது. இவ்வாறு இனிப்புகளை வைப்பவர்கள் ஜேக் என்று அழைக்கப்பட்டனர்.

### பாய் ஃப்ரண்ட், கேர்ள் ஃப்ரண்ட் டே

ஸ்வீடன் நாட்டில் இந்தநாளை "அனைத்து இதயங்களின் தினம்" என்று அழைக்கின்றனர். போர்ச்சுக்கல் நாட்டில் காதலர் தினத்தை "நமோரேடோஸ் டயாடாஸ்" என்று அழைக்கின்றனர். இதற்கு அர்த்தம் பாய்ஃபிரண்ட் மற்றும் கேர்ள்ஃப்ரண்ட் தினம் என்பதாகும். ஸ்பெயினில் இந்த நாளை செயின்ட் வேலண்டைன் என்று அழைக்கின்றனர்.

### நட்புக்கு மரியாதை

பின்லாந்து நாட்டில் வேலண்டைன்ஸ் டே சற்று வித்தியாசமானது. இது காதலர்களுக்கான தினம் அல்ல. இந்த நாளை அவர்கள் 'ஸ்டேவான்பாபியா' என்று அழைக்கின்றனர். அதாவது இதற்கு நண்பர்கள் தினம் என்று பொருள். நண்பர்களாய் இருப்பவர்கள் இந்த நாளை விமரிசையாக கொண்டாடுகின்றனர். நண்பர்களுக்கு வாழ்த்து அட்டைகள் அனுப்புவதும், பரிசுகள் கொடுப்பதும் என இந்த நாளை சிறப்பாக கொண்டாடுகின்றனர். எங்கெங்கோ இருக்கும் நண்பர்கள் எல்லாம் ஒன்றாக கூடி இந்த நாளை உற்சாகத்துடன் கொண்டாடுவது சிறப்பம்சம்.

### ஹாலிடே ஆஃப் செக்ஸ்

பிரேசில் நாட்டில் பிப்ரவரி 14 ம் தேதியை ஹாலிடே ஆஃப் செக்ஸ் என்று அழைக்கின்றனர். அந்த நாளை அமர்க்களப்படுத்துவார் பிரேசில் நாட்டினர். அபோல் அவர்களுக்கு காதலர் தினம் வேறு தனியாக ஒருநாள் உண்டு. அது ஜூன் 2 ம் தேதி அந்தநாளில் காதலர்கள் மற்றும் தம்பதியர் வாழ்த்து அட்டை, சாக்லேட், பரிசு, முத்தம் என சகலத்தையும் பரிமாறிக்கொள்வது வாடிக்கை.

---

### என் தேவதை!!

அன்பே
உன் போல் அழகு
இவ்வையகத்தில்
இல்லை
என் கண்களுக்கு
உனைக் கண்ட
மறுகணமே
அந்த நிலா
அழகில்லை
எனத் தோன்றியது
இரவானால்
உன் நினைவு
என் கண்களை
தட்டித் திறக்கிறது
மறு நாள்
காலையில்
தனிமைப்பட்டவனாய்
கண் விழிக்கிறேன்
ஒவ்வொரு
சூர்யோதயமும்
உன்னை நினைக்க
வைக்கிறது
உனை சுவாசித்த
காற்றோ
உன் வாசனையை
பூக்களுக்கு
பகிர்ந்தளித்தது
நான் தினமும்
மழையை ரசிக்கிறேன்
ஏனென்றால் அது
உன் கார்மேகக்
கூந்தலில் இருந்து
சொட்டும் நீர்த் துளிகள்
என் கண்களுக்கு
விருந்தளிக்கும்
உன் கள்ளப்
பார்வையைக்
காணத் தினமும்
என் வாசலில்
தவம் கிடக்கிறேன்.....!!

வி.ஆர்.வினு



### உலகம் ஒருநாள் சொல்லும்

உயிரே!
உனக்காக அழுகிறேன்
நீ யாருக்காக அழுகிறாய்
உனக்குத் தெரியாது
நீ சிரித்தால்
நான் மலர்வதும்
நீ அழுதால்
ஆந்தையாய் அலறுவதும்
என் உள்ளத்து உணர்வுகள்
மார்க்கமின்றி
கையில் ஊமையாய்
மனதுக்குள்ளே மடிந்து
போகின்றன
ஆனாலும்
உலகம் ஒருநாள் சொல்லும்
உனக்காக அழுதவன்
இவன் மட்டும்தான் என்று!

சி. உதயா

### ஓசையின்றி போவதேனடி!


ஆசையோடு எனை
அழ வந்தவளே
பிறர் வார்த்தையிலே
ஓசையின்றி போவதேனடி
ஓயாத காதல் என்று
ஓங்கி குரல் கொடுத்தவளே
உடைந்து நான் போகிறேன்
ஒரு வார்த்தைகூட பேசாமல்
ஒய்ந்து போவதேனடி
ஊற்றாக வார்த்தை
வருகிறதே
வள்ளலாய் நீ வாழ
வசந்தத்தை தொலைத்து
விட்டேன்
வாய் மூடி நீ போவதேனடி
வாழ்த்துகிறது உலகம்
வரம்பு போடுகிறது உறவுகள்
வாடிப்போகுதடி மனசு
வரம்புக்குள் அடைபட்டதனால்
சிந்திக்கும் உள்ளங்களும்
சிலிர்க்க வைக்கும் கவிகளும்
சிதறுதடி
சிந்தையில் உன்னை வைத்து
சிந்துகிறேன் கண்ணீரும்
சிலையென நீ இருப்பதனால்
முகமும் பார்த்ததில்லையடி
முகநூலும் முழ்குதடி
சோகத்தில்
முகவரிக்கு முதல் வரி
கொடுத்தவளே
முள்ளாக நீ மாறினாலும்
மூச்சாக உனை
நேசிப்பேனடி!

சிந்து.எல்.

### துயிலுமா என் ஜீவன் நீயின்றி!

கோடி உள்ளங்கள்
அணைத்தால் என்ன
கொள்கையோடு நான்
வாழ்ந்தால் என்ன
கொதிக்கும் என் உதிரமும்
உற்றவள் நீ என்கிறதே
பச்சை வயல்
விளைந்தால் என்ன
பரதேசியாய் நான்
வாழ்ந்தால் என்ன
பார்க்கும் இடமெல்லாம்
பாவையே உன் முகம்
பாவியிவன் விழிகளிலே
பாசமெனும் வேசத்தில்
பத்திரமாய் நீ வாழ்கிறாயா?
இல்லை
துன்பமெனும் துயிலில் நீ
துயில்கிறாயா ?
தூயவளே தினம் நான்
தூற்றுவது உன்
துயரையல்லவா
துயரத்தோடு
தூரத்தில் நீ இருந்தாலும்
துடித்திடும் என் உயிரும்
துணைவி நீ என்கிறதே
துவண்டு நீ போனால்
துயிலுமா என் ஜீவன் நீயின்றி ,,,!

சிந்து.எல்.



## மகளிர் கதிர்

# மெனோபாஸ் வந்தாலும் பிரச்சினையில்லை, உற்சாகமாக இருக்கலாம்!



தாம்பத்ய ஈடுபாடு என்பது உடலோடு தொடர்புடையது மட்டுமல்ல அது மனதோடும் தொடர்புடையது. ஆர்வம் இருந்தால் மட்டுமே அக்கறை காட்ட முடியும். அதுவும் பெண்களுக்கு 45 வயதாகிவிட்டாலே மெனோபாஸ் கால கட்டம் தொடங்கிவிடும். இது உடல்ரீதியாக சில பாதிப்புகளை ஏற்படுத்தினாலும் மனரீதியாகவும் தாம்பத்யத்தில் இருந்து தள்ளி இருக்கச் சொல்லும்.

மெனோபாஸ் காலகட்டத்தை எட்டியதும் செக்ஸ் இனி அவ்வளவுதான், எல்லாம் முடிந்து விட்டது என்று எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால் உண்மை அப்படி இல்லை. மெனோபாஸ் கால கட்டத்தில் உள்ள பெண்களும் தயங்காமல், தடையின்றி உறவு கொள்ளலாம் என்கின்றனர் உளவியல் வல்லுநர்கள்.

### சுதந்திரமான உணர்வு

மெனோபாஸ் காலத்தில் பெண்மைக்குறிய மாதசுழற்சி நின்றுவிடும். எனவே அந்த இடைஞ்சல் கிடையது. எனவேதான் மெனோபாஸ் வந்தாலும் கூட செக்ஸை முன்பு போலவே மகிழ்ச்சிகரமாக, ரம்யமாக அனுபவிக்க முடியும் என்கிறார்கள் மருத்துவர்கள். இன்னும் சொல்லப் போனால், முன்பை விட சுதந்திரமாக, எந்தவித தடையும், சங்கடமும் இல்லாமல் அனுபவிக்க முடியும் என்பது அவர்களின் கருத்து.

### சோர்வை விரட்டும்

மெனோபாஸ் கட்டத்தை எட்டும் பெண்களுக்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் சோர்வு ஏற்படுவது இயற்கை. அந்த சோர்வை விரட்ட செக்ஸ் அருமருந்தாக பயன்படுகிறது என்பதே உண்மை. புத்துணர்ச்சியுடன் தொடர்ந்து நல்லபடியாக நாம் செயல்பட, நல்ல எழுச்சியுடன் மனம் திகழ செக்ஸ் அவசியம் தேவை என்பது மருத்துவர்கள் மற்றும் உளவியல் நிபுணர்களின் கருத்து. மேலும் நம்மை என்றும் போல இளமையுடன் திகழவும் மெனோபாஸுக்குப் பிந்தைய செக்ஸ் உதவுகிறதாம்.

### உறவுக்கு வேட்டு

மெனோபாஸ் வந்தால் செக்ஸ் உணர்வுகள் வற்றிப் போய் விடும், முன்பு போல ஒத்துழைக்க முடியாது என்று பல பெண்கள் தவறாக கருதுகின்றனர். ஆனால் இது மூடநம்பிக்கையே என்று உளவியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். உணர்ச்சிகள் எங்கும் ஓடிப் போகாது, உங்களுக்குள்ளேயேதான் அது இருக்கும். அதை முன்பு போலவே நீங்கள் வெளிப்படுத்தி அதற்கு சிறந்த வடிகால் தருவது அவசியம் என்கிறார்கள்.

### அதிகமாகும் உற்சாகம்

மெனோபாஸ் வந்த பெண்களுக்கு இனி எதற்கு செக்ஸ் என்ற மன ரீதியான முடிவுக்கு வந்து விடுவதால், தங்களது கணவர்கள் அருகில் வந்தாலே இறுக்கமான நிலையுடன் ஒத்துழைக்கிறார்கள். அப்போதுதான் பிரச்சினை வரும். வலியுடன் கூடிய செக்ஸ் அனுபவமாக அது மாறி இருவருக்குமே மன வருத்தத்தையும், அதிருப்தியையும், எரிச்சலையும் கொடுக்கும் கசப்பான அனுபவமாக மாறிப் போய் விடுகிறது.

மெனோபாஸ் சமயத்தில் டெஸ்டோஸ்டிரான் சுரப்பு அதிகமாகவே இருக்குமாம். இது செக்ஸ் உணர்வுகளை அதிகப்படுத்த உதவுவது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் பெரும்பாலான பெண்கள் மன ரீதியாக துவண்டு போவதால் இதை சரிவர கவனிப்பதில்லை என்கின்றனர் மருத்துவர்கள். எனவே மனதை உற்சாகமாக்கினால் உறவில் உற்சாகமாக ஈடுபடலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### நிபுணர்களின் ஆலோசனை

மெனோபாஸ் வந்த பெண்களுக்கு ஒரு பிரச்சினை ஏற்படுவது தவிர்க்க முடியாதது. அதாவது இந்த சமயத்தில் ஈஸ்ட்ரோஜன் சுரப்பு இல்லாமல் போய் விடும். இதனால் பெண்ணுறுப்பில் வறட்சித் தன்மை காணப்படும். இதனால் ஆர்கஸம் ஏற்படுவதில் தாமதமோ அல்லது சிரமமோ இருக்கலாம். இதனால் உறவின்போது வலி ஏற்படுவது இயற்கை. ஆனால் இதற்கும் கூட நிவாரணங்கள் உள்ளன. மருத்துவர்கள் பரிந்துரைக்கும் ஜெல் அல்லது லூப்திகன்ட்களைப் பயன்படுத்தினால் உறவு எளிதாகும். மேலும் நீண்ட இடைவெளி விட்டு விடாமல் தொடர்ந்து செக்ஸ் உறவை மேற்கொண்டு வந்தால் வலி ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.



### இரண்டாவது இன்னிங்க்ஸ்

ஊட்டச்சத்து நிறைந்த உணவு, போதிய உடற்பயிற்சி, தியானம், தேவையான மருந்துகள் என திட்டமிட்டுக் கொண்டால் 40 வயதைத் தாண்டிய பிறகும் கூட நார்மலான செக்ஸ் வாழ்க்கையைத் தொடர முடியும். தேவைப்பட்டால் மன நல நிபுணர்களின் ஆலோசனைகளையும் கூட பெறலாம். மெனோபாஸ் வந்த மங்கையர் மனரீதியாக துவண்டுவிடாமல் மகிழ்வுடன் இரண்டாவது இன்னிங்ஸையும் சிறப்பாக தொடருங்கள் என்கின்றனர் உளவியல் வல்லுநர்கள். ●

## நன்னி மருத்துவம்

### தேன் மருத்துவம்

1. அதிக எடை கொண்டவர்கள் எலுமிச்சை பழச்சாரில் தேன் கலந்து அடிக்கடி குடித்தால் எடை குறையவும் ஆரோக்கியம் ஏற்படவும் வாய்ப்பு உண்டு.
2. உங்கள் குழந்தை படுக்கையில் சிறுநீர் கழிக்கும் பழக்கம் கொண்டதாக இருந்தால், லேசான சுடுநீரில் தேன் கலந்து கொடுத்து தூங்க வையுங்கள். இது குழந்தைகளுக்கு நல்லது.
3. ஒரு துண்டு இஞ்சியை இடித்து தேனில் போட்டு தினமும் பிழிந்து சாப்பிட்டால், குண்டு உடல் குறையும்.

### தாய்ப்பால்

1. பசலைக் கீரையைச் சுத்தம் செய்து கைப்பிடி அளவு எடுத்துக் கழுவி அம்மியில்வைத்து அரைத்து ஒரு டம்ளர் பசுவின் பாலில் கலந்து காலையில் மட்டும் ஐந்து நாள் குடித்தால் தாய்ப் பால் சுரக்கும்.
2. சீரகத்தையும், வெல்லத்தையும் சம அளவு கலந்து சாப்பிட்டு வந்தால் பால் பெருகும்.





## உளுந்து அடை

**தேவையானவை:**

உளுந்து - கால் டம்ளர்
அரிசி மாவு - முன்று தேக்கரண்டி
ரவை - ஒரு மேசை கரண்டி
வெங்காயம் - முன்று
பச்சமிளகாய் - ஒன்று
கொத்துமல்லி தழை - சிறிது
நெய் + எண்ணை - சுட தேவையான அளவு

செய்முறை: உளுந்தை அரை மணி நேரம் ஊறவைத்து சிறிது தண்ணீர் சேர்த்து விழுதாக அரைத்து கொள்ளவும். அரைத்த உளுந்து மாவுடன் அரிசி மாவு, ரவை சேர்த்து கலக்கி அதில் உப்பு,பொடியாக நருக்கிய வெங்காயம், கொத்துமல்லி தழை, பச்சமிளகாயை சேர்த்து அடை சுட தகுந்தவாறு தண்ணீர் சிறிது சேர்த்து அடைகளாக வார்க்கவும்.

## சமையலறை ஆங்கிலம் அறிவோமா?

ஜாதிக்காய் Nutmeg நட்மெக்
இஞ்சி Ginger ஜின்ஜர்
சுக்கு DryGinger டிரை ஜின்ஜர்
பூண்டு Garlic கார்லிக்
வெங்காயம் Onion ஆனியன்
புளி Tamarind டாமரிண்ட்
மிளகாய் Chillies சில்லிஸ்
மிளகு Pepper பெப்பர்
காய்ந்த மிளகாய் / சிவப்பு மிளகாய் Redchillies
பச்சை மிளகாய் Greenchillies
குடை மிளகாய் Capsicum




## டக்ளஸ் தேவானந்தாவுக்கு மட்டுமே அதிகாரம்



சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச தன்னிடம் காணி, காவல்துறை அதிகாரங்கள் ஒப்படைப்பதற்கு தயக்கம் காட்டவில்லை என்றும் அது பிறர் கையில் சிக்குவதை அவர் விரும்பவில்லை என்றும் சிறிலங்கா அமைச்சரும் ஈபிடிபி தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். டக்ளஸ் தேவானந்தாவின் கையில் இந்த அதிகாரங்களை கொடுத்தால் பிரச்சினையில்லை. ஆனால் அது பிறர் கையில் கிடைத்தால் சிக்கலாகி விடும் என்றே சிறிலங்கா அதிபர் நினைக்கிறார் என்றும் அவர் கூறியுள்ளார். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காணி, காவல்துறை அதிகாரங்கள் தேவை என்று ஈபிடிபி கருதுகிறதா என்று எழுப்பிய கேள்விக்கு அவர், அவசியமானது என்று பதிலளித்துள்ளார். ஆனால், இப்போது இந்த இரண்டு வார்த்தைகளைக் கேட்டாலே சந்தேகம் வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ், சிங்கள சமூகங்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்பும் வரை, இப்போதைக்கு இந்த இரண்டு விவகாரங்களையும் கைவிட்டு வடக்கு,கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் ஏனைய பிரச்சினைகளில் கவனம் செலுத்தலாம் என்றும் அவர் ஆலோசனை கூறியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் நலன்களை வீணடிப்பதாகவும், பல தேவையற்ற பிரச்சினைகளை அவர்கள் உருவாக்குவதாகவும் குற்றம்சாட்டியுள்ள டக்ளஸ் தேவானந்தா. ஊடகங்களுக்கு. ஒன்றைச் சொல்லும் அவர்கள் இந்தியாவுக்கு மற்றொன்றை கூறுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சிறிலங்கா தூதுவருக்கு எதிராக அவுஸ்திரேலியாவில் தமிழர்கள் போராட்டம்



அவுஸ்ரேலியாவுக்கான சிறிலங்காவின் தூதுவர் அட்மிரல் திசார சமரசிங்கவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, துங்காபியில் இன்று போராட்டம் ஒன்றை நடத்த அங்குள்ள தமிழர்கள் ஏற்பாடுகளை செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறிலங்காவின் 64வது சுதந்திர நாளான இன்று துங்காபியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் நடைபெறும் நிகழ்வில் சிறில்ங்கா தூதுவர் பங்கேற்கவுள்ளதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இந்தநிலையில், அட்மிரல் திசார சமரசிங்கவுக்கு எதிராக இன்று பின்பகல் நடைபெறவுள்ள போராட்டத்தில் பங்கு கொள்ளுமாறு அங்குள்ள தமிழர்களுக்கு கோரி சிட்னி தமிழ் நிகழ்வு அமைப்பு மின்னஞ்சல் மூலம் அழைப்புகளை அனுப்பியுள்ளது.


சிறிலங்கா தூதுவருக்கு எதிரான இநதப் போராட்டம் இன்று மாலை 5 மணியளவில் துங்காபியில் உள்ள corner of Metella Road மற்றும் Octavia Street ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கால கட்டத்தில் சிறிலங்கா கடற்படையின் நடவடிக்கைத் தளபதியாகவும், கிழக்கு கடற்படைத் தளபதியாகவும் இருந்த அட்மிரல் திசார சமரசிங்க தப்பிச்சென்ற பொதுமக்கள் மீது பீரங்கித் தாக்குதலை நடத்தி போர்க்குற்றங்களை இழைத்ததாக குற்றம்சாட்டப்படுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கலிபோர்னியாவில் `சிறிலங்காவின் கொலைக்களங்கள்

சிறிலங்காவின் கொலைக்களங்கள் ஆவணப் படம் அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் திரையிடப்படவுள்ளது. கலிபோர்னியாவில் உள்ள 3990 Ventura Court, Palo Alto என்ற இடத்தில் உள்ள வென்துரா சமூக நிலையத்தில் வரும் 18ம் நாள் சனிக்கிழமை இரவு 7 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் இது திரையிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்துலக மன்னிப்புச்சபையின் சிறிலங்கா தொடர்பான நிபுணர் ஜிம் மக் டொனால்ட் இந்த நிகழ்வில் முக்கிய உரை நிகழ்த்தவுள்ளார். இந்த ஆவணப்படம் திரையிடப்பட்டதும் குழு விவாதம் ஒன்றும், கேள்விபதில் நிகழ்வும் நடைபெறவுள்ளன.



## சுதந்திர நாள் உரையில் தமிழரின் தாயகக் கோட்பாட்டை நிராகரித்தார் சிறிலங்கா அதிபர்



வடக்கு, கிழக்கு தமிழரின் தனித்துவமான தாயகம் என்ற கோட்பாட்டை நிராகரிக்கும் வகையில் சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச, சிறிலங்காவின் 64 வது சுதந்திர நாள் நிகழ்வில் உரையாற்றியுள்ளார். சிறிலங்காவின் எந்தப் பகுதியும் எந்தவொரு இனத்துக்கும் சொந்தமானதல்ல என்றும் அனைத்துப் பகுதிகளும் அனைவருக்கும் சொந்தம் என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். அனுராதபுரவில் இன்று காலை நடந்த இந்த நிகழ்வில் மேலும் உரையாற்றிய சிறிலங்கா அதிபர்,சுதந்திரம் என்பது இன்று எமது முன்னுள்ள பாரிய பொறுப்பாகும். அதனைக் கட்டிக்காக்க வேண்டிய கடமை எம் அனைவருக்கும் உள்ளது. யுத்தத்தைக் காரணம் காட்டி சுதந்திரத்தை மறக்கடித்த நிலைமை அன்று இருந்தது. இன்று யுத்தத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்ட மண்ணிலிருந்து சுதந்திரத்தைக் கொண்டாடும் அளவுக்கு நாம் வந்துள்ளோம். கிராமத்தைப் பாதுகாக்க பதுங்கு குழிகளையும் துப்பாக்கிகளையும் கேட்டிருந்த மக்கள் இன்று அபிவிருத்தி, சுதந்திரம் மற்றும் பரிசுத்தமான நாட்டை வேண்டி நிற்கின்றனர். எமக்கு எதிராக வெளிநாடுகளிலுள்ள பயங்கரவாத சக்திகள் பல்வேறு பொய்ப் பரப்புரைகளையும் சதி வலைகளையும் பின்னி வருகின்றன. இங்குள்ள சிலரும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்றனர். சில நாடுகளில் இடம்பெற்ற பிரிவினைவாதத்தினை சிறிலங்காக்குள்ளும் நடத்துவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் நாங்கள் பதிலடி கொடுக்க வேண்டும். நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்துவது தனியொருவரினால் செய்யக்கூடியது அல்ல. அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்த உண்மையை புரிந்துகொள்ளவும் வேண்டும். வெளிநாடுகளிலிருந்து உதவிகளைப் பெறுபவர்கள் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டுக்கும் நாட்டின் அனைத்து இன மக்களுக்கும் பொதுவான நிரந்தரமான சமாதானக் கொள்கையொன்றை ஏற்படுத்த வேண்டும். சிறிலங்காவில் எந்தவொரு பிரதேசமும் எந்தவொரு இனத்துக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. முழுநாடுமே எல்லோருக்கும் எல்லாம் பொதுவானது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கடந்தகால பிரச்சினைகளுக்கு அனைவரும் பொறுப்பேற்க வேண்டுமெனத் தெரிவித்திருந்தது. எமது மனசாட்சியின்படி நாம் அனைவரும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். கடந்த டிசம்பர் மாதம் 17ம் நாள் இந்த ஆணைக்குழு தனது பரிந்துரைகளை வெளியிட்டது. அதன் பரிந்துரைகளை ஏற்று குறுகிய காலத்திற்குள். அதாவது கடந்த 6 வார காலங்களாக நாம் அவற்றை நிறைவேற்றியே வருகின்றோம். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும்போது பொதுமக்களின் வாக்குகளால் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத்தினை ஒதுக்கி வைத்து விட எம்மால் முடியாது. நாட்டின் நீதி, சட்டம் அனைத்துக்கும் நாம் அடிபணிவது போன்றே ஜனநாயக சக்தியான நாடாளுமன்றுக்கும் நாம் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும். பொதுமக்களின் வாக்குகளினால் மாத்திரமே ஓர் அரசாங்கத்தினை கவிழ்க்கும் கட்டுப்பாட்டுக்குள் நாம் உள்ளோம். அதை நாம் பாதுகாக்க வேண்டும். அந்தவகையில் ஜனநாயக நீரோட்டத்தில் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் சக்தி நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு மாத்திரமே உண்டு. இதில் கலந்துகொண்டு அனைத்து பிரச்சினைகள் குறித்தும் செவிமடுத்து, மக்கள் தேவைகளை கவனத்திற்கொண்டு பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொறுப்பு அனைத்து கட்சிகளுக்கும் உண்டு. எனவே அனைத்து கட்சிகளும் இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெற்று தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.," என்று அவர் தெரிவித்துள்ளார்.

## சிகிச்சைக்காக சிங்கப்பூர் செல்கிறார் சிறிலங்கா அதிபர்

சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச சிகிச்சைக்காக சிங்கப்பூர் செல்லவுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. சிங்கப்பூரில் உள்ள 'மவுண்ட் எலிசபெத்' மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு சிறிலங்கா அதிபரின் ஆலோசகர் சஜின் வாஸ் குணவர்தனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா அதிபருடன் செல்லும் குழுவினருக்கான தங்குமிட வசதிகளை செய்யும் பொறுப்பை சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசுக்கு நெருக்கமான கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் ஏற்றுக் கொண்டுள்ளார். சிறிலங்கா அதிபர் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லவே திட்டமிட்டிருந்த போதிலும் அங்குள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டே சிங்கப்பூர் செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனினும் மகிந்த ராஜபக்ச சிங்கப்பூர் செல்லும் திகதி இன்னமும் உறுதியாகவில்லை என்றும் அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. இதற்கிடையே அடுத்தவாரம்

சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச பாகிஸ்தானுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். எதிர்வரும் 9ம் நாள் இஸ்லாமாபாத் செல்லும் அவர் 10ம் நாள் வரை அங்கு தங்கியிருப்பார் என்று தகவல்கள் கூறுகின்றன.

# யாழ்ப்பாணத்தில் 56 வெளிநாட்டு இராஜதந்திரிகள் - ஜெனிவாவை எதிர்கொள்ளும் சிறிலங்காவின் நகர்வு

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சினால், பல்வேறு நாடுகளையும் சேர்ந்த 56 தூதுவர்க்ள், இராஜதந்திரிகள் இன்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். வடக்கில் போர் முடிவுக்கு வந்த பின்னர் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கவே இவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர். யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுனர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் 2009ம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மீள்குடியேற்றம், மிதிவெடி, சுகாதாரத்துறை, கல்வித்துறை, வீதி அபிவிருத்தி, நீர் விநியோகம், தொடருந்துசேவை, விவசாயத்துறை, மீன்பிடித்துறை, கலை கலாச்சாரம், விளையாட்டுத்துறை மற்றும் வடக்கில் நடைபெறும் அனைத்து அபிவிருத்திகள் தொடர்பாகவும் வடமாகாண ஆளுனர் விளக்கமளித்தார். அதன் பின்னர், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 6 பேர் போருக்குப் பின்னரான அபிவிருத்திக்குப் பின்னர் அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்புகள், மீள்குடியேற்றம், மிதிவெடி மற்றும் தற்போதைய நிலைமைகள் தொடர்பான தமது சந்தேகங்களைக் கேட்டு விளக்கங்களை பெற்றனர். நேற்று நடைபெற்ற சிறிலங்காவின் 64வது சுதந்திர நாள் நிகழ்வில் பங்கேற்க கொழும்பிலும், புதுடெல்லியிலும் இருந்து செயற்படும் பெருமளவு இராஜதந்திரிகளை சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு அனுராதபுரத்துக்கு அழைத்துச் சென்றிருந்தது. அவர்களே இன்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர். சிறிலங்காவின் வெளிவிகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம இவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்றிருந்தார். ஜெனிவாவில் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் சிறிலங்காவுக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை முறியடிக்கின்ற ஒரு நகர்வாகவே பெருந்தொகை இராஜதந்திரிகள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிறிலங்கா அதிபர் இன்று யாழ்ப்பாணம் செல்கிறார்

## - பாதுகாப்புக் கெடுபிடிகள் உச்சம்

சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச இன்று யாழ்ப்பாணம் செல்லவுள்ளார். யாழ். மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தையும், சாவகச்சேரி மருத்துவ மனையில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத் தொகுதியையும் அவர் திறந்து வைக்கவுள்ளார். யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களையும் சிறிலங்கா அதிபர் பார்வையிடவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா அதிபருடன் அமைச்சர்கள் பலரும் யாழ்ப்பாணம் செல்ல வுள்ளனர். யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கும் அவர் தலைமை தாங்குவார். இந்தக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இந்தக் கூட்டதில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் பங்கு கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று மாலை கொழும்பு திரும்ப முன்னர் சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச நல்லூர் கந்தசுவாமி கோவில் மற்றும் நாகவிகாரை ஆகியவற்றுக்கும் சென்று வழிபாடு நடத்தவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் தெரிவித்தார். அதேவேளை சிறிலங்கா அதிபரின் பயணத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மீண்டும் பாதுகாப்புக் கெடுபிடிகள் உச்சமடைந்துள்ளன. போர் நடைபெற்ற காலத்தில் பொதுமக்களை மிரட்டியது போன்று, சிறிலங்கா இராணுவத்தின் உந்துருளிப் படையணியினர் வீதிகளில் வலம் வருகின்றனர். அத்துடன் ஆயிரக்கணக்கான சிறிலங்காப் படையினரும் காவல்துறையினரும் வீதிகளில் குவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கறுப்புத்துணியால் முகத்தை மூடியபடி ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ள சிறிலங்கா படையினரால், அச்சமடைந்துள்ள யாழ்.நகர மக்கள் நேற்று வீதிகளில் அதிகம் நடமாடுவதைத் தவிர்த்திருந்தனர். அத்துடன் யாழ். மத்திய கல்லூரியை அண்டிய பகுதிகளிலும், யாழ். புறநகர் பகுதிகளிலும் சாதாரண உடையில் பெருமளவு காவல்துறையினர் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

# வே.பாலகுமாரன் எங்கே? - இந்திய செய்தியாளரின் கேள்விக்கு பதிலளிக்காமல் மழுப்பினார் கோத்தாபய.



போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பால்குமாரன் குறித்து இந்திய ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு முறையாகப் பதிலளிக்காமல் மழுப்பியுள்ளார் சிறிலங்கா பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச. 'டெக்கன் குரோனிக்கல்' நாளேட்டின் செய்தியாளர் பகவான்சிங்கிற்கு கொழும்பில் நேற்று அளித்த தனிப்பட்ட செவ்வி ஒன்றிலேயே கோத்தாபயராஜபக்சபாலகுமாரன் குறித்து தெளிவாகப் பதிலளிக்காமல் மழுப்பியிருக்கிறார். வடக்கில் அதிகளவில் படைகளைக் குவித்து இராணுவ மயப்படுத்தி வருவதாக தமிழ்க்கட்சிகள் கூறும் குற்றச்சாட்டுகளையும் அவர் நிராகரித்துள்ளார். சிறிலங்காவில் உள்ள 22 மாவட்டங்களையும் போன்று தான் வடக்கிலும் அவசியமான படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கோத்தாபய ராஜபக்ச கூறியுள்ளார். 30 ஆண்டு காலப்போர் முடிவுக்கு வந்த குறுகிய காலத்துக்குள் பாரியளவிலான அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும், வழமைநிலையை கொண்டு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சிலர் இதனை அங்கீகரிக்கவில்லை என்பது குறித்து கவலை வெளியிட்டுள்ள அவர், "தேவையற்ற விவகாரங்கள் குறித்தே, எமக்கு எதரான தடைகள் பற்றியே அவர்கள் பேசுகின்றனர், இது நீதியா?" என்றும் கோத்தாபய ராஜபக்ச கேள்வி எழுப்புள்ளார். "இது ஒரு சாதாரணமான கிளர்ச்சியல்ல. ஒரு உண்மையான போர். விடுதலைப் புலிகளை ஏனைய தீவிரவாத அமைப்புகளுடன் நீங்கள் ஒப்பிட முடியாது. அல்கெய்டாவுடன் கூட ஒப்பிட முடியாது." என்றும் அவர் கூறியுள்ளார். எந்தவொரு நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில் சாதிக்கவில்லை. இதனை ஏன் ஒருவரும் அங்கீகரிக்கவில்லை எனறும் அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார். "அரசாங்கம் மிகப்பெரிய வேலையைச் செய்து முடித்துள்ளது. 300,000 இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றியுள்ளது. சுமார் 11,000 விடுதலைப் புலிகளை புனர்வாழ்வு அளித்துள்ளது.

இந்த முன்னாள் போராளிகளை சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் வைத்திருக்காமல் சமூகத்துடன் இணைக்க புனர்வாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறோம். இன்னமும் 700 முன்னாள் போராளிகள் மட்டும் தான் விடுவிக்கப்படாமல் உள்ளனர்." என்றும் அவர் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், "குறிப்பிட்டுச் சொல்லத்தக்க விவகாரங்கள் எனக்குத் தெரியாது.


அவர் தடுத்து வைக்கப்பட்டள்ளாரா என்று எனக்குத் தெரியாது. அறியப்பட்ட பிரமுகர்களில் பெரும்பாலானோர் இறுதிப்போரில் கொல்லப்பட்டு விட்டனர். சிலர் சரணடைந்தனர். அங்கே அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவினர் மற்றும் ஏனைய முகவரமைப்புகள் சரணடையும் நடவடிக்கைகளின் போது இருந்தனர்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சரணடைந்த விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்த கோத்தாபய ராஜபக்ச, உயிர்தப்பியோரையும், சரணடைந்த புலிகளையும் பொறுப்பேற்றபோர் வலயத்தில் பிரான்சின் எம்எஸ்எவ் மருத்துவக்குழுவினர், இந்திய மருத்துவக் குழுவினர் உள்ளிட்ட அனைத்துலக முகவரமைப்புகள் இருந்தன." என்றும் கூட்டிக்காட்டியுள்ளார். "வடக்கில் குறைந்தளவு படையினரே நிலைகொண்டுள்ளனர். இராணுவ கன்டோன்மென்ட்கள் காஸ்மீரில் தமிழ்நாட்டில் கூட இருக்கின்றன. ஆனால் வடக்கில் இப்போது வீதித் தடைகள் இல்லை. சுற்றிவளைப்பு தேடுதல்கள் இல்லை. நாங்கள் சட்டம் ஒழுங்கு பணியை காவல்துறையிடம் ஒப்படைத்து விட்டோம். தமிழ்க் காவலர்கள் சேர்க்கப்படுகின்றனர். இராணுவ ஆட்சேர்ப்பை நிறுத்தியுள்ளோம். இராணுவத்தில் இருந்து ஓய்வுபெறுவோரால் ஏற்படும் வெற்றிடங்களைக் கூட நாங்கள் நிரப்பவில்லை. போரில் வெற்றியைப் பெற்றுத் தந்த படையினரை நாம் திருப்பி அனுப்ப முடியாது. மீண்டும் கடந்த காலத்துக்குத் திரும்பாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க இராணுவத் தலையீடு இருக்கும்" என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# அனைத்துலக அழுத்தங்களுக்கு சிறிலங்கா அடி பணியாதாம்

## - மைத்திரிபால சிறிசேன சொல்கிறார்




சிறிலங்கா அதிபர்மகிந்த ராஜபக்சதலைமையிலான அரசாங்கம் வெளிநாடுகளின் நாடுகளின் தாளத்துக்கு ஆடுகின்ற பொம்மை அல்ல என்று சிறிலங்காவின் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஹிங்குராகொடவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். " சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் எந்தவொரு ஏகாதிபத்திய நாட்டுக்கோ, அமைப்புக்கோ ஒரு போதும் அடிமையாகாது. பொருளாதார ரீதியாக தாமே வலுவானவர்கள் என்று கூறும் சில நாடுகளுக்கு வெறும் இருநூறு, முந்நூறு ஆண்டுகால வரலாறு தான் உள்ளது. னால் நாம் ஆயிரக்கணக்கான ஆண்டு வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள். மனிதஉரிமைகளின் பெயராலும், வெவ்வேறு ஆணைக்குழுக்கள் ஊடாகவும், ஐக்கிய நாடுகள் சபை மூலமும் எம்மீது அழுத்தம் பிரயோகிக்க முடியுமென புலிகளின் ஆதரவாளர்கள் அனைத்துலக மட்டத்தில் வெவ்வேறு சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். நாம் புலிகளையும் அவர்களை இயக்கிய தலைவர்களையும் அவர்களது ஆயுதங்களையும் அழித்துள்ளோம். என்றாலும் அனைத்துலக மட்டத்தில் புலிகளுக்கு ஆதரவு நல்கக் கூடிய சிலர் உள்ளனர். அவர்கள், அனைத்துலக நாடுகளின் தாளத்துக்கு சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் ஆடும் என்று மனப்பால் குடிக்கின்றனர். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் அவர்கள் எண்ணுவது போல் ஒரு போதும் வெளிநாடுகளின் தாளத்திற்கு ஆடுகின்ற பொம்மையாகாது. சிறிலங்கா எந்த நாட்டுக்கும் அடிமைப்பட்டது அல்ல. இறைமையும், தன்னாதிக்கமும் கொண்ட சுதந்திரமான ஒரு நாடு" என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.



## இலங்கை

### சுதந்திரநாளன்று பாரிசில் உள்ள சிறிலங்கா தூதரகத்தில் பறக்கவில்லையாம் தேசியக்கொடி



சிறிலங்காவின் 64 வது சுதந்திர நாளன்று பாரிசில் உள்ள சிறிலங்கா தூதரகத்தில் தேசியக்கொடி ஏற்றப்படாதது குறித்து சர்ச்சை எழுந்துள்ளது. நேற்று முன்தினம் சிறிலங்காவின் சுதந்திர நாளை முன்னிட்டு சிறிலங்காவிலும், வெளிநாடுகளில் உள்ள சிறிலங்காவின் தூதரகங்களிலும் சிறிலங்காவின தேசியக்கொடி ஏற்றப்பட்டு சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. ஆனால் பாரிசில் உள்ள சிறிலங்கா தூதரகத்தில் சிறிலங்காவின் தேசியக்கொடி பறக்கவில்லை.

மாறாக சிறிலங்கா தூதரகத்துக்கு முன்பாக தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதற்கு எதிரான போராட்டம் ஒன்றே நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற தமிழர்கள், சிறிலங்காவில் தமிழர்களுக்கு சுதந்திரம் மறுக்கப்படுவதாகத் தெரிவிக்கும் பதாகைகளை ஏந்தியிருத்துடன் முழக்கங்களையும் எழுப்பினர்.

பாரிசில் உள்ள சிறிலங்கா தூதரகத்தில் சுதந்திர நாளில் சிறிலங்காவின் தேசியக்கொடி பறக்க விடப்படாததற்கு பௌத்த பிக்குகளும் சிங்கள அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சிறிலங்கா தூதரக அதிகாரி ஒருவர், வேலை நாட்களில், செயலக பணிநேரத்தின் போது மட்டும் தான் சிறிலங்காவின் தேசியக்கொடி பறக்க விடப்படும் என்றும், பணிநேரம் முடிந்ததும் அது இறக்கப்பட்டு விடும் என்றும் தெரிவித்துள்ளார்.

### பிளேக் வருகையை உறுதிப்படுத்தியது சிறிலங்கா



தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் வரும் 12ம் நாள் கொழும்பு வரப் போவதை சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு இன்று உறுதிப் படுத்தியுள்ளது. சிறிலங்கா வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு இந்தத் தகவலை உறுதி செய்துள்ளார். பிளேக்குடன் மற்றொரு அமெரிக்க அதிகாரியும் கொழும்பு வரவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். பிளேக் கொழும்பு வரவுள்ளது பற்றிய தகவல்கள் ஏற்கனவே வெளியான போதும் அதனை உறுதிப்படுத்துவதற்கு சிறிலங்கா வெளிவிவகார அமைச்சும், அமெரிக்கத் தூதரகமும் இழுத்தடித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

### சிறிலங்காவிற்கு எதிரான அமெரிக்காவின் புதிய நகர்வு வரவேற்கதக்கது - நெதர்லாந்து வானொலி

சிறிலங்கா விடயத்தில் அமெரிக்காவானது தனது நலன் சார்ந்த வகையிலேயே நடந்து கொள்கின்றது என்ற பொதுவான கருத்து மேற்குலகம் முழுமைக்கும் பரவிக்காணப்பட்டது. ஆகவே இந்நிலையில், அமெரிக்காவின் இப்புதிய நகர்வானது இவ்வாறான தவறான அபிப்பிராயத்தை மாற்றுவதற்கான வரவேற்கத்தக்க விடயமாக அமைந்துள்ளது. இவ்வாறு தெரிவித்ததாக மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்ததாக உலகளாவிய நெதர்லாந்து வானொலியின் [RNW] இணையதள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டத் தொடரின் போது சிறிலங்காவிற்கு எதிரான பிரேரணை ஒன்றிற்கு அமெரிக்கா ஆதரவளிக்கவுள்ளது. இதற்கு முன்னரும் அமெரிக்கர்கள் சிறிலங்காவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான தமது எதிர்ப்புக்களைத் தெரிவித்த போதிலும், இதுவரையில் சிறிலங்கா விவகாரத்தை மனித உரிமைகள் சபையின் முன் கொண்டு வருவதற்கான எந்தவொரு நகர்வுகளையும் மேற்கொள்ளவில்லை. அடுத்த மாதம் வோசிங்ரனில் சந்திக்கவுள்ள, சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரிற்கு அமெரிக்க இராஜாங்கச் செயலர் கிலாரி கிளின்ரன் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே, சிறிலங்காவிற்கு எதிரான பிரேரணைக்கு அமெரிக்கா ஆதரவளிக்கவுள்ளமை தொடர்பான தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. 2009 ல் நிறைவுக்கு வந்த, தமிழ்ப் புலிகளுடனான இறுதிக் கட்ட யுத்தத்தில் பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக சிறிலங்கா விசாரணை மேற்கொள்ள வேண்டும் என மார்ச் 2011ல் அமெரிக்க அரசாங்கம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தது. சிறிலங்காவால் சொந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற உள்ளக விசாரணைப் பொறிமுறையானது அனைத்துலக நியமங்களுக்கு ஏற்ப அமையாவிட்டால், அனைத்துலக விசாரணை ஒன்றிற்கு சிறிலங்கா முகங்கொடுக்க வேண்டிவரும் என கடந்த ஆண்டில், அமெரிக்காவின் தென்னாசியாவிற்கான உதவிச் செயலர் றொபேற் ஓ பிளேக் குறிப்பிட்டிருந்தார். சிறிலங்கா அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது கடந்த நவம்பரில் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் இது அனைத்துலக விமர்சனங்களிற்கு உட்பட்டுள்ளது. "இந்த அறிக்கையானது உண்மையில் மிகவும் மோசமான ஒன்றாகும்" என லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் Sri Lanka Campaign அமைப்பைச் சார்ந்த பிறெட் காவர் சுட்டிக்காட்டியிருந்தார். "இது யுத்த மீறல்களிற்குப் பொறுப்பானவர்களை இனங்கண்டு கொள்ளவில்லை. அடுத்ததாக, சிறிலங்கா அரசாங்கமானது இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கைகளை எடுக்கவும் தவறியுள்ளது. மிக அத்தியாவசியமாக உள்ள அடுத்த நகர்வு எடுக்கப்படவில்லை" எனவும் பிறெட் காவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். மனித உரிமைகள் ஆணையகத்தில் சிறிலங்காவிற்கு எதிராக பிரேரணைக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதை திரு.காவர் வரவேற்றுள்ளார். "சிறிலங்கா தொடர்பாக அமெரிக்கர்கள் ஒருபோதும் மிகத் தீவிரமான, முக்கியமான முடிவை எடுக்கவில்லை. ஆகவே அமெரிக்காவின் இந்நகர்வானது புதியதாக உள்ளது. இதுவரையில் சிறிலங்கா விடயத்தில் அமெரிக்காவானது தனது நலன் சார்ந்த வகையிலேயே நடந்து கொள்கின்றது என்ற பொதுவான கருத்து மேற்குலகம் முழுமைக்கும் பரவிக்காணப்பட்டது. ஆகவே இந்நிலையில், அமெரிக்காவின் இப்புதிய நகர்வானது இவ்வாறான தவறான அபிப்பிராயத்தை மாற்றுவதற்கான வரவேற்கத்தக்க விடயமாக அமைந்துள்ளது" எனவும் திரு.காவர் குறிப்பிட்டுள்ளார். மீளிணக்கப்பாட்டு முயற்சி தோல்வியுறுவதானது உள்நாட்டு யுத்தம் மீளவும் ஆரம்பிப்பதற்கு வழிகோலும் எனவும் திரு.காவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். "இவ்வாறான நிலைப்பாடானது அனைத்துலக தீவிரவாதத்தில் புதிய அலையைத் தோற்றுவிப்பதற்கு வழிவகுக்கும் அல்லது ஐரோப்பாவில் நிதி சேகரிப்பிற்கு காலாக அமையும். இந்த உலகமானது சிறிலங்காவில் முதலீடு செய்வதற்கான நலனைக் கொண்டுள்ளதேயன்றி உள்நாட்டு யுத்தம் ஒன்றிற்கு மீளவும் செல்வதற்கான விருப்பத்தைக் கொண்டிருக்கவில்லை" எனவும் அவர் தெரிவித்துள்ளார். திருப்திகரமான மீளிணக்கப்பாட்டு முயற்சிகளை நோக்கிய சிறிலங்காவின் நகர்வில் அனைத்துலக சமூகமானது திருப்திகொள்ளவில்லை என்பது தெளிவான நிலைப்பாடாகும் என அனைத்துலக நெருக்கடிகள் குழுவைச் சேர்ந்த அலன் கீனன் தெரிவித்துள்ளார். "மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவாலும், ஏனைய நாடுகளாலும் எடுக்கப்படும் சாதகமான, சாத்தியப்பாடான நகர்வுகள் சிறிலங்கா அரசாங்கம் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும்" என அலன் கீனன் குறிப்பிட்டுள்ளார். ஆனால் குறிப்பிடத்தக்க சில மேற்குலக நாடுகள், சிறிலங்காவில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பில் தமது அழுத்தங்களை அதிகளவில் பிரயோகிக்காமல் உள்ளதற்கான காரணத்தை தன்னால் புரிந்து கொள்ள முடிவதாக அலன் கீனன் குறிப்பிட்டுள்ளார். "இவ்வாறான அதிக அழுத்தங்கங்கள் பிரயோகிக்கப்பட்டால், சிறிலங்காவில் உள்ள சமூகங்கள் மத்தியில் மேலும் அதிக எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான ஆபத்துக்கள் உருவாகுவதுடன், ராஜபக்ச அரசாங்கத்தை இது மேலும் பலப்படுத்தியிருக்கும்" எனவும் அலன் கீனன் சுட்டிக்காட்டியுள்ளார். "மேற்குலகின் புதிய கொலனித்துவத்தின் வெற்றியானது; தனது வெற்றிக் கனிகளைத் திருடுவதற்கு முயற்சிப்பதாக" சிறிலங்கா அதிபர் ராஜபக்ச பரப்புரை மேற்கொண்டிருப்பர் எனவும் அலன் கீனன் ஆனாலும் உண்மையில் இவ்வாறான அச்சமானது, குற்றம் ஒன்றை அனுமதிப்பதற்குப் போதுமான விவாதமாகக் கருதப்படவில்லை என அனைத்துலக நெருக்கடிகள் குழு தெரிவித்துள்ளது. "சிறிலங்காவின் இந்நிலைப்பாடானது அதன் முக்கிய நிர்வாகங்களான நீதி, காவற்துறை மற்றும் அரசியற் கட்சிகளை வலிவற்றதாக்கியுள்ளது. ஆகவே சிறிலங்கா விடயத்தில் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது" எனவும் திரு. கீனன் குறிப்பிட்டுள்ளார். "சிறிலங்காவிற்கு எதிராக பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டால், சிறிலங்காவில் வாழும் எல்லா சமூகங்களுக்குமான மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்கான நகர்வுகளை மேற்கொள்வதற்கு அந்நாட்டு அரசாங்கத்திற்கு மேலும் உந்துதல் அளிக்கும். ஆகவே மனித உரிமைகள் விவகாரம் முக்கிய விடயமாக உள்ளதால் அவை தொடர்பாக விவாதிக்கப்பட வேண்டும். இவ் இலக்கை அடைவதற்கு மனித உரிமைகள் சபையில் எடுக்கப்படும் பிரேரணை ஒரு கருவியாக அமைந்திருக்கும்" என ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்கக் குழுவின் பேச்சாளர் டேவிட் கென்னடி தெரிவித்துள்ளார்.

### சிறிலங்கா இராணுவத்தின் இரகசியத் தடுப்பு முகாமில் பாலகுமாரன், யோகி - ஆங்கில ஊடகம் தகவல்.



விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களான வே.பாலகுமாரன் மற்றும் யோ.யோகி ஆகியோர் சிறிலங்கா இராணுவத்தின் இரகசியத் தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக 'சிறிலங்கா கார்டியன்' தகவல் வெளியிட்டுள்ளது. இவர்கள் இருவரும் போர்முனையில் கொல்லப்பட்டு விட்டதாக சிறிலங்கா அமைச்சர் டியு.குணசேகர முன்னர் தகவல் வெளியிட்டிருந்த நிலையில், நம்பத்தகுந்த சிறிலங்கா இராணுவத்தின் மூத்த அதிகாரி ஒருவர் இவர்கள் தடுப்பில் இருப்பதாக கூறியுள்ளார். தெற்கிலுள்ள இரகசியத் தடுப்பு முகாம் ஒன்றில் இறுக்கமான இராணுவப் பாதுகாப்பின் கீழ்

விடுதலைப் புலிகளின் ஏனைய மூத்த தலைவர்களுடன் இவர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த பாலகுமாரன், யோகி, லோறன்ஸ் திலகர், பாப்பா, புதுவை இரத்தினதுரை உள்ளிட்ட சுமார் 50 விடுதலைப் புலிகள் உடற்சோதனைகளின் பின்னர் பேருந்து ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டதைக் கண்டதாக நேரில் கண்டவர்கள் சாட்சியம் அளித்திருந்தனர். இவர்களின் நிலை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் எந்தத் தகவலையும் வழங்க மறுத்து வருகிறது. இந்நிலையிலேயே பாலகுமாரன், யோகி ஆகியோர் போர் முனையில் கொல்லப்பட்டு விட்டதாக சிறிலங்கா அமைச்சர் டியு.குணசேகர ஒரு ஆண்டுக்கு முன்னர் கூறியிருந்தார்.எனினும் பாலகுமாரன், யோகி ஆகியோர் கடுமையான செயல்முறைகளின் மூலம் விசாரிக்கப்பட்ட பின்னர் நன்றாக கவனிக்கப்படுவதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன. எனினும் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனரா என்பது பற்றியோ, அவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது பற்றியோ தகவல் வெளியிட அந்த வட்டாரங்கள் மறுத்துள்ளன. பாலகுமாரன் பற்றி 'டெக்கன் குரோனிக்கல்' செய்தியாளர், சிறிலங்கா பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவிடம் எழுப்பிய கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காமல் தவிர்த்திருந்த நிலையில் தான் 'சிறிலங்கா' கார்டியன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. கவிஞர் புதுவை இரத்தினதுரை மருத்துவ கண்காணிப்பில் இருக்க வேண்டிய நிலையிலும், லோறன்ஸ் திலகர் மனக்குழப்பத்தினால் தொடர் சிகிச்சை பெறவேண்டிய நிலையிலும் இருப்பதாகவும் 'சிறிலங்கா கார்டியன்' தகவல் வெளியிட்டுள்ளது.

செய்தி18

போர்க்குற்றங்கள் பற்றிப் பேசவே அமெரிக்க இராஜதந்திரிகள் சிறிலங்கா பயணம் ஏஎவ்பி.

இரண்டு மூத்த இராஜதந்திரிகளை அடுத்தவாரம் சிறிலங்காவுக்கு அனுப்பவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இவர்கள், போரின் போது சிறிலங்கா படைகளால் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்குப் பதிலளிப்பது குறித்து பேச்சு நடத்தவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது என்று ஏஎவ்பி செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம், மனிதஉரிமைகள் தொடர்பான கீழ் நிலைச்செயலர் மரியா ஒட்டேரோ மற்றும் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் ஆகியோர் வரும் 12ம் நாள் தொடக்கம் 14ம் நாள் வரை சிறிலங்காவில் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். சிறிலங்கா வரும் ஒட்டேரோ இந்தியா மற்றும் நேபாளத்துக்கும் செல்லவுள்ளார். பிளேக் பங்களாதேசுக்கும் செல்லவுள்ளதாக இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தப் பயணத்தின் போது அமைதி, பொறுப்புக்கூறுதல், நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக இவர்கள் சிறிலங்கா அரசதரப்புடன் கலந்துரையாடுவர் என்றும், சிறிலங்கா அரச மற்றும் சமூகப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்துவர் என்றும் இராஜாங்கத் திணைக்களம் கூறியுள்ளது. இந்தமாத இறுதியில் ஜெனிவாவில் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னதாக இந்தப் பயணம் இடம்பெறவுள்ளது. போர்க்குற்றச் சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை நடத்த, ஜெனிவாவில் கொண்டு வரப்படும் தீர்மானம் கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கும் என்று வொசிங்டன் நம்புகிறது. ஆனால், "இப்போது எம்மீது அமெரிக்காவின் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. எனினும் இந்த நெருக்கடியில் இருந்து எம்மால் மீள முடியும். ஏனென்றால், இந்தியாவின் பலமாக ஆதரவு எமக்கு உள்ளது" என்று சிறிலங்கா அரசாங்க வட்டாரம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏஎவ்பியிடம் கூறியுள்ளது. இதற்கு முந்திய ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டங்களில் நெருக்கடிகள் ஏற்பட்ட போது சீனா, ரஸ்யா, இந்தியாவின் ஆதரவுடன் அதிலிருந்து சிறிலங்கா மீண்டிருந்தது என்றும் ஏஎவ்பி சுட்டிக்காட்டியுள்ளது.

# உண்மை, நீதி, நேர்மையை நிலைநாட்டுங்கள்

## பான் கீ மூனுக்கு ஒரு மடல்



சிறிலங்காவில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கான அழுத்தத்தைப் பிரயோகித்து, நேர்மையை நிலைநாட்டுவதிலும், உண்மை, நீதி, நிலையான மீளிணக்கப்பாடு போன்றவற்றுக்கு ஏங்கித் தவிப்பவர்களுக்காக தலைமைத்துவ ஆளுமையைப் பயன்படுத்திக் கொள்ளும்படி ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனிடம் கேட்டுக்கொண்டுள்ளார், சிறிலங்காவின் அமைதிக்கும் நீதிக்குமான பரப்புரை அமைப்பின் தலைவர் எட்வேர்ட் மொரிமர்.

அமெரிக்காவைத் தளமாக கொண்டியங்கும் huffingtonpost ஊடகத்தில் எழுதியுள்ள பகிரங்க மடலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**செயலாளர் நாயகம், ஐக்கிய நாடுகள் சபை,**
**நியூயோர்க்,** NY 10017

**அன்பிற்குரிய செயலாளர் நாயகம் அவர்கட்கு,**

சிறிலங்காவில் பொறுப்புக் கூறல் விவகாரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுனர் குழுவின் அறிக்கை தொடர்பாக கடந்த 2011, யூன் 02 நாள் என்னால் எழுதப்பட்ட திறந்த மடலிற்குப் பின்னர் தற்போது நான் இதனை எழுதிக் கொள்கிறேன். நான் முன்னைய மடலை எழுதியதன் பிறகு, ஐ.நா வல்லுனர் குழுவின் அறிக்கையை நீங்கள் ஐ.நா மனிதஉரிமைகள் சபையின் தலைவருடன் பகிர்ந்து கொண்ட தங்களின் நகர்வானது எம்மை மிக்க மகிழ்வில் ஆழ்த்தியது.

ஆனால்,மனிதஉரிமைகள் சபையின் தலைவர் அவ் அறிக்கையை உரிய விதத்தில் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை என்பது எமக்கு வருத்தத்தை அளிக்கின்றது. இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மையான பரிந்துரைகள் இன்னமும் சிறிதளவில் கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை எனத் தோன்றுகின்றது. இதற்கும் மேலாக, 'இது ஐ.நா வின் அதிகாரபூர்வ ஆவணம் இல்லை' என்பதைச் சுட்டிக்காட்டிய சிலரால், இவ் அறிக்கை மட்டுமல்ல, இதனைத் தயாரித்த வல்லுனர்கள் மீது கூட தொடர்ச்சியான பழிப்புரைகள் மேற்கொள்ளப்படுவதை நாம் புரிந்து கொள்கின்றோம். அதாவது சிறிலங்காவில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதை நோக்காகக் கொண்டு, தங்களால் நியமிக்கப்பட்ட வல்லுனர் குழுவால் தயாரிக்கப்பட்ட இவ் அறிக்கையானது 'ஐ.நா வின் அதிகாரபூர்வ ஆவணம்' என்பதையும், இக்குழுவானது ஐ.நாவின் அமைப்பு முறைமைக்குள் உருவாக்கப்பட்ட ஒன்று என்பதையும் செயலாளர் நாயகம் ஆகிய தாங்கள் வெளிப்படையாக விளக்கம் ஒன்றை வழங்கி, இவ் அறிக்கை தொடர்பாக ஏற்கனவே உள்ள தவறான கற்பிதங்களைத் திருத்தியிருந்தால், சிறிலங்கா தொடர்பான பொறுப்புக்கூறல் விவகாரத்தை வெளிக்கொணரும் ஆரோக்கியமான கலாச்சாரத்திற்காக பாடுபடும் எல்லாத் தரப்பினர்களுக்கும் அது மிகப் பெறுமதி மிக்க ஒன்றாக அமைந்திருக்கும். வல்லுனர் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் மூன்று வெவ்வேறு குழுக்களை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளன. அதாவது ஐக்கிய நாடுகள் சபை, அனைத்துலக விசாரணை அமைப்புக்கள் மற்றும் சிறிலங்கா அரசாங்கம் ஆகிய மூன்று தரப்பினரும் நடைமுறைப்படுத்த வேண்டிய பரிந்துரைகள் அவ் அறிக்கையில் வரையப்பட்டுள்ளன. ஆனால் இப்பரிந்துரைகள் எவையும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் சிறிலங்கா அரசாங்கம் தவறிழைத்தமையானது, மே 26, 2009 அன்று தங்களாலும், சிறிலங்கா அதிபர் ராஜபக்சவாலும் மேற்கொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கையின் சரத்தை மீறியதையே தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையைக் கருத்திற் கொள்ளும் போது, வல்லுனர் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை உள்ளக ரீதியில் மீளாய்வு செய்வதற்காகத் தங்களால் நியமிக்கப்பட்ட Ms Thoraya Obaid, தனது பணியை ஆரம்பிக்க முடியாத நிலையிலிருந்தமையும், இதனால் இவர் தனது இப்பணியைக் விட்டமையும் எம்மை மிகவும் அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது. மிகத் தேவைப்பாடுடைய இவ் அறிக்கை தொடர்பான மீளாய்வைப் பூர்த்தி செய்வதற்கான புதிய நிகழ்ச்சி நிரலையும், ஒழுங்குபடுத்தல்களையும் அறிந்து கொள்வதில் நாம் மிகவும் ஆர்வமாக உள்ளோம்.

'சம காலத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய பின்வரும் செயற்பாடுகளை உள்ளடக்கிய நோக்கத்தைக் கொண்ட சுயாதீன அனைத்துலகப் பொறிமுறை ஒன்றை உடனடியாக உருவாக்குமாறு' நாங்கள் உங்களிடம் ஏற்கனவே கோரியிருந்தோம். அதனையே இங்கே மீண்டும் வலியுறுத்திக் கேட்பதுடன், தங்களிடம் பரிந்துரைக்கப்படும் விடயங்களில் இது மிக முக்கிய பரிந்துரையாக உள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

01. சிறிலங்கா அரசாங்கத்தால் தேசிய அளவில் உருவாக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவானது நீதியான, பயனுள்ள விசாரணைகளை மேற்கொண்டுள்ளதா என்பதை கண்காணித்து மதிப்பீடு செய்வதுடன், அதன் விசாரணை முடிவுகள் தொடர்பாக ஒழுங்குமுறையில் செயலாளர் நாயகத்திற்கு கருத்துக்கள், ஆலோசனைகள் வழங்கல்.

02. சிறிலங்கா அரசாங்கத்தால் தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் நீதியான மற்றும் பயனுள்ள வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதைக் கருத்திற் கொண்டு யுத்த மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

03. வல்லுனர் குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஏனைய அமைப்புக்களால் சேகரிக்கப்பட்ட தகவல்கள் உள்ளடங்கலாக, சிறிலங்காவின் இறுதிக்கட்ட யுத்தத்துடன் தொடர்புபட்ட அனைத்துத் தகவல்களும் ஒன்று திரட்டப்பட்டு பொருத்தமான எதிர்காலப் பயன்பாட்டிற்காக பாதுகாத்து வைத்தல்.

இப்பரிந்துரையை உடனடியாக நிறைவேற்றுமாறு 133 நாடுகளைச் சேர்ந்த இதனுடன் சம்பந்தப்பட்ட 12,000 இற்கும் மேற்பட்ட நபர்களின் கோரிக்கையை எமது இணையத்தளம் ஊடாக தங்களின் பொது மின்னஞ்சலிற்கு அனுப்பி வைத்திருந்தோம்.

ஆனால் இதுவரை இது தொடர்பில் எவ்வித முன்னேற்றத்தையும் எங்களால் பார்க்க முடியவில்லை.

இவ்வாறானதொரு மேன்மைமிக்க அறிக்கை தொடர்பாக தாங்கள் தங்களுக்கான கடப்பாட்டை அதாவது கட்டளையை வழங்காததால், இதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தாங்கள் எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்வீர்கள் என்பதை எண்ணி நாம் மிக கவலையடைகின்றோம்.

சிறிலங்காவில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கான அழுத்தத்தைப் பிரயோகித்து, நேர்மையை நிலைநாட்டுவதிலும், உண்மை, நீதி, நிலையான மீளிணக்காப்பாடு போன்றவற்றிற்காக ஏங்கித் தவிப்பவர்களிற்காக தாங்கள் தங்களது தலைமைத்துவ ஆளுமையைத் தொடர்ந்தும் பேணுவீர்கள் என்பதில் நாம் மிக்க நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அன்புடன், எட்வேர்ட்

Edward Mortimer CMG
Chair, the Sri Lanka Campaign for Peace and Justice
28 Charles Square, London, N1 6HT



# Dr.D.V.Palanivell Matrimonial Services

dvpalanivell@gmail.com
07506153885

Applicants must be already living in the UK for a number of years and have high ranking professional jobs and no time wasting people. I will be a mediator to pass and relay information. You contact me via email and request me what raasi (Horoscope) you are interested.If I get a suitable match I will get your permission by email before your identity is released.In reality it I you first contact the other party for photograph and subsequent meetings where ever you like,I prefer parents present for the first meeting.Sleeping together is no...no..no..before wedding.You need to email me the fullname and horoscope and request me the origin of parents home town in Srilanka.

**GROUP (A) PARENTS BIRTH PLACE IN SRILANKA**

THALAYADI,PT.PEDRO,VIYAPARIMOOLAI,POLIKANDI,VVT,
THONDAIMANAR,MAILIDDY,KKS,SUTHUMALAI,PART OF THELLIPALAI ETC.

**GROUP (B) PARENTS TOWN ORIGIN IN SRILANKA:**

NALLUR,KALVIYANKADU, PUTHUR, NEERVALY,
VANNAR PANNAI, KARAIVEDDI, UDUPPIDDY

SOMETIMES IT IS DIFFICULT TO WRITE IN ANEWSPAPER BUT YOU CAN OPENLY TELL ME IN EMAIL. WE CANNOT PUT IN A AND B.THERE COULD BE VARIOUS OTHER GROUP YOU CAN EMAIL TO ME CONFIDENTIALLY. I NEED TO SEE YOUR UK CITIZENSHIP/PERMANENT RESIDENCY STATUS AND NEED SCANNED DOCUMENT ATTACHED TO EMAIL. DO NOT FAKE DOCUMENTS.IN THE PAST 5% APPLICANTS WERE CONFUSING ME THE TAKE DUPLICATED COPY OF A FRIEND THEN USE TECHNOLOGY TO FAKE DOCUMENT, AND NEVER CALL THE GIRL FOR PRIVATE MEETING AND TRY CHARMING AND LEAD TO SEX.

SEX AFTER WEDDING ONLY AND AFTER PARENTS AND GRAND PARENTS BLESSING ONLY.

DO NOT ASK ME TO LEAK CONFIDENTIAL INFORMATION.IF HOROSCOPE TALLY I WILL CONFIRM YOUR VIEW BEFORE GIVING THE CONTACT INFORMATION.THEN PARENT WILL MEET YOU TO SHOW THE PHOTO,ORIGINALS OF THE JOB,IMMIGRATION AND DEGREE

CERTIFICATE IN A PLACE MUTUALLY AGREED, THEN ONLY BOY AND GIRL MEET AND PARENT STAYING ABOUT 20 YARDS NEARBY, YOU TALK FOR 30 MINUTES,THEN YOU DECIDE WITH PARENTS FOR OTHER MEETING

THERE WILL BE ONE OFF PAYMENT OF £50 PAYABLE TO: D.V.PALANIVELL FOR 2 YEARS OF SERVICE VIA EMAIL AND TELEPHONE.

**I WILL MONTHLY ADVERTISE IN TAMIL NEWS PAPERS "PUTHINAM" AND "KAALAIKATHIR"**
**I AM CREATING A SPECIAL WEBSITE VERY SOON.**

**79 Meadfield Road, Langley,Slough, Berkshire, SL3 8HY.**

MY AGENCY IS NOT A SPECIALIST IN DIVORCEE AND REMRRIAGE CATEGORY.I ONLY DEAL WITH FIRST TIME MARRIAGES.IF YOU SEND ME PHOTOCOPY OF YOUR DOCUMENTS WHICH IS IMMIGRATION STATUS,DEGREE CERT,EMPLOYMENT STATUS,THEN YOU SHOULD SHOW THE OTHER PARTY ON YOUR FIRST MEETING.PARENTS ARE CONCEREND AND DO NOT THING IT AS AN INSULT IF YOU ARE ASKED.

**I WISH GOOD LUCK IN FINDING YOUR PARTNER.GOD BLESS US.**



**Send money today!**





**Meet your loved ones in Sri Lanka next month!!!**

## Amazing offer!!!!!!

**Send money to Sri Lanka through Bank of Ceylon (UK) Ltd.**
**&**
**Become eligible to win a Return Air Ticket* to Sri Lanka**

## 1 winner every month

**Offer begins from August 2011 & ends in July 2012**

Personal remittances sent to Sri Lanka through Bank of Ceylon (UK) Ltd during the month will be eligible for a draw to be held in the following month. Each remittance irrespective of the amount will have an equal chance. Draws will be held monthly for a period of 12 months until July 2012. *conditions apply

**The Terms & Conditions**

1. The prize is an economy class return air ticket from a London airport to Sri Lanka by SriLankan Airlines.
2. Winners will be drawn at random from all entries received within 2 weeks of each month end. The first draw will take place in September 2011 and the final draw in August 2012. Winners will be notified by letter.
3. The date of travel selected by the winner is subject to availability and the prize must be taken within 3 months of the winner being notified of their win. The winner must provide Bank of Ceylon (UK) Ltd with their preferred date of travel within 28 days of being notified of their win..
4. The prize may be exchanged for the value of a return air ticket to Sri Lanka by SriLankan Airlines (as quoted by SriLankan Airlines on the date of receipt by Bank of Ceylon (UK) Ltd of the winner's decision to take the cash alternative) or £500 whichever is less.
5. The winner will require a valid passport and is responsible for any other necessary travel documentation and visas.
6. The winner is solely responsible for travel to and from the airports and all insurance, applicable taxes and for any costs. expenses and charges not specified as being included in the prize description in the competition information. The winner agrees that Bank of Ceylon (UK) Ltd has the right to publish the winner's name and picture in marketing and commercial advertisements.
7. Staff of Bank of Ceylon (UK) Ltd and their family members are not entitled for the draw.
8. The prize is subject to the terms and conditions of SriLankan Airlines.

**For more details, please contact Chandrika on 0207 456 0476**
**Email: chandrika@bankofceylon.co.uk**


BANK OF CEYLON (UK) LTD
BOC
Gateway to Sri Lanka

**1 Devonshire Square, London EC2M 4WD,**
**Tel: 020 7377 1888 Fax: 020 7377 5430**
**Web : www.bankofceylon.co.uk Nearest Tube: Liverpool Street**

(Bank of Ceylon (UK) Ltd is 100% owned by Bank of Ceylon, Sri Lanka) Bank of Ceylon (UK) Limited is authorised and regulated by the Financial Services Authority (FSA Referance No: 514744) Registered in England and Wales (Company Registration No:06736473), Registered address and Head Office: 1 Devonshire Square,London EC2M 4WD



பல தொன்கள் எடையான ஹெறிங் மீன்கள் சென்றவாரம் வடநோர்வேயில்கரை சேர்க்கப்பட்டமைக்கான காரணம் விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தி உள்ளது




ஜெர்மனி செக்கோஸ்லாவாக்கிய எல்லையில் பனியினால் ஆக்கப்பட்ட கத்தோலிக்க தேவாலயம்.

## சிறிலங்காவின் கொலைக்களங்கள்...

முதல் பக்கத் தொடர்ச்சி

அவுஸ்ரேலியாவின் கிறின் சென்ட்டர் லீ றியனோனும் இணைந்து நோர்வேயின் நோபல் பரிசுக்குழுவுக்கு இந்தப் பரிந்துரையை அனுப்பியுள்ளனர். சரியான நேரத்தில் சனல்4 வெளியிட்ட இந்த ஆவணப்படம் சிறிலங்கா அரசின் அனைத்துலக பிரகடன் மீறல்களை வெளிச்சத்துக்கு கொண்டு வந்ததாகவும், இது சிறிலங்காவில் உள்ள எல்லா மக்களுக்கும் உண்மை, நல்லிணக்கம்,. அமைதி ஆகியவற்றுக்குப் பங்களிப்பு செய்துள்ளதாகவும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் மக் டொனா தெரிவித்துள்ளார். சனல் 4 ஆவணப்படத்தை நோபல் பரிசுக் குழுவுக்கு பரிந்துரைத்துள்ளதன் மூலம் சிறிலங்காவில் தொடர்ந்தும் இடம்பெறும் மனிதஉரிமை மீறல்கள் குறித்து உலகின் கவனத்தை ஈர்ப்பதுடன், அங்கு நீண்டகாலமாக பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு நீதியையும், அமைதியையும் கொண்டு வரும் என்று நம்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




"My brothers' keepers: In Sri Lanka the grip of the Rajapaksas only tightens" என்ற தலையங்கத்தில் எகோனோமிஸ்ட் சஞ்சிகையில் வெளிவந்துள்ள கேலிச்சித்திரம்

## ஜெயலலிதாவுடன் நயன் சந்திப்பு-ரூ.5 லட்சம் 'தானே' நிதி




தமிழ்நாட்டின் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களை நாசமாக்கிய தானே புயலினால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண நிதிக்கு நடிகை நயன் தாரா ரூ5 லட்சம் நிதி வழங்கி உள்ளார்.

தொழிலதிபர்கள், திரை உலக நட்சத்திரங்கள், அரசியல்வாதிகள் முதல்வர் ஜெயலலிதாவிடம் தானே புயல் நிவாரண நிதி வழங்கி வருகின்றனர். நடிகர்கள் கமல்ஹாசன், ரஜினிகாந்த், சிவகுமார் உள்ளிட்டோரும் தானே புயல் நிவாரண நிதி வழங்கியிருந்தனர். இந்நிலையில் தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை நடிகை நயன்தாரா இன்று சந்தித்தார்.

தானே புயல் நிவாரண நிதியாக ரூ5 லட்சத்துக்கான காசோலையை அவர் முதல்வரிடம் வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நயன், அனைவரும் தானே புயல் நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.






## மருத்துவ கதிர்

# வெல்லமும் பனை வெல்லமும்



பனை வெல்லம் சமையலில் இந்தியாவில் பரவலாக பயன்படுகிறது. ஒரு சிறு துண்டு வெல்லத்தை சாம்பார், ரசம் இவற்றில் போடுவது வழக்கம். குஜராத்தில் பருப்பு சூப்புகளில் வெல்லம் சேர்ப்பதுண்டு. வெல்லத்தால் கடலை மிட்டாய், எள்ளுருண்டை போன்றவை செய்யப்படுகின்றன.

**எலிகளை வைத்து நடத்திய பரிசோதனையில் பனைவெல்லம், நிலக்கரி மற்றும் ஸிலிகா தூசிகளால் ஏற்படும் நுரையீரல் பாதிப்பை குறைக்கும் என்பது தெரிய வந்துள்ளது.**



வெல்லம் என்று பொதுவாக நாம் சொல்வது, கரும்புச்சாறிலிருந்து எடுக்கப்படும் வெல்லத்தை தான். ஆனால் பனை மரத்திலிருந்தும், பேரீச்சமரத்திலிருந்தும் கூட, நல்ல தரமான வெல்லம் கிடைக்கிறது. ஏன், ஜவ்வரிசி மரம், தென்னை மரத்திலிருந்தும் எடுக்கப்படும் மரச்சாற்றிலிருந்து வெல்லம் கிடைக்கும்.

### பனைமரம்

இந்தியா முழுவதும், குறிப்பாக தென் இந்தியாவில் பரவலாக காணப்படும் உபயோகமான மரம் பனைமரமாகும். தமிழ் நாட்டில், பனைமரத்தை 'கற்பக விருஷம்' என்பார்கள். ஏனென்றால் மரம் முழுவதும் பயன்படும். 800 வகைகளில் பனைமரம் உபயோகமாகிறது. நெடிய மரமாக 30 மீட்டர் உயரம் வரை பனைமரம் வளரும். இலைகள் நீட்டமாக விசிறி போல் இருக்கும். இலைகள் 23 மீட்டர் நீளம் இருக்கும். பூக்கள் சிறியவை. பழங்கள் (நுங்கு) பெரியதாக, வட்டமாக, பழுப்பு நிறத்துடன் இருக்கும்.


மரங்களிலிருந்து பால் போன்ற மரச்சாறு எடுக்கப்படும். மரம் நட்டபின் 15 வருடம் வளர்ந்தபின், பால் எடுப்பதை ஆரம்பிக்கலாம். இதை 3040 வருடங்கள் வரை செய்யலாம். வருடத்தில் 45 மாதங்கள் மரச்சாற்றை (பால்) எடுக்கலாம். ஒரு பனை மரம் 225360 லிட்டர் மரச்சாற்றை (வருடத்தில்) கொடுக்கும். பனைமரம், பேரீச்சமரம் போல, ஒரு பாலைவன தாவரம்.

பனை மரச்சாற்றை (பாலை) ஒரு பெரிய, அகலமான, அதிக ஆழமில்லா பாத்திரத்தில் காய்ச்சப்படும். 200 டிகிரி சென்டிகிரேட் வரை காய்ச்ச, பனஞ்சர்க்கரை, வெல்லம் இவை கிடைக்கும். பனை வெல்லத்தில் தாதுப்பொருட்கள் அதிகம். ஆயுர்வேதத்தில், தொண்டை மற்றும் நுரையீரல் பாதிப்புகளுக்கு கொடுக்கும் மருந்துகளில் வெல்லம் சேர்க்கப்படுகிறது.

### பனை பொருட்களின் மருத்துவ குணங்கள்

பனை வெல்லம், பனங்கற்கண்டு வாத பித்தம் நீங்கும். பசியை தூண்டும். புஷ்டி தரும். முன்பு சொன்னபடி, நுரையீரல் மற்றும் தொண்டை பாதிப்புகளுக்கு கொடுக்கப்படும் ஆயுர்வேத மருந்துகளில் பனைவெல்லம் சேர்க்கப்படுகிறது.

வெல்லம் அயச்சத்து மிகுந்தது. சோகை நோய்களுக்கு மருந்து. தமிழகத்தில் பனை மரத்தின் வெல்லத்தை இரண்டு வகையாக சொல்வார்கள். முற்றிலும் சுத்தப்படுத்தாத, கெட்டியான கரு நிற வெல்லத்தை "கருப்பட்டி" என்பார்கள். இதை சுத்தப்படுத்தப்பட்ட படிகங்களாக உருவாகும் சர்க்கரை 'பனங்கற்கண்டு' எனப்படும் இதற்கு மருத்துவ குணங்கள் உள்ளன. பாலில் பனங்கற்கண்டை சேர்த்து காய்ச்சி குடித்தால் மார்புச்சளி இளகும். முக்கியமாக தொண்டைப்புண், வலி இவை அகலும். சங்கீத வித்வான்கள் எப்போதும் பனங்கற்கண்டு கலந்து காய்ச்சிய பாலையே அருந்துவது வழக்கம். அதனால் அவர்களின் குரல் வளம் குறையாமல், பாதுகாக்கப்படுகிறது. கூடவே சில மூலிகைகளும் சேர்க்கப்படுவது உண்டு.



தவிர பனங்கற்கண்டு, உடல் உஷ்ணம், காங்கை, நீர் சுருக்கு, ஜுர வெப்பங்கள் இவற்றுக்கு நல்லது. ●

# வளர்சிதை மாற்றம்

## Metabolism

டயாபடீஸ்ஸை metabolism கோளாறு என்கிறோம். metabolism என்பது உடலில் வளர்ச்சிக்காக ஏற்படும் வேதியல், ரசாயன மாற்றங்கள் மற்றும் சீரண மண்டல இயல்பாடுகள், உணவு சத்துப் பொருளாக மாற்றுதல், உயிரணுக்கள் (Cells), திசுக்கள் உண்டாக இவற்றுக்கு தேவையான எரிபொருள்சக்தி போன்ற எல்லாவித இயல்பாடுகளையும் குறிக்கும் ஒரே வார்த்தை. நம் உணவு எவ்வாறு ஜீரணிக்கப்படுகிறது என்று முதலில் நாம் தெரிந்து கொள்வோம்.

நாம் பலவித உணவுகளை பலவித இடங்களில் உண்ணுகிறோம். நாம் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் சாப்பிட்டாலும் சரி, "கையேந்தி" பவன்களில் சாப்பிட்டாலும் சரி, இல்லை வீட்டில் சாப்பிட்டாலும் சரி, நம் உடல் நாம் சாப்பிடும் உணவை புரிந்து கொள்ளாது. அதற்கு தயிர் சாதமும் ஒன்று தான், மட்டன் பிரியாணியும் ஒன்று தான். அதற்கு தெரிந்த தெல்லாம், மாவுச்சத்து, புரதம், கொழுப்பு, விட்டமின்கள், தாதுப்பொருட்கள் இவை தான்.

நாம் உணவு உண்பது எதற்காக? உடல் வளர்ச்சிக்காக, உடல் உறுப்புகள் சரிவர, சுறு சுறுப்பாக இயங்க, உடலை பாதுகாக்க, உடல் வலிமைக்கரக, சுருக்கமாக சொன்னால் உயிருடன் வாழ உணவு தேவை. நாம் உண்ணும் உணவில் உள்ள மாவுப்பொருளை சர்க்கரையாகவும், புரதத்தை அமினோ அமிலமாகவும், கொழுப்பை, கொழுப்பு அமிலங்களாகவும் (Glycerol) கிளிசராலாகவும் மாற்றப்படுகின்றன. இதற்கு வயிற்றில் உண்டாகும் ஜீரணத்திரவங்கள் (Gastric juices), கல்லீரலால் உண்டாகும் பித்த நீர் (Bile), கணையம் தயாரிக்கும் என்ஸைம்களும் உதவுகின்றன.

மாவுப்பொருட்கள் (Starch, Carbohydrates) மூன்று ரக சர்க்கரைகளாக மாற்றப்படுகின்றன. அவை

1. ஒற்றை சர்க்கரை (Mono - Saccharide) இவை பழங்கள், பால் சார்ந்த உணவுகள், தேன், அத்திப்பழம் இவற்றிலிருந்து கிடைக்கும் Fructose. பழச்சர்க்கரை எளிதில் ஜீரணமாகி உடனே ரத்தத்தில் கலக்கும்.

2. இரட்டை சர்க்கரை (Di - saccharide) இரண்டு மானோ சாக்ரைடுகள் சேர்ந்தவை. மால்டோஸ் (Maltose), லாக் டோஸ் (Lactose) மற்றும் சுக்ரோஸ் (Sucrose). மால்டோஸ், முளைகட்டிய தானியங்களிலிருந்து கிடைப்பது. லாக்டோஸ் பாலில் இருந்து கிடைப்பது. சுக்ரோஸ், கரும்பு, சர்க்கரை பீட்ருட்டிலிருந்து கிடைப்பது. இந்த direct சர்க்கரையான சுக்ரோஸ் கடந்த 50 வருடங்களில்

அடுத்த பக்கம் பார்க்க



# நார்சத்து நமது உயிர்சத்து

நமது உணவு முறை தவறுகளாலேயே பல நோய்கள் தோன்றுகின்றன. ஆகவே நமது உணவுகள் பற்றியும், அதன் தன்மைகளை பற்றியும் தெரிந்து கொண்டால் தான். அதனை நாம் பயன்படுத்த முயல்வோம். இல்லையேல் தேவையானவற்றை நீக்கியும், தேவையற்றவற்றை உபயோகித்தும் நோய்களுக்கு ஆளாகி விடுவோம். உணவுகளில் மிகவும் முக்கியமானது நார்ச்சத்து. இது பல நோய்கள் வராமல் தடுத்து காப்பாற்றவல்லது. இந்த நார்ச்சத்து மிகவும் அதிகமாக பழங்கள், காய்கள், கீரைகள், தானியங்கள் முதலியவற்றில் தான் அதிகமாக உள்ளது. இதனைப்பற்றி நாம் தெரிந்துக் கொண்டு, பயன்படுத்தி நோய்கள் நீங்கி நலமுடன் வாழ்வோம்.

பழங்களிலும், காய்கறிகளிலும், தானியங்களிலும், கீரைகளிலும் மிக எளிதில் கிடைக்கும் உணவுப் பொருளாக இருப்பது நார்ச்சத்து ஆகும். பழங்கள், காய்களில் அதன் மேல் தோல்களிலும், தானியங்களில் உமிகளிலும் உள்ளது. தண்ணீர் உட்பட மிக எளிதில் கிடைக்கும். எந்த, பொருட்களையும் நாம் துதிப்பதுமில்லை, மதிப்பதுமில்லை உமி என்பது செல்லுலோஸ் என்னும் நார்சத்து ஆகும். தவிடு என்பது தையமின் ஆகும். தவிட்டில் ஏராளமான வைட்டமின்கள் உள்ளது என்று பல ஆராய்ச்சிகள் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால் செல்லுலோஸ் பற்றி நாம் கண்டு கொள்வதில்லை. தற்போது தான் செல்லுலோஸ் என்னும் நார்ச்சத்து, நமது உடலுக்கும், குடலுக்கும் ஓர் இன்றியமையாத வேர் சத்து என்று புரிந்துக் கொண்டுள்ளனர். இருப்பினும் இன்னும் இதனை யாரும் பயன்படுத்துவதில்லை.

பல சாலிக்கு பாலிசாக்ரைடுகள் கூட்டு சர்க்கரை உடலுக்கு சக்தி தரும் உணவுகளில் கார்போஹைட்ரேட்டுகள் முக்கியமானவை. சக்தி மாற்றத்திற்கு நமது உடல், கார்போஹைட்ரேட்டைத் தான் தேர்ந்தெடுக்கிறது. இது இல்லாத போதே புரதமும், கொழுப்பும் எரிக்கப்படுகின்றன. இது நமது உடலில் கீழ்க்கண்டவாறு மாற்றப்படுகின்றன.

பாலி சாக்ரைடுகள் ஸ்டார்ச்சு, டெக்ஸ்டிரின், கிளைகோஜன், செல்லுலோஸ்

டைசாக்ரைடுகள் இரட்டை சர்க்கரை சுக்ரோஸ், மால்டோஸ், லாக்டோஸ்

மோனோ சாக்ரைடுகள் ஒற்றை சர்க்கரை குளுக்கோஸ், பிரக்டோஸ், காலக்டோஸ் ஆகவும் மாற்றப்படுகின்றன

நாம் பாலிசாக்கரைட்டுகளை உண்டு, அவைகள் நமது சீரண நீர்களால் டைசாக்கரைட்டுகளாகவும், மோனோ சாக்கரைட்டுகளாகவும், மாற்றப்படுவதே சரியான வழியாகும். அவ்வாறில்லாமல், மோனோ சாக்கரைட்டுகளையே நாம் உண்போமானால் செரிமான பாதையில் தடைகள் ஏற்படும். ஆரோக்கியமும் கெடும்.

நார்சத்து என்றால் என்ன செல்லுலோஸ் பாலிசாக்கரைடுகளில் சேர்ந்தே உள்ளது. இது தாவரங்களில் மட்டுமே காணப்படும். நார்ப்பொருளாகும். தாவரங்களில் உள்ள உயிரணுக்களின் சுற்றுச்சுவரில் இந்த நார்ச்சத்து இருப்பதால் தான், தாவரங்களில் மட்டும் இது காணப்படுகிறது. விலங்குகளின் செல்களில் சுற்றுச்சுவர் கிடையாது. அதனால் இது, சீரண நீர்களால், சீரணிக்கப்படுவதில்லை. சீரணத்திற்குப் பிறகும் மாற்றம் அடையாது அப்படியே உள்ளது.

நார்ச்சத்து உள்ள உணவுப் பொருட்கள் முழு தானியங்கள், பயிறுகள், காய்கறிகள், பழங்கள் மற்றும் கீரைகளில் ஏராளமான செல்லுலோஸ் அடங்கி உள்ளது. தானியங்களையும் பயிறுகளையும் முதல் நாள் ஊற வைத்து, இரண்டாம் நாள் முளை கட்டுகின்ற போது நார்ச்சத்து பெருக்கமடைகிறது. முருங்கக் கீரைகளிலும், அகத்திக்கீரையிலும் இது நிரம்ப உண்டு. காய்கறிகளில் குறிப்பாக அவரை இனங்களில் இதற்கு குறைவில்லை. மாமிச உணவுகளிலும், தோல் நீக்கப்பட்ட தானியங்கள், பருப்புகள் மற்றும் கிழங்குகளில் இது இல்லை.

## மலச்சிக்கலுக்கு மாமருந்து

நார்ச்சத்து அடங்கிய உணவு, நமது குடலுக்கு வலிமையை சேர்க்கிறது. இந்த நார்ச்சத்து மலச்சிக்கலுக்கு மருந்தாக அமைகிறது. அது மட்டுமல்லாமல் மலச்சிக்கலை வருமுன் காக்க இந்த நார்ச்சத்து மிகவும் முக்கியமானது. இந்த செல்லுலோஸ் எனப்படும். நார்ச்சத்து உணவுடன் செல்லும் நீரை ஈர்த்து கொள்ளும் வேலையை செய்கிறது. இதனால் எப்பொழுதும் மலம் இளக்கமாகவே இருந்து, குடலில் எங்கும் தங்காமல் அவ்வப்போது வெளியேறிவிடுகிறது. இந்த நார்ச்சத்தை உண்ண நாம் தவறிவிட்டால், மலம் கெட்டிபட்டு காலைகடனை தினமும் செய்யமுடியாமல் இரண்டு (அ) மூன்று நாட்களுக்கு ஒரு முறை தான் மலம் கழிக்க முடியும். மலம் கெட்டிபடுவாதல் சுலபமாக மலத்தை வெளியேற்ற முடியாமல், தேவைக்கும் அதிகமான சக்தியை கொடுத்து முக்கி, முனகி மலத்தை வெளியேற்றுவதால் மலவாயில் உள்ள இரத்த குழாய்கள் அதிக இரத்த ஓட்டத்தை கொடுக்க நேரிடுகிறது. இதனால் நாளடைவில் அந்த இரத்த குழாய்களுக்கு இரத்த தேக்கம் ஏற்பட்டு, அந்த இரத்த குழாய்கள் வீக்கம் அடைந்து நாளடைவில் வெடித்து விடுகின்றன. இதை தான் மூலநோய் என்று சொல்கிறோம். இதனால் சரிவர உட்கார முடியாமை, அதிக இரத்தபோக்கு, அடிக்கடி மலம் கழிக்க வேண்டும். போன்ற உணர்வு, இரத்த சோகை, உடல் மற்றும் மனச்சோர்வு, பசியின்மை, போன்றவை ஏற்படுகின்றன. இந்த மூலநோய் முற்றிவிடாத இரத்த போக்கால் குடல்களில் சோர்வு ஏற்பட்டு, குடல்கள் வறண்டு குடல்புற்று நோயாக உருவெடுக்கும் நிலை ஏற்பட்டு வருகிறது. ஒரு சாதாரண விஷயமான இயற்கையில் கிடைக்கும் பழங்கள், தானியங்கள் மற்றும் கீரைகளை குறிப்பாக நார்சத்து உள்ள தோல்பகுதியை நீக்காமல் உண்ண தவறுவதால் ஏற்படும் விளைவுகள் பலப்பல. எனவே நார்சத்தின் பயன்களை அறிந்து அவற்றை உணவில் சேர்த்து பலன் பெறுவோம். குறிப்பாக தினமும் வாழைப்பழம் சாப்பிடும் பழக்கத்தை கொண்டாலும் கூட 50% மலச்சிக்கலை தவிர்க்கலாம். பொதுவாக நாம் அனைவரும் வீட்டில் செய்யும் தவறுகள் பலப்பல. அவை முதலில் அரிசி பொதுவாக தவிடு நீக்கிய அரிசியை தான் நாம் வாங்குகிறோம். தவிடு நீக்கிய அரிசியின் மேல் உமி என்னும் நார்ச்சத்து படர்ந்து காணப்படும். இது மிக மிக முக்கியமானது. அரிசியை கழுவுவதின் மூலம் 50% உமியை நாம் இழந்து விடுகின்றோம். அரிசியை ஊற வைத்து பின்பு கழுவி சமைப்பதனின் மூலம் 80% நார்சத்தை நாம் இழந்து விடுகின்றோம். சமைத்த சாதத்தை வடிப்பதின் மூலம் 100% நார்சத்தை நாம் இழந்து விடுகின்றோம். மீதம் நாம் உண்பது ஒன்றுமே இல்லாத சாதம். அதை சாப்பிடுவதின் மூலம் ஒரு பயனுமில்லை. இதற்கும் மேலாக ஒரு படி மேலே போய், ஒரு சிலர் தவிடு நீக்கிய அரிசியை பாலீஷ் போடுவதின் மூலம் உமி என்கிற அந்த நார்சத்தை 100 முதலிலேயே இழந்து விடுகின்றனர். பிறகு சமைத்து சாப்பிடுவதால் சக்தி, நேரம் போன்றவை வீணாவதை தவிர வேறு ஒரு பலனும் நம்மை வந்தடைவதில்லை. எனவே அரிசியை பாலீஷ் போடுவதை அவசியம் தவிர்க்க வேண்டும். மேலும் அரிசியை ஒரு முறை கழுவிவிட்டு, இரண்டாவது முறை ஊறவைக்கும் தண்ணீரோடு அரிசியை வேக வைத்து, கஞ்சி வடிக்காமல் சாதம் செய்து சாப்பிட்டால் அரிசியிலுள்ள 80 நார்ச்சத்தை நாம் பெறலாம் என்பதில் சந்தேகமில்லை. மேற்கூரிய தவறுகளை திருத்தி கடைபிடித்தால் வேண்டிய நார்சத்தை பெற்று நலமோடிருக்கலாம்.

---

அதிகமாக உட்கொள்ளபடுவதால், பற்கள் சிதைவு, டயாபடீஸ், உடல்பருமன், இருதயநோய், இவை அதிகமாகி விட்டன.

3. பல சர்க்கரை (Poly - Saccharides) இது அரிசி, கோதுமை, கேழ்வரகு, கிழங்குகளிலிருந்து கிடைக்கும். இது கல்லீரலில் க்ளைகோஜன்(Glycogen) என்ற சர்க்கரையாக சேமித்து வைக்கப்படுகிறது.

தசைகளும் Glycogenஐ சேமித்து வைக்கும். இந்த மாதிரி சேமித்து வைக்கப்பட்ட Glycogen ஒரு நாள் கலோரி தேவைக்கு போதுமானது.

இந்த மாதிரி மாற்றப்பட்ட சர்க்கரை சக்தியை உடலெங்குமுள்ள செல்கள் மற்றும் திசுக்களுக்கு கொண்டு செல்வது ரத்தத்தின் கடமை. பொறுப்பாக இந்த சக்தியை ரத்தம் மாத்திரம் கொண்டு சென்றால் அதை செல்கள் ஏற்காது. ரத்தத்துடன் கூட, செல்களுக்கு அறிமுகமான ஒரு ஹார்மோன் உதவியாளர் தேவை. இந்த உதவியாளர் தான் 'இன்சுலின்' செல்கள் ஏன் ரத்தத்தை மட்டும் அனுமதிப் ப்தில்லை?

உடல் செல்கள் membrane எனப்படும் சவ்வால் சருகால் மூடப்பட்டவை இந்த membraneஐ வெறும் "பை" அல்ல. Receptors எனும் புகு வாய்களை கொண்டவை. இவை பிற செல்களை அடையாளம் கண்டு கொள்ளும் திறமை வாய்ந்தவை. யாரை உள்ளே விடுவது யாரை உள்ள விடக்கூடாது என்று தெரிந்தவை.

எதற்காக இந்த பாதுகாப்பு? உடலின் ஒவ்வொரு உறுப்பிலும் செல்கள் உள்ளன. இவை அந்தந்த அவயத்திற் ஏற்ப பிரத்யேகமானவை. இவை வேறு அவயங்களுக்கு சென்று விட்டால் குழப்பம் தான். உதாரணமாக தலை முடி செல் கண்ணுக்குள் புகுந்து விட்டால், கண்களிலிருந்து முடி வளரும்!

எனவே ரத்தம் தனியாக செல்களை அணுகி, க்ளுகோஸை தள்ளி விட முடியாது. கூடவே செல்லும் இன்சுலின் தான் திறவுகோல். சாவி பூட்டைத் திறப்பது போல், இன்சுலின் உடல் செல்களுடன் ஒட்டி இணைந்து, "தாள் திறவாய்" என்று செல்லின் அனுமதியுடன் குளுகோஸை செல்லுக்குள் செலுத்த உதவும்.

எனவே தான் இன்சுலின் குறைந்தாலோ அல்லது நின்று விட்டாலோ ரத்தத்தில் சர்க்கரை தேங்கிவிடும்.

உணவில் உள்ள கார்போஹைடிரேட் சில மணி நேரங்களிலேயே ஒற்றை சர்க்கரையாக மாற்றப்படும். இந்த ஒற்றை சர்க்கரை ரத்தத்தில் காணப்படும் மற்றும் எரிசக்தியாக உடலுக்கு உதவும். சில கார்போஹைடிரேட்டுகளை மாற்றுவதில்லை. இவை பழச்சர்க்கரை. இவை நேரடியாக செல்களின் எரி பொருளாகின்றன. இவை குளுக்கோஸாக மாற்றப்படுவதில்லை. எனவே Fructose இன்சுலின் / குளுக்கோஸ் சமாசாரங்களில் பங்கெடுப்பதில்லை. சம்மந்தப்படுவதுமில்லை. தவிர செல்லுலோஸ் எனப்படும் மாவுச்சத்தும் குளுக்கோஸாக மாற்றப்படுவதில்லை. காரணம் இவற்றை நம் உடல்களால் மாற்ற இயலாது!



# உலகம்



## அமைச்சரின் மகளிடம் தவறாக நடந்து கொண்ட இலங்கை ஐ.நா. பிரதிநிதி

**கொழும்பு:** இலங்கை அமைச்சர் கெகலிய ரம்புகவெல்லாவின் மகளிடம் தவறாக நடந்து கொண்டதாக ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர துணைப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் ஷவேந்திர சில்வா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.இதையடுத்து ரம்புகவெல்லாவிடம் மன்னிப்பு கோருமாறு, ஷவேந்திர சில்வாவுக்கு இலங்கை அதிபர் ராஜபக்சே உத்தரவிட்டுள்ளார்.ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநியின் அலுவலகம் நியூயார்க்கில் உள்ளது. இங்கு ரம்புகவெல்லாவின் மகள் சந்துலா பணியாற்றி வருகிறார். இங்குள்ள துணைப் பிரதிதியான ஷவேந்திர சில்வா, சந்துலாவிடம் தவறாக நடந்து கொண்டதாகத் தெரிகிறது.சில்வா தனது அலுவலக அறைக்குள் தன்னை இழுத்துச் சென்று தவறாக நடந்து கொள்ள முயன்றதாகவும், அவரிடம் சண்டையிட்டு, ஒருவழியாக வெளியே தப்பி வந்ததாகவும், சந்துலா புகார் கூறியுள்ளார்.இது குறித்து ராஜபக்சேவிடம் ரம்புகவெல்லா புகார் கூறியதையடுத்து உடனடியாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதில், சில்வா தவறாக நடந்து கொண்டது உறுதியானதையடுத்து, ரம்புகவெல்லாவிடம் மன்னிப்பு கோருமாறு அவருக்கு ராஜபக்சே உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் வருகின்றன.அதே நேரத்தில் சந்துலாவின் நடவடிக்கைகள் சரியில்லை என்றும் ரம்புகவெல்லாவிடம் ராஜபக்சே கூறியதாகத் தெரிகிறது.ரம்புகவெல்லா மீதும் ஏற்கனவே பல புகார்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அதில் ஒன்று, அவருக்கும் ஒரு டிவி நடிகைக்கும் உள்ள தொடர்பாகும். மேலும் ரம்புகவெல்லாவின் மகன் லண்டனில் ஒரு ரஷ்ய விபச்சாரப் பெண்ணுடன் பிடிபட்ட விவகாரமும் சில காலத்துக்கு முன் வெளியே தெரியவந்ததும் குறிப்பிடத்தக்கது.மன்னிப்பு கேட்டதோடு சில்வாவை ராஜபக்சே விட்டுவிடக் கூடும் என்று தெரிகிறது. இலங்கையின் பெயர் கெட்டுவிடும் என்று கூறி, இந்த விவகாரத்தை இதற்கு மேல் பெரிதாக்க வேண்டாம் என்று ரம்புகவெல்லாவிடம் ராஜபக்சே கூறியுள்ளதாகவும் தெரிகிறது.இலங்கையில் புலிகளுடன் நடந்த இறுதிக் கட்ட போரின்போது நடந்த இனப் படுகொலைகளில் மேஜர் ஜெனரல் ஷவேந்திர சில்வாவுக்கும் பெரும் தொடர்பு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் அவரைக் காக்க ராஜபக்சே தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

## அமெரிக்காவில் உள்ள ஈரான் அரசு சொத்துகளை முடக்க ஒபாமா உத்தரவு!

**வாசிங்டன்:** அமெரிக்காவில் உள்ள ஈரான் அரசின் சொத்துகளை உடனே முடக்குமாறு அதிபர் ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.ஈரானின் அணு ஆயுதத் திட்டத்துக்கு எதிராக ஐ.நா. அந்நாடு மீது தடை விதித்தது. இருப்பினும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.இந்நிலையில் அமெரிக்காவின் மற்றொரு முகமாக வர்ணிக்கப்படும்

அடுத்த பக்கம் பார்க்க



## மாலத்தீவில் திடீர் போராட்டம்
# அதிபர் நஷீத் விலகினார் புதிய அதிபரானார் வகீத்

**மாலே:** மாலத்தீவு நாட்டில் தொடர்ச்சியான போராட்டங்களையடுத்து அதிபர் முகமது நசீத் பதவி விலகியுள்ளார். அரசு தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்களை உள்ளூர் காவல்துறையினர் கைப்பற்றியுள்ளதகாக தகவல்கள் வந்த நிலையில் புதிய அதிபராக தற்போது துணை அதிபராக இருந்த வகீத் ஹாசன் பொறுப்பேற்றுள்ளார்.நீதிபதி அப்துல்லா முகமதுவை மாலத்தீவு ராணுவம் அண்மையில் கைது செய்தது. இது ஜனநாயகத்தை சீர்குலைக்கும் செயல் என்று முன்னாள் அதிபர் கயூமின் ஆதரவாளர்கள் வீதியில் இறங்கி போராடி வந்தனர்.இந்த விவகாரத்தில் தீர்வு காணுமாறு ஐ.நா. சபைக்கும் கூட மாலத்தீவு அரசு வேண்டுகோள் விடுத்திருந்தது. போராட்டங்கள் தொடர்ந்த நிலையில் அதிபர் நசீத் பதவி விலகி விட்டார்.

### நீதிபதி விவகாரம் என்ன?:

மாலத்தீவு நாட்டின் முகமது ஜலில் அகமது என்ற எதிர்க்கட்சித் தலைவர், அந்நாட்டு அதிபர் முகமது நசீத் அரசுக்கு எதிராக தொலைக்காட்சி ஒன்றில் பேட்டியளித்திருந்தார். இதையடுத்து முகமது ஜமில் அகமது மீது வழக்கு தொடரப்பட்டது. ஆனால் நீதிபதி அப்துல்லா முகமது, பிடியாணை ஏதுமில்லாமல் நசீத்தை கைது செய்தது தவறு எனக்கூறி விடுதலை செய்தார்.இதனால் ஆத்திரமடைந்த அரசு நீதிபதியை லஞ்ச குற்றச்சாட்டின் கீழ் கைது செய்து சிறையிலடைத்தது. இதற்கு நீதித்துறையினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இது வன்முறையாகவும் வெடித்து தொடர் போராட்டங்களாக உருமாறியது.

அரசுக்கும் ராணுவத்துக்கும் எதிரான போராட்டம் உச்சகட்ட நிலையை அடைந்ததால் அதிபர் நசீத் இன்று பதவி விலகியுள்ளார். துணை அதிபரிடம் பொறுப்புகளை ஒப்படைத்தார். இதையடுத்து அவர் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.நசீத் பதவி விலகியதைத் தொடர்ந்து தலைநகர் மாலேயில் காவல்துறையினர் அரசு தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்களை கைப்பற்றியுள்ளனர். இதன் பின்னணியில்



ராணுவம் உள்ளது. பதவி விலகிய நசீத்தை ராணுவம் தமது தலைமையகத்தில் பாதுகாப்பாக வைத்துள்ளது.முன்னதாக நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் உரையாற்றிய நசீத், தாம் ஆட்சியில் தொடர்ந்து நீடித்தால் பிரச்சனைகள் தான் அதிகரிக்கும். மாலத்தீவு மக்களை நான் காயப்படுத்த விரும்பவில்லை. இதனால் நான் பதவி விலகுவதுதான் ஒரே வாய்ப்பு என்று தெரிவித்தார்.இதையடுத்து பிற்பகலில் துணை அதிபரான முகமது வகீத் ஹாசன், புதிய அதிபராக பதவியேற்றார்.

### ராணுவப் புரட்சி இல்லை?

இதனிடையே நசீத்தை ராணுவம்தான் கட்டாயப்படுத்தி பதவி விலக வைத்ததாக வெளியான செய்திகளை முகமது வகீத் ஹாசன் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஹாசனின் செயலாளர் அகமது தௌபீக் இது குறித்து கூறுகையில், இங்கே ராணுவப் புரட்சி ஏதும் நடக்கவில்லை. மக்களின் விருப்பத்தையே நசீத் நிறைவேற்றியுள்ளார்" என்று கூறினார்.

### இந்தியா கருத்து

மாலத்தீவு அரசியல் மாற்றம் தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் சையத் அக்பரூதீன், மாலத்தீவில் நிகழ்ந்திருப்பது அந்நாட்டின் உள்விவகாரம். மாலத்தீவுதான் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். மாலத்தீவில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக உள்ளனர். இருப்பினும் அந்நாட்டு நிகழ்வுகளை உன்னிப்பாக கவனித்து வருகிறோம் என்றார்.

### கடலுக்கடியில் அமைச்சரவைக் கூட்டம் நடத்திய நசீத்

புவி வெப்பமயமாதலினால் மாலத்தீவு நாடு எதிர்வரும் ஆண்டுகளில் மெல்ல மெல்ல மூழ்கிவிடும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்திருந்தனர். இதனால் இந்தியா போன்ற வெளிநாடு ஒன்றில் குறிப்பிட்ட நிலத்தை வாங்கி மாலத்தீவு மக்களை குடியேற்றலாம் என்று நசீத் கருத்து தெரிவித்து நடவடிக்கைகளை மேற்கொண்டார்.புவி வெப்பமயமாதலின் கொடுமையை சர்வதேச சமூகம் உணர வேண்டும் என்பதற்காக கடலுக்கடியில் அமைச்சரவைக் கூட்டத்தையும் நடத்திக் காட்டியவர் தற்போது பதவி விலகியுள்ள நசீத்.

### மாலத்தீவின் முக்கியத்துவம்

இந்திய பெருங்கடலில் மாலத்தீவு சிறு நாடாக இருந்தாலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. மாலத்தீவை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தொடர்ந்து பனிப்போரில் ஈடுபட்டு வருகின்றன.மாலத்தீவில் சீனா ஏற்கெனவே நீர்மூழ்கித் தளம் அமைத்து தமது நாட்டுக்கு வளைகுடா நாடுகளிலிருந்து எண்ணெய் எடுத்துச் செல்லும் பாதையின் பாதுகாப்பை பலப்படுத்தி இருக்கிறது.அமெரிக்காவோ மாலத்தீவுக்கு அருகே டிகாகோ கார்சியோ தீவில் பல ஆண்டுகளாக ராணுவ தளம் அமைத்திருக்கிறது.மாலத்தீவை அரசியல் ரீதியாக நட்பு நாடாக வைத்துக் கொள்ள இந்தியா தீவிரம் காட்டி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# என்ன வேணும்?...

குழந்தைகள் கதை

சுட்டி கதிர்

ஒரு வானத்துல ஒரு தேவதை இருந்துச்சாம். அந்த தேவதை எப்பயுமே நல்லது செய்யனும்னு நினைக்குமாம்.யாரு யாரு எல்லாம் ரொம்ப கஷ்டப்படுறாங்களோ அவங்களுக்கு எல்லாம் அது நேராவே போய் உதவி செய்யுமாம். ஒரு தடவ அது பூமியப் பாக்கும் போது மூனு குடும்பம் ரொம்ப கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்தது தெரிஞ்சது. உடனே தேவதை மனுசன் ரூபத்துல மாறி அந்த மூனு குடும்பத்தோட வீட்டுக்கும் போச்சு.

மொதக் குடும்பம் இருக்கிற வீட்டுக்குள்ள போனதும் அங்க இருக்கிறவங்க எல்லாம் ரொம்ப பசியால வாடிக் கிடந்தாங்க.அது ராத்திரி நேரம். மனுசன் ரூபத்துல இருந்த தேவதைய பாத்து திருடன்னு நினைச்சிக்கிட்டு எங்ககிட்ட தான் ஒன்னுமே இல்லயே நீ எதத் திருடப் போறனு கேட்டாங்களாம். உதவி பண்ண வந்த நம்மல போய் திருடன்னு நினைச்சிட்டாங்களேனு வருத்தப்பட்ட தேவதை நான் திருட வரல.உங்களுக்கு உதவ வந்திருக்கேன்னு சொன்ன உடனே எல்லோரும் சந்தோஷப்பட்டாங்க. “என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது, நிரைய அன்பு இருக்கிறது எது வேண்டும்?” அப்படினு கேட்டுச்சாம் தேவதை .வீட்டில இருக்கிற குடும்பத் தலைவன் “எங்க அம்மாவுக்கு மருந்து வாங்கனும், பிள்ளைக்கு பால் வாங்கனும், பொண்டாட்டிக்கு நல்லத் துணி வாங்கனும், அதனால பணம் தான் வேணும்.”னு சொன்னானாம். தேவதை அவனுக்குப் பணத்தக் குடுத்திட்டு போயிடுச்சு.

அடுத்த வீட்டுக்கு தேவதை போனப்போ அவங்களும் அப்படி தான் இருந்தாங்களாம். அவங்க கிட்டயும் தேவதை “”என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது, நிரைய அன்பு இருக்கிறது எது வேண்டும்?”னு கேட்டதும் அங்க இருந்த அம்மா “எங்க நிலம் அடமானத்துல இருக்கு, அதனால எம் புருசன் தற்கொலை பண்ணிக்கிட்டாரு,எம் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணனும், அதனால எனக்கு பணமே தாங்க” அப்படினு சொல்லி அழுதாங்களாம்.தேவதையும் சரினு சொல்லிட்டு பணம் குடுத்துட்டு கிளம்பிருச்சாம்.



கடைசியா மூணாவது வீட்டுக்கு வந்து பாத்துச்சாம் தேவதை. அங்க திண்ணையில முனங்கிகிட்டே படுத்திருந்த கிழவர்கிட்ட உங்களுக்கு என்னா கஷ்டம்னு கேட்டுச்சாம். “எனக்கு உடம்பு எல்லாம் நோவு, மருந்து வாங்க பணமில்ல. நிலம் அடமானத்துல இருக்கிறதுனால எம் பையயன் டவுனுல பெயின்ட்டு வேலைக்கு போனான். மேல இருந்து தவறி விழுந்து செத்துப் போய்ட்டான். அவன் பிள்ளைக பசியால அழுகுது.எம் மருமக மாத்துத் துணியில்லாம வெளிய வரவே முடியாம இருக்கா”னு சொன்னாரு. ரெண்டு வீட்டு கஷ்டத்தையும் இந்த வீடு சேத்து சொல்லுதேனு நினைச்ச தேவதை எப்படியும் பணம் தான் கேப்பாங்க கொடுத்திரலாம்னு பையில கைய்ய விட்டுக்கிட்டே “என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது, நிரைய அன்பு இருக்கிறது எது வேண்டும்?” னு கேட்டுச்சு. கிழவர் கொஞ்சம் கூட யோசிக்காம அன்புனு சொன்னாரு. உடனே தேவதை மகிழ்ந்து போய்.”கவலப்படாதிங்க தாத்தா நான் இங்கேயே தங்கி உங்கள பாத்துக்குறேன்னு” சொல்லி அங்கயே தங்கிடுச்சு.

தாத்தாவுக்கு மூலிகை மருந்து எல்லாம் எடுத்துட்டு வந்து தினமும் காலையிலயும் சாய்ங்காலமும் ஊட்டி விடும் அப்புறம் அவரு மருமகளுக்கு நிரைய துணி வாங்கி கொடுத்து தைக்கவும் கத்து கொடுத்துச்சு, பிள்ளைகளை நல்ல பள்ளிக் கூடத்துல சேர்த்து விட்டிருச்சு.கொஞ்ச நாள்ல தாத்தாவோட உடம்பு சரியாகிடுச்சு, தைக்கிறதுனால கிடச்ச காச வச்சு நிலத்த மீட்டிட்டாங்க அதுல தாத்தா நல்லா வெவசாயம் பண்ண ஆரம்பிச்சாரு. பிள்ளைஙகளும் நல்லா படிக்க ஆரம்பிச்சிருச்சுங்க. வந்த வேலை முடிஞ்சிருச்சுனு சொல்லி தேவதை கிளம்பிருச்சு.”எங்கள விட்டு போகாதிங்க”னு அந்த குடும்பமே கெஞ்சுனாங்களாம்.ஆனா தேவதை நான் கிளம்ப வேண்டிய நேரம் வந்திருச்சு நான் போறேன். யாராவது அன்ப கேட்டு வந்தா அவங்களுக்கு உங்க அன்ப கொடுங்கனு சொல்லிட்டுப் போயிடுச்சு.

போற வழியில முன்னாடி பணம் கொடுத்த ரெண்டு வீட்டையும் பாத்துட்டுப் போகலாம்னு உள்ள போன தேவதைக்கு அதிர்ச்சி இன்னும் அந்த ரெண்டு குடும்பமும் கஷ்டப்பட்டுக்கிட்டே இருந்துச்சு. அவங்களுக்கு தேவதைய முதல்ல அடையாளம் கூட தெரியல. அதுக்கப்புறம் அடையாளம் தெரிஞ்சுகிட்டு நீங்க கொடுத்த பணம் எல்லாம் தீந்துபோச்சு அப்படினு சொல்லி அழுதாங்க. “சரி சரி உங்களுக்கு நான் கொடுத்த பணம் தீந்து போச்சுனு அழாதிங்க, ஒரு வீட்டுல அன்பு கொடுத்துருக்கேன் அது அப்படியே இருக்கும். போய் வாங்கிக்கங்க சந்தோஷமா இருப்பீங்கனு “ சொல்லி மூணாவதா போன வீட்ட காமிச்சுவிட்டு பறந்து போயிடுச்சு தேவதை. வந்தது மனுசன் இல்ல தேவதைனு அப்பதான் அவங்களுக்கு தெரிஞ் சது.

தேவதை காமிச்ச வீட்டுக்குப் போய் கிழவர்கிட்ட நடந்தத எல்லாம் சொல்லுச்சு அந்த ரெண்டு குடும்பமும்.கிழவரும் அவங்கள கூட சேத்துக்கிட்டாரு. விவசாயம் பண்ணியும் துணிய தச்சும் சந்தோசமா வாழ்ந்தாங்க மூணு குடும்பமும்.இத வானத்துல இருந்து பார்த்த தேவதையும் சந்தோசமா அடுத்த குடுமபத்துக்கு உதவ போச்சு.●

---

இஸ்ரேலோ, ஈரான் மீது போர் தொடுக்கும் முனைப்புடன் உள்ளது.ஈரான் மீதான இஸ்ரேலின் போர் நிச்சயமாக அமெரிக்காவின் பொருளாதாரத்தில் கடும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஒபாமா கருதுகிறார்.இதனால் ஈரானை முடக்கி வைக்கும் நடவடிக்கைகளை அவர் தீவிரப்படுத்தியுள்ளார். அதன் ஒரு படியாக அமெரிக்காவில் இயங்கும் ஈரானின் மத்திய வங்கியின் செயல்பாட்டை முடக்க உத்தரவிட்டுள்ளார். திங்கள்கிழமை முதல் இத்தடை அமலுக்கு வந்துள்ளது.ஈரானின் எண்ணைய் ஏற்றுமதி வர்த்தகத்தை தடை செய்வதன் மூலம் அந்நாட்டை பணிய வைக்க முடியும் என்று அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கருதி வருகின்றன. அமெரிக்காவுக்கு ஈரான் இன்னொரு ஈராக் ஆகுமா? இன்னொரு வியட்நாம் ஆகுமா? காலத்தின் கையில் பதில்....

## அமெரிக்காவில் இந்திய ஐ.டி துறையினர் செலுத்திய வரி 15 பில்லியன் டாலர்: ரஞ்சன் மத்தாய்

வாஷிங்டன்: அமெரிக்காவில் பணியாற்றும் இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையினர் மட்டும் கடந்த 5 ஆண்டுகளில் வரியாக 15 பில்லியன் டாலரை அந்த நாட்டுக்குச் செலுத்தியுள்ளனர் என்று மத்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் ரஞ்சன் மத்தாய் தெரிவித்துள்ளார். இருதரப்பு உறவுகள் மற்றும் அணு உலை ஒப்பந்தம் குறித்து விவாதிக்க அமெரிக்கா சென்றுள்ள மத்திய வெளியுறவுத் துறைச் செயலர் ரஞ்சன் மத்தாய். சர்வதேச படிப்பினைகளுக்கான ஆய்வு மையத்தில் இன்று உரையாற்றுகையில் இதனை சுட்டிக்காட்டி அமெரிக்கா வருவதற்கான கட்டுப்பாடுகளையும் இந்தியர்களின் பங்களிப்பையும் விவரித்தார்.



மேலும் ரஞ்சன் மத்தாய் கூறியதாவது:

அமெரிக்காவில் பணியாற்றும் இந்திய தகவல் தொழில்நுட்பத்துறையினர் மட்டும் கடந்த 5 ஆண்டுகளில் 15பில்லியன் டாலரை வரியாக செலுத்தியுள்ளனர்.அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் விதத்திலும் நமது தகவல் தொழில்நுட்பத் துறையினர் பாதுகாப்பாக உள்ளனர்.6 ஆண்டுகளுக்கு 20 ஆயிரம் பேராக இந்திய தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் எண்ணிக்கை இப்போது ஒரு லட்சத்துக்கும் அதிகமாக இருப்பதாக நாஸ்காம் மதிப்பிட்டுள்ளது.விசா கட்டணமாக மட்டுமே 200மில்லியன் டாலரை இந்தியர்கள் அமெரிக்காவுக்கு செலுத்தி உள்ளனர். இருப்பினும் அவர்களுக்கான ஊதியம் மிகக் குறைவானது. இத்தகைய ஒரு பாரபட்சமான நிலைமையை மாற்ற இருதரப்பு உறவும் அவசியமானது.விசா கட்டண உயர்வு, கடுமையான கட்டுப்பாடுகள் என பல தடைகள் இந்தியர்களுக்கு இருக்கிறது. இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான வர்த்தக உறவை வலுப்படுத்த வேண்டியதும் கட்டாயமாகும். இந்திய வர்த்தகர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் அமெரிக்காவில் 26 பில்லியன் டாலர் முதலீடு செய்துள்ளனர்.இந்தியாவிலும் உள்கட்டமைப்புக்கான அடுத்த ஐந்தாண்டுகளில் 1டிரில்லியன் டாலர் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளில் மறுசீரமைப்பு நிச்சயம் தேவையானது என்றார்.அமெரிக்காவில் பயணம் மேற்கொண்டுள்ள மத்தாய் அணு உலை ஒப்பந்தம், ஈரான் மீதான பொருளாதாரத் தடைகள் ஆகியவை குறித்தும் ஆலோசனை நடத்துகிறார். வெளியுறவுத் துறைச் செயலராக பதவியேற்ற பின் அவர் மேற்கொள்ளும் முதலாவது அமெரிக்கப் பயணம் இதுவாகும்.



இதயச்சந்திரன்

# உறக்கத்தை தொலைத்த மனிதரிடம் மும்மொழிக் கனவு சாத்தியமா?

'தியகவ' என்கிற பெயர் சூட்டி போர்ப் பயிற்சியொன்றினை ஆரம்பிக்கிறார் சிங்களத்தின் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய. இது பயிற்சிப் பட்டறைபோல் தெரிகிறது. தாங்கள் தனியே நின்று போரிட்டு விடுதலைப் புலிகளை வீழ்த்தியது போலவும் தாம் பெற்ற அனுபவங்களை இவ்வையகமும் பெறட்டும் என்பது போலவும் இருக்கிறது சிங்களத்தின் செய்தி.

எட்டு நாடுகளிலிருந்து, ஒவ்வொரு நாட்டிலிருந்தும் எட்டுப்பேரை அழைத்து, 64 பேரோடு பட்டறை நடாத்தப் போகிறது சிங்களம். இனப் படுகொலைக்கு உடந்தையாக இருந்த பேரினவாத அரசை இன்னமும் காக்கும், சீனாவும், இந்தியாவும் இப் பாசறையில் இணைந்து கொள்கின்றன.

இந்தியாவை தடவிக் கொடுத்துத்தான் தமிழ் பேசும் மக்கள் உரிமைகளைப் பெறலாமென விமர்சனக் கட்டுடைப்பு செய்யும் வித்தகர்கள், சிங்களத்தின் பட்டறையில் இந்தியாவிற்கு என்ன வேலை என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

அண்ட வெளியிலிருந்து செயற்கைக்கோள் விழிகளினால், இறுதிப்போரில் நிகழ்ந்த கொடூரங்களை இந்தியாவும், அமெரிக்காவும் வேடிக்கை பார்த்ததாக கேபிள் ஒற்றர்கள் அம்பலப்படுத்துகிறார்கள். இந்திய நலனிற்காக இடையில் கட்டியிருக்கும் கடைசித் துண்டையும் கழற்றிக் கொடுக்கச் சொல்கிறார்கள் புதிதாக முளைக்கும் பிழைப்புவாதிகள்.

சம்பூரில் இந்தியா நிர்மாணிக்கும், நிலக்கரியில் இயங்கும் அனல் மின்நிலையம் வெளித்தள்ளும் கரியமில வாயுவினால், நிலமிழந்து கூனிக்குறுகி நிற்கும் மனிதர்களின் சுவாசப்பைகளும் செயலிழந்துவிடும்.

சுற்றுப் புறச்சூழல் மாசடைந்து மனிதர்களின் வாழ்வியல் இருப்பு கேள்விக்குறியாகுமென்று, திருமலை மக்கள் போராடிய விடயத்தை, இந்திய விசுவாசக் கண்ணாடி மறைத்துவிட்டது போல் தெரிகிறது.

இயந்திரங்கள் கக்கும் நச்சுக் காற்றுகள், ஓசோனின் இதயத்தில் ஓட்டைகள் போட்டாலும், வந்தே மாதரமென்று வலிகளை ஏற்றுக் கொள்ளச் சொல்கிறார்களா?

கிருஷ்ணாக்களும், சுஸ்மிதாக்களும் வரும்போது, விடுதலைப் புலிகளின் பார்வைக் கோளாறினால், இந்தியா எம்மை விட்டு விலகிச் சென்றுவிட்டதென கட்டுரைகள் வரையத் தொடங்கி விடுவார்கள் எம் தேசத்தின் அடிபணிப் புதல்வர்கள்.

இந்தியா எப்போதும் எம்பக்கம் இல்லை என்பதை புரிந்து கொள்ள இவர்களால் முடியாது. இலங்கையில் தனது பிராந்திய நலனிற்காக, இனமுரண்பாட்டை இந்தியா கையாண்டது என்பதுதான் நிஜம். இந்தியா எனும்போது, அது அடுத்தடுத்து ஆட்சிக்கு வரும் ஆளும் வர்க்கத்தைக் குறிக்கும். அந்த ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதியாக இலங்கைக்கு வந்துள்ளார் அணுவிஞ்ஞானி, முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்க லாம்.

மகிந்த சிந்தனையின் மறைமுக இன கலாச்சார அழிப்பு வடிவமான மும்மொழித் திட்ட அங்குராப்பணக் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த அப்துல் கலாம் அவர்கள், அமைதியை ஏற்படுத்தப் போகிறாராம்.

'இந்தியாவைக் கட்டியெழுப்ப, இளைஞர்களே கனவு காணுங்கள்' என்கிற முழக்கத்தோடு வலம் வந்த கலாம் அவர்கள், நடந்த கொடுமைகளை மறந்து நாமெல்லோரும் இலங்கையர் என்று கனவு காணுமாறு தமிழர்களை நோக்கி அறிவுரை சொன்னாலும் ஆச்சரியப்பட முடியாது.

உலகம் அறிந்த அணுவிஞ்ஞானியின் வரவால், இலங்கை புனிதமடையலாம்.

புரையோடிப் போயுள்ள இன முரண்பாட்டிற்கு, மும்மொழிகளையும் கற்றால் தீர்வு வந்துவிடுமென அறிவுரைகளை அள்ளி வீசலாம்.

முள்ளிவாய்காலில் தமிழ் மக்களை கொன்றொழித்து, நந்திக்கடலைச் சிவப்பாக்கிய, கொடுங்கோல் ஆட்சியாளரின் மேடையில், அறிவியலாளனிற்கு என்ன வேலை?

இனஅழிப்பு பாதகர்களுக்கு, பாதுகாப்புக் கவசம் கொடுக்க வருகிறார்களா இந்த புத்தி மான்கள்?

சைக்கிள்களோடு கிருஷ்ணர் வருகைதந்து நட்புறவு பாராட்ட, மும்மொழிகளை கற்றறிந்து கனவு காணுங்கள் அமைதி திரும்பிவிடுமெனக் கூறியவாறு இன்னொருவர் வருகிறார்.

எம் கனவுகளில் இரத்தப் படிவுகளும், பிஞ்சுக் கரங்கள் வயிற்றைக் கிழித்து வெளித் தெரிந்த காட்சிகளும், பிளந்த முதுகின் அடிப் பாகத்தில் சுவாச இயந்திரங்களின் இறுதித் துடிப்பும் தான் தெரிகிறது.

ஆற்றுப்படுத்த முடியாத வலி சுமக்கும் நினைவுகளின் காட்சிப்படிமங்கள், கவிதை வரிகளிலும் இறங்க முடியாமல், கனவுகளையும் நினைவுகளையும் துரத்துகின்றன.

எந்தக் கனவைக் காணச் சொல்கிறார் அறி வியலாளர் அப்துல் கலாம்?

நினைவுகளிலும், கனவுகளிலும் ஒடுக்குமுறை யாளன். பிரயோகித்த கொடூரச் செயற்பாடுகளின் வன்மங்களே ஆக்கிரமித்திருக்கின்றன.

தூக்கத்தைத் தொலைத்த மனிதர்கள் எப்படி ஐயா கனவுகாண முடியும்?

படுகொலையாளனோடு பக்கத்தில் அமர்ந்து எதுவுமே நடவாவது போல் எப்படி உங்களால் அமைதி பற்றிப் பேசமுடிகிறது?

இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த, இந்தியாவால் அனுப்பப்பட்ட இராஜதந்திரத் தூதுவர் என்கிற பாத்திரம் உங்களுக்கு பொருத்தமானதல்ல அப்துல்கலாம் அவர்களே.

உங்களை ஒத்த, இன்னுமொரு அறிவுசீவிக் கூட்டம் ஐ.நா சபையிலிருந்து சொல்கிறது, சுயாதீன போர்க் குற்ற விசாரணையொன்று இலங்கை அரசிற்கெதிராக நடாத்தப்பட வேண்டுமென்று.

தாயக மக்களை இலங்கை நாடாளுமன்றில் பிரதிநித்துவம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதையே வலியுறுத்துகிறது.

இன்று ஊடகவியலாளர்கள், தினமும் கடத்தப்படுகிறார்கள். மீள் குடியேற்றமென்று மகிந்தரால் நடுத்தெருவில் விடப்பட்ட தமிழ் மக்கள் குடும்பத்தோடு தற்கொலை செய்கிறார்கள்.

விசாரணையின்றி பல வருடங்களாக சித்திரவதைக் கூடங்களிலும், சிறைகளிலும் தமிழ் இளையோர் வாழ்வைத் தொலைத்து நிற்கதியாய் வாடுகிறார்கள்.

சொந்த மண்ணை இழந்த மக்கள் உங்கள் நாட்டு மலைவாழ் ஆதிவாசிகள் போல் நிலத்திற்காக இங்கு போராடுகிறார்.

உலக அளவில் நிலக்கரிப் பாவனையை தடை செய்யுங்களென்று உங்கள் அறிவியலாளர் கூட்டம் அவசர வேண்டுகோள் விடுத்தும், வான்வெளியில் ஓட்டைகள் விழுந்தாலும் பரவாயில்லை, தனது நலனே பெரிதென எண்ணும் உங்கள் தேசம், சம்பூரில் அனல் மின்நிலையம் அமைக்கிறது.

பூர்வீக நிலத்திலிருந்து மக்களை அகற்றி, அபிவிருத்தி செய்யலாமென்கிற இந்திய ஜனநாயகத்தை சரியென்று நியாயப்படுத்துவாரா பேரறிஞர் அப்துல் கலாம்?

வாழ்வாதாரமே சூனியமாகிப் போகும் விளிம்புநிலையில் வாழும் தமிழ் மக்களிடம், மும்மொழ்க் கொள்கையால் சுயநிர்ணய உரிமை கிடைக்க வாய்ப்புண்டென சொல்லக் கூடாது.

தொடரும் இனவழிப்பிற்கு நீதி கிடைக்கும்வரை மக்கள் கனவுகளில் விடுதலை வேட்கையே காட்சிகளாகும்.

நன்றி :ஈழமுரசு




“மதம் மக்களுக்கு அபின் போன்றது” என்றார் காரல் மார்க்ஸ். மாற்றம் மட்டுமே மாறாதது என்ற மார்க்சின் கூற்றைக்கூட பொய்ப்பித்து கொண்டு இன்றைக்கும் மாறாமல் துடர்கிறது மதவெறியின் நீட்சி.

மதம் பற்றிய விமர்சனங்கள் முன்வைக்கப்படும் பொழுது மட்டும் மதவாதிகள் அடிக்கடி கேட்க்கும் கேள்விகள். நீ சொல்லும் செய்தி உண்மையா? அல்லது நீ விமர்சிக்கும் மதம் பற்றி உனக்கு என்ன தெரியும் முதலில் போய் படித்துவா. என்பதாகும் எனவே இங்கே மனிதக்குழந்தயாக மண்ணில் பிறந்து என் தாய் தந்தையின் வழியில் இசுலாமியனாக வளர்க்கப்பட்டு என் சுய சிந்தனையுடன் இசுலாமிய பிரசாரகனாக சில காலம் வாழ்ந்து அதன் நிகழ்ச்சிப்போக்கில் எனக்குள் எழுந்த கேள்விகளால் உந்தப்பட்டு நாத்திகனாக மாறியதை முழு ஆதாரத்துடன் எழுதுகிறான்.

நான் முதல் முதலில் “மதரசா” என் அம்மாவின் முயற்சியால்(காரணம் அப்பா சென்னையில் கூலி வேலை செய்துவந்தார்)நான் ஆறாம் வகுப்பு படிக்கும் பொழுது கோவை ராம்நகர் பள்ளிவாசலில் என் தம்பியோடு (‹லீமீ மீ ஜீ://ஷ்ஷ்ஷ்.யீணீநீமீதீஷ்ஷீளீ. நீஷீனீ/ஜீகூீ ஷீயீவீநீமீ.ஜீலீஜீ?வீபீ=1232269939› ) கொண்டு சேர்க்கப்பட்டேன். அங்கேயே எனக்குள் நாத்திக எண்ணங்கள் ஏற்ப்பட்டது. ஆனால் அம்மாவின் போதனைகளும் அச்சுறுத்தல்களும் அதை தள்ளிப்போட்டது. அந்த பள்ளியில் எனக்கு நாத்திக எண்ணங்களை ஏற்படுத்திய முக்கியமான விஷயம் என்னவென்றால். முதல் விஷயம் பள்ளிக்கு சென்ற முதல்நாள் நான் எனது நண்பன் விமிலிகிழி திளிளிஜி கீணிகிஸி உம்மர் மற்றும் சிராஜ் ஆகியோர் அன்றைக்கு முதல் முதலாக தொழுகைக்கு ஜமாத்துடன்(கூட்டு பிரார்த்தனை) நின்றோம். சிராஜும், உம்மரும் தொழுகையின் இடையே விளையாட்டு பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தனர். அவர்கள் என்னை நோண்டியபோது கூட நான் பதில் ஏதும் பேசாமல் மவுனமாகதான் இருந்தேன். இருப்பினும் தொழுகை முடிந்ததும் எனக்கு மட்டும் அடிவிழுந்தது. காரணம் உம்மரின் தந்தையும் சிராஜின் தந்தையும் ஜமாத்தில் இருப்பவர்கள் பணம் படைத்தவர்கள். இரண்டாவது சம்பவம் அந்த பள்ளியின் அப்போதைய முத்தவல்லி இன்றைக்கும் கோவையில் பிரபல குடும்பமான ஹிரிஷி ஹாஜியார் ஆவார். அவரது இரண்டு மகன்களும் மூத்தவன் என்னையா விட இரு வயது மூத்தவன் இளையவன் என் தம்பியின் சமவயது. ஹிரிஷி ஹாஜியாரின் இளைய மகனும் எனது தம்பியும் ஏதோ விசயமாக சண்டை போட்டுக்கொண்டனர். அதைப்பார்த்து நான் பயத்தின் காரணமாக என் தம்பியைசத்தம் போட்டு சும்மா இருக்க வைத்தேன். ஆனால் அதன் பிறகும் அந்த பையன் என் தம்பியை ஒரு அடி அடித்தான் என்னையும் அடிக்க வந்தான்(அவனது வீட்டில் நிறைய ஏழை பசங்க வேலை செய்வதால் அவனது இயல்பே அப்படிதான் இருந்தது). பிறகு ஹஜரத் (ஆசிரியர்) ஹம்சா) அவர்கள் வந்ததும் என்னடா சண்ட என கேட்டார். நான் எனது தம்பியும் ஹாஜியாரின் இளைய மகனும் சண்டை போட்டதாக கூறியதுதான் தாமதம். ஹஜரத் என் தம்பியா பிரம்பால் அடிக்க ஆரம்பித்து விட்டார். அப்போதைக்கு விஜயகாந்த் சினிமாவும் அர்ஜுன் சினிமாவும் கத்துக்கொடுத்த வர்க்க வேறுபாடு ஓரளவுக்கு தெரிந்திருந்தது(அதாவது எல்லாரும் பணக்காரனுகளுக்கே சாதகமாக இருப்பானுகனு). அதற்க்கு மேல் ஆத்திரத்தை பொறுக்க முடியாமல் பள்ளி கட்டுவதற்காக(பள்ளி இன்றைக்கு இருப்பது போன்ற அல்ல அன்று. அப்போதுதான் கட்டுமான பணிகள் ஓலை குடிசை வரை வந்திருந்தது. இன்றைக்கு நகரின் பணக்கார பள்ளி அதுதான் ) அடுக்கி வைக்கப்பட்டு இருந்த இரும்பு பைப்பை எடுத்து ஹஜரத்தை நாலு சாத்து சாத்திவிட்டு தம்பியின் கைப்பிடித்து தெருவெங்கும் அழுத்திக்கொண்டே ஓடி வந்தோம். வீட்டிற்குள் வந்தும் அம்மா அழ ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் அன்றைக்கு சொன்னது ''ஹஜரத் அடிச்ச அடி பட்ட இடம் சுவர்க்கம் சென்றிருக்கும் ஆனால் இப்படி ஹஜரத்தையே அடிச்சிட்டே உன்னை என்ன சொல்ல'' இப்படி கடுமையான வார்த்தைகளால் திட்டி சென்றுவிட்டனர். அதன் பிறகு இரவு ஹனிபா அஜரத்தும் ஹிரிஷி ஹாஜியிடம் வேலை செய்யும் சிலரும் எங்கள் வீட்டுக்கு வந்து என்னை கூப்பிட்டனர். நான் வர மறுத்ததும் அவர்கள் எனக்கு மிரட்டல் விடுத்தனர். நானும் பதிலுக்கு கெட்டவார்த்தைகள் திட்டிவிட்டேன். அதன் பிறகு ஊரிலிருந்து வந்த என் அப்பாவும் என்னைத்தான் திட்டினார்கள். (என் தந்தை திட்டிய அந்த சம்பவத்திற்கு பிறகு நீண்ட காலம் நீ யாராக ஆசைப்படுகிறாய் என்று யாராவது கேட்டால் ரவுடியாகனும் என்பேனாம்) . அப்படி தடை பட்ட எனது மதரசா படிப்பு மீண்டும் கோவையில் நடந்த 92 கலவரத்திற்கு பின் இசுலாம் நல்ல மார்க்கம் இசுலாமியர்களே தவறானவர்கள் என்ற என் அண்ணனின் சொல்லை பின்பற்றி மீண்டும் இசுலாமிய மத வழிபாட்டிற்குள் சென்றேன் அதற்க்கு நான் படித்துக்கொண்டு இருந்த பள்ளியும் ஒரு காரணம் அங்கே அந்த நாட்களில் ஸிஷிஷி இன் ''சாகா'' நடைபெறுவது வழக்கம்.

பிறகு மீண்டும் நானே சுயமாக வேறு நபர்களிடம் சென்று குரானை அரபியில் கற்றுக்கொண்டேன் இப்போது எளிதாக விளங்கியது வயதும் ஆர்வமும் காரணமாக இருக்கலாம். மீண்டும் ஜமாத்துடன் பிணக்கு இம்முறை நாங்கள் கலவரம் காரணமாக குடிமாறி வந்திருந்த இரத்தினபுரி ஜமாத்தாருடன் பிரச்சனை காரணம் என் அம்மா தவ்ஹீது நம்பிக்கையை சார்ந்தவர்கள் அவங்க அப்பா அந்த கொள்கையை ஏற்றுக்கொண்டதர்க்காகவே சோடா பாட்டிலால் கடுமையாக தாக்குதலுக்கு உள்ளானவர். எனவே நான் தவ்ஹீது கொள்கை அடிப்படையில் தொழுவதால் ஜமாஅத் தலைவர் உம்மர் ஹாஜியால் கேட்ட வார்த்தைகளால் வசைபாடப்பட்டேன். நான் தொழுகையில் குல்லா அணியாமல் தொழுதேன் அதற்க்கு அவர் தலைய மறைக்காமல் தொழுகிராயே நாயே தலைய மறை டா என்றார். அதற்க்கு நான் குல்லாவிலும் ஓட்டை இருக்கே என்றேன். அதற்க்கு அவர் மசூதி உள்ளேயே கூறியது ஓட்டை எங்கேயெல்லாம் இருக்குனு உங்கம்மாவிடம் போய் கேளுடா என்றார்.

அதன் பிறகும் அமைதியாக எப்படி இருப்பது. அடிதான். இம்முறையும் எனக்கும் என் தாய்க்கும் முரண்பட்டு அவரிடம் எப்படி நான் சொல்வது இப்படி ஒரு கேள்வியை எதிர்கொண்டதாலேயே நான் அவரை தாக்கினேன் என்று. (எனினும் கோவையில் ஏற்பட்ட கலவரங்களில் அவரையும் பள்ளியையும் காத்ததில் நாங்கள் முக்கிய பங்காற்றியதால் இறுதியில் எங்களுடன் இணக்கமாக இருந்தார். பள்ளியில் இந்தியாவிலேயே முதல் முறையாக சுன்னத் ஜமாத்தில் பெண்களை தோழா வைத்த வரலாறும் அந்த பள்ளிக்கே உரியது)

இறுதியா இசுலாமிய வரலாற்றில் எழுந்த என்னத்த ஒரு கேள்விக்கும் நான் சார்ந்திருந்த அமைப்போ எனது ஹஜரத்துகளோ பதில் சொல்லவில்லை மாறாக ஒரு எல்லைக்குமேலே சிந்திக்கக்கூடாது என்றே எனக்கு அறிவுரை கூறினார். இன்னும் சொல்லப்போனால் நான் சார்ந்திருந்த அமைப்பு என்னை தாக்கவே ஆட்களை அனுப்பியது. என் பால்லய சிநேகிதன் பலகாலம் என் அரசியல் நிலைபாட்டின் காரணமாக பேசாமல் இருந்துள்ளனர். அதில் சிலர் இன்றைக்கு என்னைப்போன்றே அரசியல் நிலையில் உள்ளனர். மேலே குறிப்பிட்ட எல்லா விசயங்களும் எங்கே நடந்தது அப்போது இருந்தவர்களின் பெயர் என்ன போன்ற தகவல்களுடனே எழுதியுள்ளேன். இதில் நான் குறிப்பிட்டு இருக்கும் எனது தம்பி, அண்ணன் மற்றும் என் குடும்ப உறவுகள் அனைவரும் இன்னும் நாத்திக கருத்துக்காக என்னை குறை கூரிவருபவர்களே. இவ்வளவும் இங்கே எழுதியதின் அவசியம் கவின் மலர் போட்டு இருக்கும் ஒரு ஷீ ணீமீ ஞூ இக்கு சில இசுலாமியர்கள் போட்டு இருக்கும் கொடூரமான கருத்துக்களை கண்டதன் விளைவே. உதாரணமாக ஜாப்பார் அலி என்பவர் கூறி இருக்கிறார்.//இவனை யாராலும் காப்பாற்ற முடியாது இவனது முடிவு கொடூரமாக இருக்கும்/// என்பதாக இருக்கிறது. தொழுகையில் குர்ஆனில் வரும் வசனகளைதான் ஓதுவார்கள் அதை இவர்கள் பொருள் புரியாமல்தான் ஓதுகிறார்கள் என நினைக்கிறேன் காரணம் ஒரு வசனம் சொல்கிறது ''உனக்கு உங்கள் மதம் எனக்கு எங்கள் மதம்'' என்று இசுலாம் ஒரு சகிப்புதன்மையுள்ள மார்க்கம் என்பதை நிறுவுவதற்காக இசுலாமியர்களே அடிக்கடி சொல்லும் வாசகம் இது. எனவே இதை பொருள் புரிந்து படிக்காமல் சும்மா மனனம் அடிப்பதன் விளைவே இது. இசுலாம் வாளால் வளர்ந்த மதம் என்பது ஸிஷிஷி இன் புனைவு ஆனால் அது பொய் என்பதே வரலாறு நமக்கு காட்டுகிறது ஆனால் இன்றைய நவீன முஸ்லீம்கள் அந்த வரலாற்றையும் உண்மையாக்கி விடுவார்கள் போல . இறை நம்பிக்கை உடையோருக்கு குறிப்பாக இசுலாமிய நம்பிக்கையாளர்களுக்குக் சில குரான் வசனங்களை நினைவூட்டுகிறேன் அதன் பிறகு உங்களை நீங்களே பரிசீளித்துக்கொள்லுங்கள். ''மார்கத்தில் எவ்வித நிர்பந்தமும் இல்லை'', ''நான் அவர்களின் இருதயங்களிலும் செவிகளிலும் சீல் வைத்து விட்டேன் எனவே நீங்கள் அவர்களிடம் சொல்வதை அவர்கள் செவியேற்க மாட்டார்கள்'', இறைவன் ஒவ்வொரு ஆத்மாவின் கூலியையும் நிச்சயம் குடுத்தே தீருவான்'' எனவே இறைவனே சீல் வைத்த இருதயத்திற்குள் நீங்கள் உங்கள் கருத்தை வலிந்து திணிப்பது இறைநிராகரிப்பு ஆகும்.

எதிர் கருத்தை கருத்தால் எதிர்கொள்ளாமல் அஸ்க்கர் அலி என்ஜினியர் மீது தாக்குதல், கவிஞர் ரசூல் ஊர் விளக்கு, இப்போது தராவ் ஷா ஊர் விலக்கம் மதவெறியில் மத வேறுபாடுகள் ஏது?....








# தமிழகமெங்கும் எழுச்சியுடன் நடந்த மாவீரன் முத்துக்குமார் வீரவணக்க நிகழ்வுகள்!

தமிழீழ மக்கள் மீது இந்திய சிங்கள அரசுகளால் திணிக்கப்பட்ட 2009 முள்ளிவாய்க்கால் போரை நிறுத்தக்கோரி சனவரி 29 அன்று மாவீரன் முத்துக்குமார், சென்னையில் செயல்பட்டு வரும் இந்திய அரசின் வருமானவரித்துறை அலுவலகமான சாஸ்திரி பவனில் தீக்குளித்து உயிரீகம் செய்தார். அவரைத் தொடர்ந்து, 18 தீந்தமிழர்கள் போர் நிறுத்தம் கோரி தன்னுயிரை ஈகம் செய்தனர். ஈகியர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள் நேற்று தமிழகமெங்கும் பல்வேறு அமைப்பினரால் சிறப்பாக நினைவுகூறப்பட்டது.

## சென்னை

ஈழத்தமிழர்களுக்காக தன்னுயிரை ஈகம் செய்த மாவீரன் முத்துக்குமார் உள்ளிட்ட ஈகியருக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில், சென்னை கொளத்தூரில் எழுப்பப்பட்டிருந்த மலர் தூணுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழர் முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அதியமான், காஞ்சி மக்கள் மன்றம் ஒருங்கிணைப்பாளர் ஜெர்சி, தமிழக இளைஞர் எழுச்சிப் பாசறை ஒருங்கிணைப்பாளர்கள் தோழர் அருண்சோரி, சதிசுகுமார், ஓவியர் வீரசந்தனம், இயக்குநர் வ.கவுதமன், காரை மைந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. திருச்சி சவுந்திரராசன், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் க.அருணபாரதி, சேவ் தமிழ் இயக்க ஒருங்கிணைப்பாளர் செந்தில், தமிழர் உலகம் ஆட்சிமன்றக் குழு உறுப்பினர் புலவர் சி.பா. அருட்கண்ணனார், உள்ளிட்ட பல்வேறு அமைப்புத் தலைவர்களும், பெரியார் திராவிடர் கழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட பல்வேறு அமைப்புத் தோழர்களும் அணி அணியாக வந்து வீரவணக்கம் செலுத்தினர்.

மாவீரன் முத்துக்குமார் உயிர் நீத்த, சென்னை இந்திய அரசின் வருமானவரித்துறை அலுவலகம் அமைந்துள்ள சாலைக்கு முத்துக்குமாரின் பெயரை வைக்க வேண்டுமென வலியுறுத்தி, தமிழர் எழுச்சி இயக்கத்ன் ஒருங்கிணைப்பாளர் தோழர் வேலுமணி தலைமையில் சாஸ்திரி பவனை முற்றுகையிடும் போராட்டம் இரண்டாம் ஆண்டாக இவ்வாண்டும் நடந்தது. காவல்துறை போராட்டத்தில் ஈடுபட்ட 30 தோழர்களை கைது செய்து மாலை விடுவித்தது.

நேற்று மாலை சென்னை திரு.வி.க. நகரில், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நினைவஞ்சலிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், இயக்க ஒருங்கிணைப்பாளர் திரு. பழ.நெடுமாறன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பெ.தி.க. தலைவர் கொளத்தூர் தா.செ.மணி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னணித் தலைவர் தோழர் சி.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு நினைவேந்தல் உரையாற்றினர்.

## தஞ்சை

தஞ்சை செங்கிப்பட்டியில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியினரால் நிறுவப்பட்டுள்ள மாவீரன் முத்துக்குமார் சிலைக்கு நாள் முழுவதும், தஞ்சை, திருச்சி, சிதம்பரம் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்த வந்த த.தே.பொ.க. மற்றும் தோழமை அமைப்புத் தோழர்களும், உணர்வாளர்களும் மலர் மாலைகள் அணிவித்து வீரவணக்கம் செலுத்தினர். நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும், முத்துக்குமார் சிலை அமைக்க தனது நிலத்தை இலவசமாக வழங்கி நின்ற புலவர் இரத்தினவேலவர் முன்னின்று மேற்கொண்டார். பங்கேற்றத் தோழர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது. மாலையில் எழுச்சியான கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

## ஒசூர்

ஒசூரில் தமிழ்த் தேசப் பொதுவடைமைக் கட்சி சார்பில் மாவீரன் முத்துக்குமார் உள்ளிட்ட ஈகியருக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் வீரவணக்க சுடரோட்டமும், நினைவேந்தல் பொதுக்கூட்டம் சிறப்பாக நடந்தேறியது. தமிழக கர்நாடக எல்லையான அத்திப்பள்ளியில் மாலை 4.30 மணிக்கு தொடங்கிய சுடரோட்ட நிகழ்வில், தோழர் ஸ்டாலின் சுடரேந்திவர, திரளான த.தே.பொ.க. தோழர்களும், நிகரன், மெய்யறிவு, அகஸ்டின், வெண்ணிலா உள்ளிட்ட குழந்தைகளும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

சுட்ரோட்டத்தை தோழர் இரவீந்தரன் தொடக்கி வைத்தார். மகளிர் ஆயம் செயலாளர் தோழர் கண்மணி உள்ளிட்ட பெண் தோழர்கள் முன்னிலை வகித்தனர். முழக்கங்கள் எழுப்பியவாறு சற்றொப்ப 9 கிலோ மீட்டர் தொலைவு நடைபெற்ற இச்சுடரோட்ட நிகழ்வு ஒசூர் நகரில் முத்துக்குமாரின் ஈகம் குறித்த விரிவான பரப்புரையாக அமைந்தது. ராம் நகரில் நிறைவடைந்த சுடரோட்ட சுடரை தென்னிந்திய நுகர்வோர் பாதுகாப்புக் கவுன்சில் செயலாளர் திரு. இராம்குமார் பெற்றுக் கொண்டார். அங்கு நடந்த நினைவேந்தல் பொதுக் கூட்டத்திற்கு, ஓசூர் த.தே.பொ.க. நகரச் செயலாளர் தோழர் இரமேசு தலைமை தாங்கினார். த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கோ. மாரிமுத்து, பெரியார் திராவிடர் கழக மாவட்டத் தலைவர் தோழர் பழனி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். நிறைவில், தோழர் முருகப்பெருமாள் நன்றி நவின்றார்.

## குடந்தை

குடந்தையில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில், ஈகியருக்கு வீரவணக்க நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டது. இன்று காலை குடந்தை மேலக்காவிரி அருகில் நடைபெற்ற இந்நிகழ்வில், த.தே.பொ.க. குடந்தை நகரச் செயலாளர் தோழர் விடுதலைச் சுடர், குடந்தைத் தமிழ்க் கழக அமைப்பாளர் தோழர் பேகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

## ஈரோடு

ஈரோடு கருங்கல்பாளையத்தில், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில், மாவீரன் முத்துக்குமார் உள்ளிட்ட ஈகியருக்கு வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது. த.தே.பொ.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் தோழர் ஈரோடு வெ.இளங்கோவன் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார். தோழர் பார்த்திபராசன் தலைமை தாங்கினார். தோழர் தமிழ் வரவேற்புரையாற்றினார். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட முத்துக்குமார் நிழற்படத்திற்கு தோழர்கள் மலர் மாலை அணிவித்து, வீரவணக்க முழக்கங்களை எழுப்பினர். த.தே.பொ.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் தோழர் இராசையா, தோழர் நீரன் ஆகியோர் ஈகியரை நினைவுகூர்ந்து வீரவணக்க உரையாற்றினார்.

## பவானி - ஒருச்சேரி

பவானி நகரம் ஒருச்சேரியில், தமிழக இளைஞர் முன்னணி சார்பில் மாவீரன் முத்துக்குமார் உள்ளிட்ட ஈகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது: த.இ.மு. கிளைச் செயலாளர் தோழர் ம.பழனிச்சாமி முன்னிலையில், தோழர் சின்னராசு தலைமையேற்க ஈழவிடுதலைக்காக சிறை சென்ற தமிழச்சி தாயம்மா மலர் தூவி ஈகியருக்கு மரியாதை செலுத்தினார். இலக்கியத் தளம் அமைப்பின் தோழர் பகலவன் சிறப்புரையாற்றினார். நிறைவில் தோழர் சேகர் நன்றி கூறினார். பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட ஊர் பொது மக்கள் இதில் திரளாக கலந்து கொண்டனர்.

## மதுரை

மதுரை செல்லூரில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் மாவீரன் முத்துக்குமார் உள்ளிட்ட ஈகியருக்கு வீரவணக்க நிகழ்வு நிடைபெற்றது. த.தே. பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் அ.ஆனந்தன் தலைமை தாங்கினார்.

## திருச்செந்தூர்

திருச்செந்தூரில் நாம் தமிழர் கட்சியின் இளைஞர் பாசறை சார்பில் நடக்கும் வீரவணக்கக் கூட்டத்தில் கட்சித் தலைவர் இயக்குநர் சீமான் வீரவணக்க உரை நிகழ்த்தினார்.

## காட்டுமன்னார்கோயில்

காட்டுமன்னார் கோயில் பேருந்து நிலையம் அருகில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் இன்று மாலை ஈகியருக்கு வீரவணக்க பொதுக்கூட்டம் நடக்கிறது. த.தே.பொ.க. செயலாளர் தோர் சிவ.அருளமுதன் உள்ளிட்டோர் இதில் உரையாற்றுகின்றனர்.

இதே போன்று, தமிழகமெங்கும் பல்வேறு அமைப்புகள் பல்வேறு பகுதிகளிலும் வீரவணக்க நிகழ்வுகள் எழுச்சியுடன் நடந்தன. ஈழத்தமிழர்களுக்காக உயிரீகம் செய்த அம்மாவீரர்களின் ஈகம் வீண்போகாது என்பதையே இது உணர்த்துகின்றது.

# தென்கிழக்காசிய நாடுகளில் இடர்படும் 5000 ஈழத்தமிழ் அகதிகள்

புகலிடம் கோரி இடைவழியில் நிற்கும் தமிழ் மக்கள் மீளவும் தமது இடங்களிற்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளதுடன், இவர்கள் தற்போது உள்ள நாடுகளில் தொடர்ந்து தங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படவில்லை என மற்றாசால் எழுதப்பட்ட 42 பக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கனடாவில் உள்ள வின்னிபெக் [Winnipeg] என்ற நகரத்தைச் சென்றடைய வேண்டும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கும் குடும்பங்கள் உட்பட இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் தமது பயணத்தைத் தொடர முடியாது, இடைவழியில் இடர்படும் ஆயிரக்கணக்கான சிறிலங்கா அகதிகளிற்கு உதவுவதில், அனைத்துலக நாடுகளிற்கும் பயணம் செய்து உண்மைநிலையைக் கண்டறியும் வின்னிபெக்கின் மனித உரிமை சட்டவாளரான டேவிட் மற்றாஸ் [ஞிணீஸ்வீபீ விணீமீ ணீவ] முயற்சித்து வருகிறார். "நீங்கள் ஏதாவது புதிதாகச் செய்ய வேண்டும் என நினைத்தால், முதலில் உங்களது பிள்ளைகளை சிறைகளிலிருந்து வெளியில் எடுத்து அவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் என்பதையே நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்" என 5000 வரையான தமிழ் மக்கள் தமது பயணத்தைத் தொடர முடியாது இடைவழியில் தரித்து நிற்கும் தென்கிழக்காசிய நாடுகளிற்கான தனது பயணத்தை நிறைவு செய்து கொண்டு தற்போது திரும்பியுள்ள சட்டவாளரான மற்றாஸ் தெரிவித்துள்ளார். "இது மிக இலகுவானது, வெளிப்படையானது, அதிக செலவில்லாதது. இது ஒரு புரட்சிகரமான சிந்தனையல்ல" என தனது நண்பரும் வின்னிபெக்கைச் சேர்ந்தவரும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினருமான சாம் ரட்ணாவுடன் இச்சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட சட்டவாளர் மற்றாஸ் தெரிவித்துள்ளார். இவர்கள் இடம்பெயர்ந்த 200,000 மக்களிற்கான பாதுகாப்பான நிரந்தர இடத்தைக் கண்டறியும் முயற்சியில் இறங்கியுள்ளனர். புகலிடம் கோரி இடைவழியில் நிற்கும் தமிழ் மக்கள் மீளவும் தமது இடங்களிற்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளதுடன், இவர்கள் தற்போது உள்ள நாடுகளில் தொடர்ந்து தங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படவில்லை என மற்றாசால் எழுதப்பட்ட 42 பக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கனடாவின் மாநிலங்களில் ஒன்றான மனிற்றோபாவிற்குச் செல்வதற்காக மலேசியாவில் காத்திருக்கும் நான்கு குடும்பங்களில் ஒரு குடும்பத்தவர்களை இவர்கள் சந்தித்தனர் "கனடாவிற்கு நாங்கள் எப்போது செல்ல முடியும்?" என அவர்கள் தம்மிடம் வினவியதாக ரட்ணா தெரிவித்தார். அன்ரன், தேவகி யோகேந்திரன் மற்றும் பாடசாலை செல்ல வேண்டிய வயதை அடைந்த இரு மகள்மார் ஆகியோர் இரு ஆண்டுகளுக்கு முன்னர் சிறிலங்காவை விட்டு புலம்பெயர்ந்திருந்தனர். ஆனால் இவர்கள் தாம் சென்றடைய வேண்டிய நாட்டிற்குச் செல்ல முடியாது மலேசியாவில் தற்போது தங்கியுள்ளனர். சிறிலங்காவில் கட்டுமானத் துறையில் பணிபுரிந்த அன்ரன் தற்போது தனது குடும்பத்தவர்களைக் காப்பதற்காக அரைச் சம்பளத்தில் வாகனத் திருத்தகம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறார்.

"இவர்கள் சட்ட ரீதியற்ற முறையிலேயே வேலை செய்ய வேண்டியுள்ளது. அகதிகள் என்ற நிலையில் மலேசியாவில் உள்ள இவர்கள் சட்ட ரீதியாக வேலை செய்ய முடியாது. ஆனால் இவர்கள் இவ்வாறு வேலைக்குச் செல்லாவிட்டால், இவர்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது" எனவும் அன்ரன் குடும்பத்தைச் சந்தித்த ரட்ணா தெரிவித்தார்.

"இவ்வாறு சட்ட ரீதியற்ற முறையில் வேலைக்குச் சென்றபோது தான் அந்நாட்டுக் காவற்துறைக்கு அபராதம் செலுத்தியதாக அன்ரன் தெரிவித்திருந்தார். ஆனால் வேலைக்குச் சென்று தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதை விட அவருக்கு வேறு தெரிவுகள் எதுவுமில்லை. மலேசியா அரசாங்கம் தனது நாட்டிலுள்ள அன்ரன் போன்ற அகதிகளுக்கு எந்தவொரு மருத்துவ வசதிகளையும் வழங்கவில்லை" எனவும் ரட்ணா மேலும் சுட்டிக்காட்டினார். தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றியே கவலைப்படுவதாக அன்ரன் தன்னிடம் குறிப்பிட்டதாக ரட்ணா தெரிவித்துள்ளார். "இவர்களது இரு மகள்மாரும் பாடசாலைக்குச் செல்வதில்லை. இவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் பாடசாலை இல்லை. அன்ரனின் இரு மகள்மாரும் வீட்டிலேயே தங்கியுள்ளனர். பெற்றோர்கள் தம்மால் இயன்றளவு தமது பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க முயற்சிக்கிறார்கள்" எனவும் ரட்ணா குறிப்பிட்டுள்ளார். ரட்ணா மற்றும் மற்றாஸ் ஆகிய இருவரையும் சந்தித்து, நல்ல செய்திகளைக் கேட்க முடியும் என்ற நம்பிக்கையில் மலேசியாவில் காத்திருந்த 800 தமிழ் அகதிகளில் யோகேந்திரன் குடும்பமும் ஒன்றாகும். "இது என்னுடைய கைகளில் இல்லை என்பதை நான் அந்த மக்களிடம் எடுத்துக் கூறினேன். இது குடியேற்றுவதுடன் தொடர்புபட்ட ஒன்றாகும் எனவும் நான் அவர்களிடம் எடுத்து விளக்கினேன்" என ரட்ணா தெரிவித்துள்ளார். தடுத்து வைக்கப்பட்டுள்ள பல நூற்றுக்கணக்கான அகதிகளுடன் ரட்ணா மற்றும் மற்றாஸ் ஆகிய இருவரும் கலந்துரையாடினர். அத்துடன் மனித உரிமை அமைப்புக்கள், ஐ.நா அகதிகளுக்கான உயர் ஆணையகத்தின் அதிகாரிகள் ஆகியோருடனும் இவ்விருவரும் தமிழ் அகதிகள் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறினர். சிறிலங்காவில் மனித உரிமை மீறல்கள் நடந்திராவிட்டால், தமிழ் மக்கள் தமது. சொந்த இடங்களுக்கு சென்றிருக்க முடியும் என மற்றாஸ் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கனேடிய அரசாங்கம் தனது அதிருப்தியை ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் அடுத்த ஆண்டில் சிறிலங்காவில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்புக்களின் மாநாட்டை புறக்கணிப்பதாகவும் கனேடிய அரசாங்கம் அறிவித்திருந்தது. 2009ல் நிறைவுக்கு வந்த சிறிலங்காவின் உள்நாட்டுப் போரில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கான பொறுப்பை அந்நாட்டு அரசாங்கம் ஏற்க மறுத்துள்ளது. ஆனால் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது ஊடகவியலாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவை யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் பணிபுரிவதற்கான அனுமதியை சிறிலங்கா அரசாங்கம் வழங்கவில்லை. யோகேந்திரன் குடும்பத்தைச் சேர்ந்த செறின், அன்ரோலினா ஆகிய இருவரைப் போல பாடசாலைக்குச் செல்லும் பராயத்தை அடைந்தும் கல்வியைப் பெற முடியாது இடைவழியில் தவிக்கும் பிள்ளைகளும் அவர்களது குடும்பங்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என மற்றாஸ் தெரிவித்துள்ளார்.



மலேசியாவைப் பொறுத்தளவில் இது மிகவும் இலகுவானதெனவும், ஏனெனில் இங்கு மொழிப் பிரச்சினை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலேசியாவில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்வதுடன், தமிழ் மொழி கற்பிக்கப்படும் 500 பாடசாலைகள் உள்ளன. "ஆனால் அகதிகளாக உள்ள தமிழ் பிள்ளைகள் இப்பாடசாலைகளில் கற்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது" என்வும் மற்றாஸ் குறிப்பிட்டுள்ளார். து தொடபாக இவரால் எழுதப்பட்ட அறிக்கையை பெப்ரவரி 16 அன்று ரொரன்ரோவில் நடைபெறவுள்ள மாநாட்டில் மற்றாஸ் வழங்கவுள்ளார்.

டேவிட் மற்றாசால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையிவ் பின்வரும் முக்கிய பரிந்துரைகள்ள உள்ளடக்கப்பட்டுள்ளன:

01. சிறிலங்கா அரசாங்கமானது சிறுபான்மைத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள பாரபட்சம், சித்திரவதை மற்றும் அடக்குமுறை போன்றவற்றை நிறுத்த வேண்டும்.

02. சிறிலங்கா அரசாங்கமானது தனது நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் மற்றும் மீளிணக்கப்பாட்டு முயற்சிகளை மேற்கொள்ளும் வரை, 2013 ல் சிறிலங்காவில் நடைபெறவுள்ள பொதுநலாவாய அமைப்பின் உச்சி மாநாட்டைப் புறக்கணிப்பதில் கனடாவுடன், ஏனைய அனைத்து உறுப்பு நாடுகளும் ஒன்றிணைய வேண்டும்.

03. இந்தோனேசியா அரசாங்கம் அகதிகள் சாசனத்தில் கையொப்பமிட வேண்டும். அத்துடன் பிள்ளைகள் மற்றும் அவர்களது பெற்றோரை தடுத்து வைக்காதிருப்பதற்கான கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

04. பதிவு செய்யப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய இரு நாடுகளிலும் பணிபுரிவதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும்.

05. மீள்குடியேற்றுவதாக உறுதியளித்த மலேசியாவில் உள்ள 4000 அகதிகளை அவுஸ்திரேலியா அரசாங்கம் உடனடியாக மீள்குடியேற்ற வேண்டும்.

06. கனேடிய அரசாங்கம் நாடாளுமன்றிலிருந்து ஙிவீநீ சி4 ஐ நீக்க வேண்டும். சட்ட ரீதியற்ற வகையில் ஆட்கடத்தல் செய்கின்றவர்களைத் தண்டிப்பதற்காகவே கனடாவின் குடிவரவு முறைமையில் குழப்பத்தை உண்டுபண்ணும் ஆட்கடத்தல் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இதன் கீழ் சிறுவர்கள் உட்பட புகலிடக் கோரிக்கையாளர்கள் பலர் எவ்வித விசாரணைகளுமின்றி சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆகவே இவ்வாறானவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட வேண்டும். 07. அத்துடன் அகதிகளை தனிப்பட்ட ரீதியில் பொறுப்பேற்பதற்கான கட்டுப்பாடுகள் தொடர்பில் கனேடிய அரசாங்கமானது 2012ல் தளர்வைக் கொண்டு வரவேண்டும். ●



## திரைக்கதிர்

## தீவிர ரசிகரான தொழிலதிபருடன் அனன்யா நிச்சயதார்த்தம் - கேரளாவில் நடந்தது!

நாடோடிகள் படம் மூலம் அறிமுகமான நடிகை அனன்யாவுக்கும், அவரது தீவிர ரசிகரும் தொழிலதிபருமான ஆஞ்சநேயாவுக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.நான்கு ஆண்டுகளுக்கு முன் மலையாளத்தில் அறிமுகமானவர் நடிகை அனன்யா. திருச்சூரைச் சேர்ந்தவர். சமீபத்தில் வெளியான எங்கேயும் எப்போதும் படத்தின் வெற்றி மூலம், தமிழில் இவருக்கு நிறைய வாய்ப்புகள் வர ஆரம்பித்தன.இந்த நேரத்தில் கேராளவை சேர்ந்த தொழில் அதிபர் ஆஞ்சநேயனுடன் அவருக்கு காதல் ஏற்பட்டது. அனன்யாவின் தீவிர ரசிகராக ஆஞ்சநேயன் தினமும் அவரை பின்தொடர்நது சென்று காதலை வெளிப்படுத்தி திருமணத்துக்கு சம்மதிக்க வைத்துள்ளார்.அனன்யாஆஞ்சநேயன் திருமண நிச்சயதார்த்தம் கேரள மாநிலம் திருச்சூரில் நடந்தது. நெருங்கிய உறவினர்கள் மட்டும் இதில் பங்கேற்றனர்.திருமணம் விரைவில் நடக்க உள்ளது. மலையாளம் மற்றும் தமிழில் ஓரளவு படங்களை கையில் வைத்துள்ளார் அனன்யா. திருமணத்துக்கு பின்னும் சினிமாவில் நடிக்கப் போவதாக கூறியுள்ளார்.



## பிரபல பாடகி எஸ் ஜானகி குளியலறையில் வழுக்கி விழுந்ததில் காயமடைந்தார்



உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். அவருக்கு ஆபத்து ஒன்றுமில்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர். திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க சென்றிருந்தார் ஜானகி. 73 வயதான அவர் காலையில் தரிசனத்தை முடித்துக் கொண்டு தங்கியிருந்த ஹோட்டலுக்கு திரும்பினார். இன்று காலை அவர் குளியல்றை சென்றபோது வழுக்கி விழுந்தார்.உடனடியாக திருப்பதியில் உள்ள வெங்கடேஸ்வரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். இப்போது அவர் உடல்நிலை நன்றாக உள்ளதாக அவரது மகன் தெரிவித்தார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, ஒரியா, மராத்தி என இந்தியாவின் பல்வேறு மொழிகளில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களைப் பாடி புகழ்பெற்றவர் ஜானகி. தேசிய விருது வென்றவர்.

## எனக்கு நேரஞ் செரியில்ல...! - வடிவேலு



எல்லோருக்குமே நேரம் சரியாக அமைய வேண்டும். இப்போதைக்கு எனக்கு நேரஞ் செரியில்ல... அரசியல் பத்தி எதுவும் பேதிங்க!, என்று கேட்டுக் கொண்டார் நடிகர் வடிவேலு.

விஜயகாந்தும், வடிவேலுவும் சட்டமன்ற தேர்தலுக்கு முன் மிகக் கடுமையாக மோதிக்கொண்டனர். இதையடுத்து விஜயகாந்த் கட்சியை எதிர்க்க வடிவேலு தி.மு.க. அணியில் சேர்ந்து பிரசாரம் செய்தார். தேர்தலில் தி.மு.க. தோற்றதால் வடிவேலு நிலைமை மோசமானது. எந்தப் படத்திலும் நடிக்கவில்லை.சிலர் அவரை வைத்து படம் எடுக்க வேண்டாம் என தங்களுக்கு மிரட்டல் வருவதாக சிலர் கூறினர். ஆனால் வடிவேலுவோ நான்தான் ஒதுங்கியிருக்கிறேன், என்றார்.சமீபத்தில் அ.தி.மு.க. வுக்கும், விஜயகாந்துக்கும் தகராறு ஏற்பட்டு உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அ.தி.மு.க.வுடன் சமரசம் ஆகி மீண்டும் சினிமாவில் நடிக்க தீவிரமாக வடிவேலு முயற்சிப்பதாக செய்திகள் வெளியாயின. அ.தி.மு.க.வில் இணையப்போவதாகவும் கிசுகிசுக்கள் வருகின்றன. இதுகுறித்து வடிவேலு கூறுகையில், "என் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்ல. அவரை கவனித்துக் கொள்வதுதான் இப்போது எனக்கு முக்கியம். விரைவில் குணமடைந்து விடுவார் என்ற நம்பிக்கை உள்ளது.நான் முதலில் ஒரு நடிகன். மக்களை சந்தோஷப்படுத்துவதை தொடர்ந்து செய்வேன். இந்தநேரத்தில் அரசியலில் என்னை சம்பந்தப்படுத்தி பேசுவதை நான் விரும்பவில்லை. அரசியலோடு என்னை இணைத்து வெளியாகும் செய்திகளைப் பார்த்தா, கற்பனைக்கு அளவே இல்லைன்னுதான் தோணுது.பொதுவாக எல்லாத்துக்கும் நேரம் முக்கியம். சிலருக்கு அந்த நேரம் சாதகமாக இருக்கும். இன்னும் சிலருக்கு எதிராக இருக்கும். எனக்கு நேரஞ் செரியில்ல. ஆனால் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என்னுடைய கவனமெல்லாம் சினிமாவில் நடிப்பதுதான். அதில்தான் முழு கவனத்தையும் செலுத்துகிறேன்.நான் கதாநாயகனாக ஒரு படத்தில் நடிக்க உள்ளேன். அதுபற்றிய அறிவிப்பு விரைவில் வெளியாகும். இந்த படம் திரையுலகில் எனது மறுபிரவேசத்தை அழுத்தமாக பதிவு செய்யும். வேறு ஒண்ணும் இப்போதைக்கு சொல்வதற்கில்லை," என்றார்.




## வளர்ப்புத் தந்தை, வளர்ப்பு அண்ணனுடன் விபச்சாரத்தில் ஈடுபட்ட நடிகை கரோலின்!!

புனேவில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் விபச்சாரம் செய்ததாக சிக்கியுள்ள தமிழகத்தைச் சேர்ந்த நடிகை கரோலின் குறித்த பரபரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன.புனேவில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் விபச்சாரம் நடப்பதாக புனே காவல்துறையின் சமூக பாதுகாப்புப் பிரிவு (விபச்சாரத் தடுப்புப் பிரிவு)போலீஸாருக்குத் தகவல் கிடைத்தது.இதையடுத்து விரைந்து சென்ற போலீஸார் கரோலின் என்ற 22 வயதுப் பெண்ணையும், ராஜ்குமார் மரியதாசன் என்பவரையும் கைது செய்தனர்.போலீஸ் விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன. கைது செய்யப்பட்ட கரோலினின் முழுப் பெயர் கரோலின் ரஞ்சித் மரியதாசன். இவர் சென்னை சைதாப்பேட்டையைச் சேர்ந்தவர். ஆனால் மும்பை அந்தேரியில் வசித்து வருகிறார். தமிழில் வாடா செல்லம் உள்ளிட்ட 3 படங்களில் நடித்துள்ளார்.அவரது தந்தை ரஞ்சித் சென்னையில் ஒரு போட்டோ ஸ்டுடியோ வைத்துள்ளாராம். ஆனால் இவர் சொந்தத் தந்தை இல்லையாம், வளர்ப்புத் தந்தையாம். இவருடன் சேர்த்துக் கைது செய்யப்பட்ட ராஜ்குமார் மரியதாசன், ரஞ்சித்தின் மகன் ஆவார். இவர் கரோலினின் வளர்ப்பு அண்ணனாக செயல்பட்டு வந்துள்ளார். கூடவே கரோலினின் மேனேஜராகவும் இருக்கிறாராம்.இவர்கள் கூட்டாக இணைந்து கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு புனேவை மையமாக வைத்து விபச்சாரத்தில் குதித்துள்ளனர். எரவாடா என்ற இடத்தில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு அவ்வப்போது கஸ்டமர்களுடன் தங்கிச் செல்வாராம் கரோலின். இவரது தந்தைதான் கோ ஆர்டினேட்டராக செயல்பட்டு வந்துள்ளார். கரோலின் தேவை என்றால் இவரை அணுக வேண்டுமாம். அவர் புனேவில் உள்ள அந்த ஹோட்டலுக்கு கரோலினையும், துணைக்கு ராஜ்குமாரையும் அனுப்பி வைப்பாராம். இரண்டு மணி நேரத்திற்கு ரூ. 2 லட்சம் கட்டணம் வசூலித்து வந்துள்ளனர்.அந்த ஹோட்டலில் இரண்டு அறைகள் போட வேண்டுமாம். ஒரு அறை கரோலினும், ராஜ்குமாரும் தங்குவதற்காம். இன்னொரு அறையில் வாடிக்கையாளருடன் உல்லாசமாக இருக்கவாம்.பல விளம்பரப் படங்களிலும் நடித்துள்ளாராம் கரோலின். ஆனால் திரைப்படத்தில் இவருக்கு சரியான பிரேக் கிடைக்கவில்லை. மேலும் பணப் பற்றாக்குறையும் ஏற்படவே விபச்சாரத்தில் குதித்ததாக தெரிகிறது.

# 'எழுத்துலகுக்கு மிகப் பெரிய உதவியை செய்திருக்கிறார் ரஜினி'

மனுஷ்யபுத்திரன்



இன்றைக்கு பெரிய எழுத்தாளரைப் பற்றி கூட நிறைய பேருக்கு தெரிவதில்லை. உலகமறிந்த சூப்பர் ஸ்டாரான ரஜினி ஒரு இலக்கிய விழாவில் பங்கெடுத்து, எழுத்தாளர்களின் பணியைப் பற்றி பேசும்போது, அதற்கு கிடைக்கிற மரியாதையும் கவனமும்தான் மிக முக்கியம். அந்த வகையில் இலக்கிய உலகுக்கு ரஜினி மிகப்பெரிய உதவியைச் செய்திருக்கிறார், என்று கவிஞர் மனுஷ்யபுத்திரன் கூறியுள்ளார். எஸ் ராமகிருஷ்ணனுக்கு நடந்த பாராட்டு விழாவில் ரஜினி பங்கெடுத்ததை விமர்சித்து, நடிகரை வைத்து இலக்கியம் வளர்ப்பதா என சிலர் 'அரசியல்' பேசி வரும் நிலையில், ரஜினி பங்கேற்பு குறித்து பாஸிடிவாக பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

எஸ் ராமகிருஷ்ணன் விழாவில் ரஜினி பேசும்போது, "நான் எஸ்எஸ்எல்சிதான் படிச்சிருக்கேன். ஆனா வேற புத்தகங்கள் நிறைய படிச்சேன். அவைதான் இன்னிக்கு வரைக்கும் என் வாழ்க்கல ரொம்ப உதவியா இருக்கு. ...எழுத்தாளர்கள் கஷ்டப்படக் கூடாது. நாம் படைப்பாளிகளை நன்றாக வைத்திருந்தால், அவர்கள் பல நல்ல படைப்புகளை தந்து கொண்டே இருப்பார்கள். படைப்பாளி கஷ்டப்படக்கூடாது. அவர்களை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல சூழலில் இருக்க நாமெல்லாரும் துணை நிற்க வேண்டும்," என்றதோடு, இளைஞர்களை புத்தகங்கள் வாங்கிப் படிக்கும்படி கேட்டுக் கொண்டார் ரஜினி. புத்தகச் சந்தையில் விற்பனை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவதைச் சுட்டிக் காட்டி, இது தனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த நிலை தொடரணும், என்றார் ரஜினி."ஒரே ஒரு வார்த்தை சொன்னாலும் மக்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆளுமை கொண்ட ரஜினி இப்படிப் பேசியிருப்பது, மிக முக்கியமானது. இளைஞர்களிடையே பெரும் மாறுதல்களை ஏற்படுத்தக் கூடியது. இந்த நிலையை எழுத்தாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நல்ல பயனுள்ள புத்தகங்களைத் தரவேண்டும்," என இலக்கியவாதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### புதிய வாசகர்களை ஈர்க்கும்...

இதுகுறித்து, அன்றைய விழாவில் பங்கேற்ற பேராசிரியர் கு ஞானசம்பந்தன் கூறுகையில், "இளைஞர்கள் நிறைய படிக்கணும்னு சூப்பர் ஸ்டார் சொல்லியிருக்கார். ரஜினி அன்றைக்கு அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதன் மூலம் இலக்கிய உலகுக்கே தனி கவன ஈர்ப்பு கிடைச்சிருக்கு. தன்னுடைய அலுவல்களுக்கிடையில், ஒரு எழுத்தாளனைக் கவுரவிக்க அவர் வந்தது அவர் எந்த அளவு பெருந்தன்மை, நேர்மையாளர் என்பதைக் காட்டுகிறது. தீவிர இலக்கியத்தை நோக்கி பல புதிய வாசகர்களை ரஜினியின் வார்த்தை ஈர்க்கும் என்று நம்பிக்கை பிறந்திருக்கிறது," என்றார்.

### ரஜினி செய்திருக்கும் பெரிய உதவி...

கவிஞர் மனுஷ்யபுத்திரன் கூறுகையில், "இன்றைக்கும் பல புகழ்பெற்ற எழுத்தாளர்களைப் பற்றி பெரும்பான்மை தமிழ் மக்கள் தெரிந்து கொள்ளாமல்தான் உள்ளனர். உலகமறிந்த பெரும் புகழுக்குச் சொந்தக்காரரான ரஜினி இந்த இலக்கிய விழாவில் பங்கெடுத்து, எழுத்தாளர்களின் பணியைப் பற்றி பேசும்போது, அதற்கு கிடைக்கிற மரியாதையும் கவனமும்தான் மிக முக்கியம். அந்த வகையில் சூப்பர் ஸ்டார் ரஜினி மிகப்பெரிய உதவியைச் செய்திருக்கிறார் இந்த இலக்கிய உலகுக்கு," என்றார்.

### எழுத்தாளர்களை மதிப்பவர்...

எஸ் ராமகிருஷ்ணன் கூறுகையில், "ரஜினி அவர்கள் எப்போதுமே எழுத்தாளர்களையும் அவர்களது எழுத்துக்களையும் மதிப்பவர். அவர்கள்' தன்னைப் பற்றி என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள் என்று தனிப்பட்ட முறையில் எதையும் கவலைப்படாத பெருந்தன்மையானவர். பல எழுத்தாளர்களை தன் வீட்டுக்கே வரவழைத்து பேசுவது அவருக்குப் பிடித்தமானது. இந்த இயல் விருது பாராட்டு விழா என்பதே அவரது முயற்சிதான்," என்றார்.

# ஜீவனாம்சம்: டான்ஸ் மாஸ்டர் சுந்தரம் மீது வழக்குத் தொடர தாராவுக்கு ஆலோசனை!



**சென்னை:** ஜீவனாம்சம் கேட்டு டான்ஸ் மாஸ்டர் சுந்தரத்துக்கு எதிராக டான்ஸ் மாஸ்டர் தாரா தாக்கல் செய்த முறையீடு தொடர்பாக, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாம் என்று தாராவுக்கு சமரச மையம் ஆலோசனை வழங்கியுள்ளது.நடிகர் பிரபுதேவா நடிகை நயன்தாரா காதல் விவகாரம் சில மாதங்களாக பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. அவர்கள் விவகாரம் குடும்பநல நீதிமன்றம் வரைக்கும் வந்தது. இன்னும் புகைந்து கொண்டுதான் இருக்கிறது. பைனலாக 'செட்டில்' ஆகவில்லை.

இந்த நிலையில் நடிகர் பிரபுதேவாவின் தந்தையான டான்ஸ் மாஸ்டர் சுந்தரம், திருமணத்துக்கு முன்பு செய்த லீலைகள் வெளிவந்துள்ளன.

தன்னை காதலித்து கர்ப்பிணியாக்கி, பின்னர் திருமணமும் செய்து கொண்ட சுந்தரம், பின்னர் ஏமாற்றிவிட்டுப் போய் வேறு பெண்ணை திருமணம் செய்துகொண்டதாக டான்ஸ் மாஸ்டர் தாரா முறையிட்டிருந்தார்.2 மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக்குழு கட்டிடத்தில் நடத்தப்படும், சமரச தீர்வு மையத்தில் தாரா இந்தப் புகாரைக் கொடுத்தார். அது சில தினங்களுக்கு முன்புதான் மீடியா வெளிச்சத்துக்கு வந்தது.தன்னையும் தனது மகனையும் கடந்த பல ஆண்டுகளாக சுந்தரம் பராமரித்து வந்தார் என்றும் தற்போது குடும்பத்தை நடத்துவதற்கு நிதியுதவி செய்வதில்லை என்றும் புகார் மனுவில் தாரா கூறியுள்ளார். மேலும், தொடர்ந்து குடும்பத்தை பராமரிப்பதற்காக ஜீவனாம்சம் தர உத்தரவிட வேண்டும் என்றும் அதில் கோரியுள்ளார்.

இந்த மனு தொடர்பான விசாரணைக்காக ஆஜராகும்படி சுந்தரத்துக்கு பலமுறை சமரச தீர்வு மையம் நோட்டீஸ் அனுப்பியது. ஆனால் நோட்டீஸ் அடிப்படையில் அவர் ஆஜராகவில்லை. அதைத் தொடர்ந்து தாராவுக்கு சமரச தீர்வு மையம் ஆலோசனை வழங்கியது. இந்த புகார் மனுவை வழக்காக சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிவாரணம் பெறலாம் என்று தாராவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கைவசம் எக்கச்சக்க ஆதாரங்கள் இருப்பதால் விரைவில் வழக்கு தொடரப் போகிறாராம் தாரா.



# அரசியலுக்கு வர எனக்கு எந்த தகுதியும் கிடையாது : அஜித் அதிரடி பேட்டி!

எனக்கு சினிமா மட்டும் தான் தெரியும், அரசியல் தெரியாது. அரசியலுக்கு வர எனக்கு எந்த தகுதியும் கிடையாது நடிகர் அஜித் அதிரடியாக கூறியிருக்கிறார். தற்போது பில்லா2 படத்தில் பிஸியாக இருக்கும் அஜித், எதிர்காலத்தில் அரசியலுக்கு வரும் எண்ணம் இருக்கிறதா என்ற கேள்விக்கு பதிலளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், தமிழ்நாட்டுல ஏற்கனவே நிறைய அரசியல்வாதிங்க இருக்காங்க. இதுல அரசியலே என்னவென்று தெரியாத நிலையில், அரசியல பத்தி முழுசா புரிஞ்சுக்காம, வெறும் சினிமா பாப்புலாரிட்டியை மட்டும் வைத்து நான் எப்படி அரசியலில் இறங்குவது. நிச்சயம் நான் அப்படி செய்ய மாட்டேன். எனக்கு தெரிஞ்சதெல்லாம் சினிமா மட்டும் தான். தெரிஞ்ச சினிமாவை விட்டு தெரியாத அரசியலில் இறங்கி, மக்களையும் குழப்ப மாட்டேன். அரசியலுக்கு வரும் எந்த தகுதியும் எனக்கு சுத்தமா கிடையாது என்று கூறியுள்ளார்.

Age 10-14(KS3)

# Maths, Science, English



Lectures:
**D.V.Palanivell**
FDSRCS(England)

**Aim: To enter the top GCSE class when they reach age 15.**

GCSE Classes, A,B,C,D,E ,F: Teachers will pay more attention to A and B class. Sending to Top A and B class depends on the age 14 test. For that you focus your learning from the age Of 11 onwards.



**I also will teach Interview skills, oratory skills and Presentation to peers and employers**

## Where?

Eastham / Manor Park • 6pm-9pm Fridays
£20 for 3 hours



This is not a one to one tution.Students get bored of one to one.I will have about 50 to100 students in a lecture hall in eastham/Manor Park. I will give lectures like a university professor.I will do science practicals And make children to analyse the results. Portfolio development and science investigations Maths: I will go deeper and deeper and expect to sit for GCSE as private candidates at 14 and expect "A"pass. (For the serious student)Debate between groups promoted. English: I will concentrate on comprehension,grammer,essays and poetry

## Careers : Guidance starts early as 12+age

There are about 20 careers I will go deeply and help students and parents to choose.When children reach 17+,I will help them to enter doctor,vet,barrister,civil, electronic,mechanical,.and chemical engineer degrees,ICMA accountant,plant pathologist,Marine biologist,architect,charted surveyors.There are about 50 careers I will prepare your children.It is their choice.If you don't get first class honours? When free time available I will coach them via the email religious studies,information technology,history and geography.

A B.Sc teacher unless he had 3A in science and maths,you can leave uni with 40 marks average and still become a teacher and start ruin the life of thousands of innocent children and parents who end up getting

**Heart attack at 45 ! Dads work overtime to pay for tution fees.Stress...Stressss !**



**How to apply**

(1) Full name........................................
(2) Age............ (3) Date of birth........................
(4) Parent/Guardian name........................................
(5) full address............................................
.................................................................................................
(6) send 3passport size photos with application form
(7) email......................................................
(8). Tel :..........................................................
**D.V.Palanivell, 79, Meadfield road, Langley, Slough, Berkshire SL3 8HY.**
Send cheque for first 4 lectures (£80)and post it to:
Write the childs name, dob, address at the back of the cheque.

**07506153885** dvpalanivell@ gmail.com